www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

வென்றிடுமோ வேறு வழி ?

மண்டையிலே போடல் மண்ணுள்ளே 'டம்' பண்ணல்
தொண்டைக் குழியோடு சுதந்திரத்தை - திண்டுவிடல்
என்று வளர்த்தோம் நாம் எம்மினிய அரசியலை
வென்றிடுமோ வேறு வழி?

-ஈழ மோகம்

இதழ் 127 | ஜூலை 31 - ஓகஸ்ட் 13, 1997 | விலை 10/=

### நம்பிக்கைச் சித்திரம்

என்னிடம் ஒரு வர்ணப்பெட்டி இருந்தது
ஜொலித்துக் கொண்டு, தூக்கலாக.
என்னிடம் ஒரு வர்ணப்பெட்டி இருந்தது
சில சூடாக, சில சில்லிட்டுப் போய்.

அந்தக் காயங்களின் இரத்தத்தை வரைய
என்னிடம் சிவப்பு இருக்கவில்லை.
அந்த ஆதரவற்றவளின் துக்கத்தை தீட்ட
என்னிடம் கறுப்பு இருக்கவில்லை.
அந்த செத்த முகங்களுக்கு உருக்கொடுக்க
என்னிடம் வெள்ளை இருக்கவில்லை.
அந்த தகித்துக் கொண்டிருந்த மணல்களை விபரிக்க
என்னிடம் மஞ்சள் இருக்கவில்லை.


ஆனால் என்னிடம் ஆரஞ்சு இருந்தது
வாழ்க்கையின் ஆனந்தத்தை பிழிந்து காட்ட.
என்னிடம் நீலம் இருந்தது
தெளிந்த வானத்தை பிரதிபலித்துக்காட்ட.
என்னிடம் பச்சை இருந்தது
இளம் தளிர்களை படம் பிடித்துக் காட்ட.
என்னிடம் றோஸ் இருந்தது
நம்பிக்கைக் கனவுகளை சித்திரமாக்கிக் காட்ட.

நான் உட்கார்ந்து வரையத்துவங்கினேன்
ச மா தா ன ம்

- ஓர் இலங்கைச் சிறுமி
*(பெயர் தெரியவில்லை
வயது 13)*
*நன்றி: தலைப்புச் செய்திகள்*



# விடுதலைப் புலிகளும் கிழக்கு முஸ்லிம்களும்



## அஷ்ரஃபின் புதிய அரசியல்!



## திருமலை: பறிபோன தலைவர்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சரிநிகர்**

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே"*

-பாரதி

**ஆசிரியர் குழு**

பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**இதழ் தொகுப்பு:**
**எம்.கே.எம்.ஷகீப்**

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
கிம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

## ஒரு பெயரில் பலபேர்!

பிரேமதாச ஆட்சிக் காலத்தில் அனுருத்த தில(க்)கசிறி என்ற பெயரில் ''சண்டே ஒப்சேவர்'' ஆங்கிலப் பத்திரிகையில் ஆரம்பத்தில் கட்டுரைகள் எழுதியவர், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட ''அத்த'' சிங்களப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், பிரபல இடதுசாரி எழுத்தாளருமான சூறத் அம்பலங்கொட என பிரேமதாச மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தயான் ஜயதில(க்)க கூறுகிறார்

தொடர்ந்தும் அவரால் அக்கட்டுரைத் தொடரை எழுத முடியாததால், 1991 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்திலும் அதன் பின்பும் அக்கட்டுரை திசரணி குணசேகர என்ற எழுத்தாளரினாலேயே எழுதப்பட்டது. தயான் ஜயதில(க்)கவும் அதற்காக வழிகாட்டியும், கருத்துத் தெரிவித்தும் அதற்குப் பங்களித்துள்ளார்.

இது தொடர்பாகச் சிங்களப் பத்திரிகையொன்றுக்கு விஷேட கருத்துத் தெரிவித்த திசரணி குணசேகர, அனுருத்ததில(க்)கசிறி என்ற பெயரில் ஆரம்பத்தில் லேக் ஹவுஸ் பத்திரிகைகளுக்குக் கட்டுரை தன்னால் வழங்கப்படவில்லையெனவும், பின்பு தன்னால் எழுதப்பட்ட கட்டுரைகள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆலோசனையின் பேரில் அனுருத்த தில(க்)கசிறி என்ற புனை பெயரில் லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன எனக் கூறினார்.

அதற்காக தயான் ஜயதில(க்)கவின் முழு ஒத்துழைப்பும் கிடைத்ததாகவும் அவர் கூறினார் தமது அக்கட்டுரைகள் அனுருத்த தில(க்)கசிறி என்ற பெயரில் வெளியிடப்பட்டது. ஜனாதிபதி பிரமதாசவின் ஆலோசனையின் படியே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருமதி திசரணி குணசேகர சுயாதீன மாணவர் சங்கத்தின் (I.S.U.வின்) முன்னாள் தீவிர உறுப்பினரும், வி(க்)கல்ப கண்டாயம (மாற்றுக் குழு) அமைப்பின் முன்னாள் உறுப்பினரும், மக்கள் வங்கியினால் வெளியிடப்படும் ''பொருளியல் நோக்கு'' சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரும் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. தயான் ஜய்தில(க்)க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆட்சியில் வட - கிழக்கு மாகாண சபையின் இளைஞர், பொருளாதார விவகார அமைச்சராக இருந்தவர்.

## மக்களைத் தாக்கும் இராணுவம்!

மல்லாகத்தில் புலிகள் தாக்கி 4 படையினர் பலி. உடனும் அவ்விடத்தில் காணப்பட்டவர்கள், வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் வயது வித்தியாசமின்றி படையினரால் தாக்கப்பட்டனர். அதில் ஒரு வயோதிபர் சுடப்பட்டு மரணமானார். வயர்கள், கம்பிகளால் தாக்கப்பட்டனர். சிலர் முகாம் கொண்டு செல்லப்பட்டு இரவிரவாகத் தாக்கப்பட்டனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் இரத்தத்தை குடிக்கவும் சொன்னார்களாம். படையினரால் தாக்கப்பட்ட பதினாறு பேர் யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர்.

இவர்களிடம் ஆஸ்பத்திரி பொலிஸார் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்க பொலிஸாரால் முடியாது. இச்சம்பவத்துக்கு யாழ் நகர படையணியின் 51வது கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். அவர் மன்னிப்புக்கோரிய மறுநாள் கல்வியங்காடு இராசபாதையில் புலிகள் தாக்கி ஒரு சிப்பாய் பலியெனவும், மற்றொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இங்கும் பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களும் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளனர்.

இதே போலவே புத்தூரிலும், பொன்னாலையிலும் புலிகள் தாக்கியவுடன் பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர். இனிமேல் இவ்வாறான சம்பவம் நடைபெறாது எனவும் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் மாலுசந்தி - அல்வாய் என்ற இடத்தில் ஒரு வீட்டில் கள் அருந்தி - இறைச்சி உண்ட படையினர் மீது புலிகள் தாக்கிய போது இதேபோலவே பொது மக்கள் தாக்கப்பட்டனர்.

இது இவ்வாறு இருக்க யாழ் ஆஸ்பத்திரியில் 15 படையினர் இரத்ததானம் செய்துள்ளனர் - வெசாக்கை முன்னிட்டு பொது மக்களுக்கு ஆஸ்பத்திரியில் உணவும் வழங்கினர்.

பாதுகாப்பு படையினர் மக்களுக்கு உதவி, மக்களுடன் நன்கு பழகுகின்றனர் என அரசு கூறிவருகிறது. புலிகள் மக்களுடன் மக்களாக வந்து திடீரென கிறனைட்டை எறிவர் அல்லது கிளைமோர் வெடிக்க வைப்பர். சில இடங்களில் புலிகளை காட்டிக் கொடுக்கும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

மக்களின் 'மனங்களை வெல்லும்' நோக்கத்திற்கும் இந்த சம்பவங்களுக்கும் என்ன சம்பந்தமோ தெரியாது.

## புலிகள் போகிற பஸ்கள்!

கொழும்பு நகரிலுள்ள கொம்பனித்தெரு சேர் ஜேம்ஸ் பீரிஸ் வழி (கங்காராம விஹாரை அருகே), குமார் இரத்தினம் வீதி (றியோதிரை அருகே), மலே வீதி (பரீட்சைத் திணைக்களத்துக்கு அருகே), சேர் சிற்றம்பலம் ஏ.காடினர் வழி (றீகல் படமாளிகைக்கு அருகே), லோட்டஸ் வீதி (ஜனாதிபதி செயலகத்துக்கு அருகே) இவையெல்லாம் வெறும் வீதிகளின் பெயர்களல்ல. கொழும்பு நகரினுள் உள்ள நிரந்தர வீதித் தடைச் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ள இடங்களாகும்.

இச்சோதனைச் சாவடிகள் அமைந்துள்ள வீதி வழியாகச் சென்றுவரும பஸ்களில் இலக்கம் 102, 112 இலக்க பஸ்கள் மட்டுமே அநேகமாகச் சோதனையிடப் படுவதை அவதானிக்க முடிகிறது. 102, 112 இலக்க பஸ்களில் மட்டுமே தமிழ் மக்கள் பெரும்பான்மையாகப் பயணம் செய்வதால் இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

இவ் இலக்க பஸ்களில் மட்டுமே புலிகள் பயணம் செய்வதாகவும், ஏனைய இலக்க பஸ்களில் புலிகள் பயணம் செய்வதில்லையெனவும் இப்படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியவர்கள் யார் என்று தான் தெரியவில்லை.

## மீலாத்: நபிகளுக்கா அஷ்ரப்புக்கா?

''வள்ளலைப் பாடும் வாயால் ஆண்டிசுப்பனைப் பாடுவேனோ?'' என ஒருபாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. பெருமானார் நாமத்தையும், நபிநாயகத்தின் ஸலவாத்தையும் பாட வேண்டிய மீலாத் விழாக் கொண்டாட்டத்தில், அமைச்சர் அஷ்ரஃபுக்கு மானிட புகழாரம் பாடுவதை இலங்கை வானொலி 17.07.1997 மதிய வேளை ஒலிபரப்பியதைக் கேட்டு, அதிர்ச்சியடைந்தேன். வெட்கமடைந்தேன்.

அமைச்சர் அஷ்ரஃப் மட்டுமல்ல, அமைச்சர்கள் அலவிமௌலானாவும், பௌசி அவர்களும் முஸ்லிம் மக்களுக்கு சேவைகளை ஆற்றி வருகிறார்கள் என்பது நன்கு தெரியும். அமைச்சர் மௌலானா அவர்கள் வெகுஜனத் தொடர்பு பிரதி அமைச்சராக இருந்த காலத்தில், வானொலி, தொலைக்காட்சி சேவை நிறுவனங்கள் அவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தும், இப்படியான கவிகளைப் பாடியதில்லை.

நபிகளின் பிறந்த தினத்தை, அரசியல் செயற்பாடுகளுடன் இணைக்காமல் கொண்டாடுவதே முறையாகும். பெருமானார் நபிகள் நாயகத்தின் நாமத்தையே உச்சரித்து, அவரின் போதனைகளை உலக மக்களுக்கு எடுத்துரைப்பதை விடுத்து, தனிமனிதர் அஷ்ரஃப்பிற்கு புகழ் பாடியது, எனக்கு என்னவோ போல் இருந்தது.

**தி.மா.செல்வாராசா**

## லயன் எயார் டைகருடன் பேச்சு!

இலங்கையில், வட பகுதி கடலில், புலிகளினால், சிவில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட கப்பல்கள் இரண்டு கடத்தப்பட்டதன் பின்னர், நிறுத்தப்பட்ட இரத்மலானை - பலாலி 'லயன் எயார்' விமான சேவையை, மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக, அதன் பிரதிநிதிகள், லண்டண் புலிகள் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.

தனியார் விமான சேவையான இவ் விமான சேவை நாளொன்றுக்கு ஐந்து தடவைகள் சேவையிலீடுபட்டிருந்தது.

இவ் விமானங்களை செலுத்தி வந்த உக்ரேன் விமானிகள், சில மாதங்களுக்கு முன் புலிகளின் அச்சுறுத்தலின் பேரில் நாடு திரும்பியுள்ளனர்.

யாழுக்கும், கொழும்புக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கடல், வான் பயணமும் யுத்த இலக்குகளாகக் கருதப்படும் என புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியதன் பின், இவ்விமானச் சேவை ஜூலை 14 ல் இடை நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்போது மீண்டும் இச் சேவையை நடாத்துவதற்காகவே இப் பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

## ஹேமாஸ் தலைவர் கைது!

இலங்கை விமானப் படைக்கு உக்ரேனிலிருந்து ஹெலிகொப்டர் விமானங்களை கொள்வனவு செய்தது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பற்றி விசாரணை செய்ய இரகசியப் பொலிசார், கொழும்பின் பிரசித்திப் பெற்ற வர்த்தகரான ரஞ்சித் தகாநாயக்க அவர்களை கைது செய்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் குடும்ப நண்பராகவும், அதன் மூலம் பாரிய கசினோ வியாபாரத்தை நாடு முழுவதும் அறிமுகப் படுத்தியவருமான 'ஜோசிம்' இன் நண்பரான ரஞ்சித் தகாநாயக்க அவர்கள் ஹேமாஸ் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் தலைவராவார்.

ஹேமாஸ் இன்டர்நெஷனல் நிறுவனம், ஓர் சுற்றுலா சேவை நிறுவனமாகும். அத்துடன், பல்கேரியா விமான சேவையின் இலங்கை பிரதிநிதியுமாகும்.

## இளைஞர் கொலை!

தென்மராட்சி மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகில் 30.06.97 மாலை இளைஞர் ஒருவரை புலிகள் விசாரணைக்காக அழைத்துச் சென்று பின்னர் அவ்விடத்தில் சுட்டுக் கொன்றனர்.

இவர் ஒரு பொலிஸ்காரர் என்றும் சிவில் உடையில், சைக்கிளில் வந்தவர் என்றும் அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அவரை விசாரணை செய்ய கண்ணைக் கட்டி சில யார்தூரம் கொண்டு சென்றதாகவும் நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

**மரியான்**

## 53 இராணுவப் புலி!

கடந்த காலகட்டத்தில் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழ், முஸ்லிம் வீரர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 500 எனவும், அதில் 53 பேர் புலி உறுப்பினர்களாகவோ அல்லது அவர்களுடன் கிட்டிய தொடர்பு கொண்டவர்களாகவோ உள்ளனர் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்தில் சு.க. அலுவலகம்!

*20 வருடங்களுக்குப்பிறகு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ்ப் பாணத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது. இங்கே காணாமல் போனவர்கள், கைதானவர்களின் பெற்றோர், உறவினர்கள் தினமும் வந்து தமது நிலைமையைத் தெரிவிக்கின்றனர்.*

*வேலை வாய்ப்புக்காக பல இளைஞர், யுவதிகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றனர்.*

*பலர் இடமாற்றம் தொடர்பாக கோரிக்கை விடுக்க வருகின்றனர். கணவன் வவுனியாவில், மனைவி யாழ்ப்பாணத்தில், அல்லது குடும்பம் யாழ்பாணத்தில் கணவன் திருக்கோணமலையில். இவர்கள் தாம் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கேட்கின்றனர்.*

*இன்னும் பல பல பிரச்சினைகளுக்காகவும் சுதந்திரக்கட்சியிடம் மக்கள் வருகின்றனர்.*

ரூபன்

## பிரபாவின் குடும்பம் ஐரோப்பாவில் ?

புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனின் மனைவியும், பிள்ளைகள் இருவரும் இரகசியமாக இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த மே மாதம் வன்னி பிரதேசத்தில் ஜயசிக்குறு நடவடிக்கை ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன் இவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இம் மூவரையும் ஐரோப்பிய நாடொன்றுக்கு அழைப்பித்துக் கொள்ளும் பொறுப்பு, புலிகளின் வெளிநாட்டு நிதிப் பொறுப்பாளராகவிருக்கும் கே. பத்மநாதனுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சீரழியும் கல்விப்பணிமனைகள்!

நிருவாகத்தை இலகுவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட பிரதேசக் கல்விப் பணிமனைகள் அதன் நோக்கில் (போக்கில்) செயற்பட்டு சிறந்த நிருவாகத்தை செய்ய முடியாமல் சீரழிந்து கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டக்கல்வித்திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் ஏறாவூர்ப் பற்று பிரதேச பாடசாலைகள் இருந்த போது ஓரளவு பெற்றுக்கொள்ளப் பட்ட சில சேவைகளும், செயற் பாடுகளும் தற்போதைய பிரதேச கல்விப் பணிமனையிடம் பெற முடியாமலுள்ளதற்கான காரணம் என்ன?

ஆசிரியர்களின் நலன்கருதியும், அவர்களின் செயற்பாடுகளை சீரமைக்கும் நோக்குடனும் செயற் பட வேண்டிய நிலையை மறந்து ஏனோதானோ என்ற நிலையில் மந்த கதியில் காரியங்கள் நடைபெறு வதால் ஆசிரியர்களும், அதிபர் களும் கல்விக் காரியாலயத்தின் நிலையை உணர்ந்து கவலைப்படு வதைத் தவிர் வேறுவழி தெரிய வில்லை. திறன்பட நிருவாகம் செய்யவேண்டிய உயர் அதிகாரி களும் இலிகிதர்களும் நேரத்தைக் கடத்துவதிலேயே கண்ணும் கருத்து மாக இருக்கின்றார்களே தவிர தங்களது கடமையை உணர்ந்து காரியமாற்றத் தவறுகின்றனர்.

ஏனைய கல்விப்பணிமனைகளுடன் ஒப்பிடும் போது சமகாலத்தில் தோற்றம் பெற்ற ஏறாவூர் பற்று கல்விக் காரியாலயம் இதுவரை சாதித்தது எவை என்ற வினா, அதிபர்களினதும், ஆசிரியர்களின தும் அடிமனதை ஆக்கிரமித் துள்ளது. 1988ம் ஆண்டு நியமனம் பெற்ற ஆசிரியர்களுடைய நியமன உறுதிப்படுத்தல் கடிதங்கள் அதிக மானோருக்கு இன்னும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அநாதை கள், விதவைகள், ஓய்வூதிய அட்டை யோ அல்லது இலக்கங்களோ, இன்னும் கிடைக்கவில்லை. இதற் காகக் கழிக்கப்படும் கழிவுப்பணம் எங்கே செல்கின்றது என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களது தேவைகளின் காரணமாக கல்விக் காரியாலயத்துக்கு புதன் கிழமையே வரவேண்டும் என்று அதிகாரிகள் அதிபர்களின் கூட்டங் களில் வலியுறுத்திக் கூறுகின்றார்கள். ஆனால் புதன்கிழமைகளில் கந் தோருக்குச் சென்றால் கதிரை களுக்கே வணக்கம் செலுத்த வேண்டியுள்ளது. உரியவர்களைக் கண்டுபிடித்து காரியம் சாதிப்பது முயற்கொம்பாகவே இருக்கின்றது. இந்நிலை எதுவரை தொடரும் என்பது கடவுளுக்கு மட்டுமே வெளிச்சம்.

சம்பள உயர்ச்சி தினத்திற்கு ஒரு மாதத்துக்கு முன் அதற்கான படிவம் பொறுப்பான இலிகிதரிடம் ஒப்ப டைக்கப்பட்டும் அவைகளை காணாமற் செய்து விட்டு தேடும் படலமே தொடர்கதையாக உள்ளது. இதனால் உரிய மாதத்தில் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு பல மாதங்களுக்குப் பிறகே வழங்கப் படுகிறது. இதை யாரிடம் சென்று முறையிடுவது? அவ்வாறு முறை யிட்டாலும் சுயவிபரக் கோவை யிலுள்ள இன்னும் என்னென்ன படிவங்கள் காணாமற் போகுமோ என்று அஞ்சுவதால் அதிபர்களும், ஆசிரியர்களும் எவ்வித நடவ டிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளனர். மேலும் பரீட்சைகளின் போது வழங்கப்படும் மேற்பார்வை யாளர், உதவிமேற்பார்வையாளர் கடமைகள் தொடர்ந்தும் ஒரு சிலருக்கே வழங்கப்படுகின்றன. இதனால் ஏனையோர் கல்வி அதிகாரிகளை சந்தேகக் கண் கொண்டு நோக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது.

அனைத்துக்கும் மேலாக ஏறாவூர் பற்று கல்விப் பிரதேசப் பணிமனை யில் கடமையாற்றிய நிதிஉதவி யாளர் மட்டக்களப்பு கல்விக் காரியாலயத்தில் கடமையாற்று கின்றார். அவருக்கு இருந்த காரி யாலய அறை சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. நிதி மோசடி என்ற காரணத்தினாலேயே இவரது காரியாலயம் மூடப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது. ''நிதி உதவி யாளருக்குத் தெரியாமல் நிதி மோசடியா?!'' ''காசோலை கையாடல்'', ''காரியாலயம் சீல் வைப்பு''. இதனால் பாதிக்கப் படுவது ஆசிரியர்களும் அதிபர் களுமே. குறிப்பாக கடந்த மாதச் சம்பளம் கூட (ஜுன் 25ந்திகதி) சில நாட்கள் பிந்தியே கிடைத்தது. அத்தோடு முரண்பாடான சம்பளக் கழிவுகள் தொடர்பான விளக்கங் களைப் பெறுவதற்குக் கூட நிதி உதவியாளர் காரியாலயத்தில் இல்லாதது விசனத்தை ஏற்படுத்து கின்றது.

ஆசிரியர்களின் நலன்பேண வந்த பணிமனைகள், அங்கு பணியாளர் களின் பணிகாக்கவா அவை உருவாக்கப்பட்டது. இது தேவை தானா என்று யோசிக்கவேண்டி யுள்ளது. வெறுமனே ஆசிரியர் களையும் அதிபர்களையும் பிழை பிடிக்கும் நோக்குடன் கள்வனைத் தேடி பொலிஸ் வருவதைப் போன்று பாடக்குறிப்பு, பாடத்திட்டங்களைக் கேட்டு மிரட்டுவதும், அதிகாரத் தோரணையுடன் செயற்படுவது மட்டும் தானா? கல்விப் பணிமனை யினதும், அதிகாரிகளினதும் கடமை. இதனுடன் ஆசிரியர்களும் செய்யவேண்டிய பொறுப்புக்களை ஒழுங்கான முறையில் நிறைவேற் றப்படும் போது இவ்வாறான கசப்புணர்வு தோன்ற வழியேற் படாது. இவ்வுண்மையை உணராது ஆசிரியர்களின் நலனில் அதி காரிகள் காட்டும் அசமந்தப்போக்கு தொடர்கதையாக அமையக்கூடாது. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி கல்விப் பணிமனையின் நிருவா கத்தைச் சீர்படுத்துவார்களா?

**வாசு**

# திருமலை வைத்தியசாலை: உயர்ந்த கட்டிடங்களும் குறைந்த சேவைகளும்

திருகோணமலை தளவைத்திய சாலை அரசாங்க இலவச வைத்திய சாலையாக இயங்குகின்ற போதிலும் பணம் செலுத்தி விஷேட கவனிப்பு பெறக்கூடிய பிரிவொன்றும் கூடவே நிழலாக இயங்கி வருகிறது.

83 கலவரக் காலங்களிலும் அதற்குப் பிந்திய நாட்களிலும் எல்லோர் மனங்களிலும் கோபுரமாக உயர்ந்து நின்ற தளவைத்தியசாலை இன்று குட்டிச்சுவராகி மக்களின் அரு வருப்பான பார்வையில் மத்தியில் குறுகி நிற்பதற்கு காரணம் அங்கு பணிபுரியும் சில வைத்திய பெருந்த கைகளே என்பது ஊரறிந்த சங்கதி.

சிறிய கட்டடங்களையும் குறைந்த வசதிகளையும் வைத்துக்கொண்டு இனிய நம்பிக்கையான வார்த்தை ளையும் உளமார்ந்த சேவைகளை யும் நோயாளர்களுக்கு வழங்கிச் சுகமளித்த வைத்தியசாலை இன்று பாரிய கட்டடங்களையும் பள பளப்பான உபகரணங்களையும் கொண்டிருந்த போதிலும் பண்பான வார்த்தைகளையும், மனிதாபிமான சேவைகளையும் இழந்து மக்கள் மத்தியில் தாழ்ந்து போய் நிற்கிறது,

அட்டெண்டன்ட் மார்களில் பெரு வாரியானோர் தங்களை டி.எம்.ஓ வாக பாவித்துத் தூள் கிளப்பு கிறார்கள். நோயாளர்களுக்கு தங்கள் செலவில் மருந்து செய்வ தாக ஒரு நினைப்பு இவர்களுக்கு! இவர்களோடு ஒரு வாரகாலம் பழகி விட்டு ஒரு நோயாளி வெளியே வந்தால் அவரது பார்வையில் இராணுவச் சிப்பாய் இனிய அமைதியான மனிதனாகத் தெரியக் கூடும். அந்தளவுக்கு தாதிமார் நடந்துகொள்கிறார்கள். இவர்கள் இவர்களிடையே உண்மையான சேவகர்களைத் தேடியே பொறுக்க வேண்டியுள்ளது.

தாதி தரத்தில் உள்ளவர்களில் அநேகமானோர் நோயாளர்களு டன் அன்பாகப் பழகுவது பாராட் டுக்குரியது. ஒரு சிலரைத் தவிரப் பலர் சேவையின் மகத்துவத்தை உணர்ந்தே செயல்படுகிறார்கள்.

ஆனால், வைத்தியர்களைப் பொறுத் தமட்டில் ஒருசில சிகாமணிகள் ஊரையே கலக்கு கலக்கென்று கலக்குவதால், நேர்மையான வைத் தியர்கள் கூட தலைகுனிய வேண்டி யுள்ளது. இங்குள்ள வைத்தியர்கள் பலர் கிளினிக் வைத்து நடத்து கிறார்கள். சிலர் பல கிளினிக் குகளுக்கு விஜயம் செய்து ஊர் மக்களுக்கு ஓடியோடிச் சேவை செய்கிறார்கள். இன்னும் சில மகாத்மாக்களோ தாங்கள் தங்கி யிருக்கும் அரசாங்க விடுதிகளையே ஆஸ்பத்திரிகளாக மாற்றிய மைத்துள்ளார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் இத்தகைய தில்லு முல்லுகளுக்கு சேவையென்று பெயரிட்டழைத்து ''டாகுத்தர் ஐயாமாரை'' கனம் பண்ணி னார்கள் என்பது உண்மை. இன்று நிலைமை அப்படியில்லை. மக்கள் மத்தியில் இவர்கள் வெறும் வியாபாரிகளாகவே மதிக்கப்படு கிறார்கள். இத்தகைய ஈனச்செயல் களினால் பாமர மக்கள் கூட ஏக வசனப் பிரயோகங்கள் மேற் கொள்ளும் அளவிற்கு வைத்திய தொழில் தாழ்ந்து போய் உள்ளது. ஆஸ்பத்திரி வைத்தியர்கள் பிரைவேட்டாகத் தொழில் செய்யும் போது அவர்களது கிளினிக்கு களுக்கு ஆஸ்பத்திரி மருந்துகள் கடத்தப்படுருக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பது பொது மக்களின் பரவலான கேள்வி. இவர்களது பணம் பண்ணும் வேகம் இந்தக் கேள்விக்கு மேலும் வலுவூட்டுகிறது.

இவர்களது கிளினிக்குக்கு நோயாளி ஒருவர் போனால் சில மருந்துகள் வழங்கப்படுகின்றன. மறுநாள் ஆஸ்பத்திரிக்கு வருமாறும் கேட்கப்படுகிறார்கள். இவ்வாறு ஏற்கெனவே கிளினிக்கில் பணம் கட்டிய நோயாளி ஆஸ்பத்திரிக்கு போகும் போது முகமெல்லாம் பல்லாக பணம் பெற்ற வைத்தியரால் ராஜ கவனிப்புக்கு உள்ளாக்கப் படுகின்றார். ஆனால், ஏனைய நோயாளிகள் ஏனோ தானோ வென்று கவனிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய ராஜ கவனிப்புகளால் ஆஸ்பத்திரிக்குப் போக தீர்மானிக் கும் புத்திசாலிகளான நோயாளிகள் யாராவது ஒரு வைத்தியரிடம் பிரைவேட் செக்கப் செய்து கட்டணம் என்ற பெயரில் அட்வான்ஸ் கட்டிவிடுகிறார்கள். விபரம் புரியாதவர்கள் இலவச ஆஸ்பத்திரி என்று நம்பிக்கொண்டு 'அட்மிட்' ஆகுவதால் ''கடனே'' என்று கவனிக்கப்படுகிறார்கள். ஆஸ்பத்திரிக்கு அருகில் குவாட்டர்ஸ் களில் கூட ''பிரைவேட் பிரக்டிஸ்'' ஓகோவென்று நடக்கிறதென்றால் இந்தத் தந்திரம் தான் காரணம்.

இன்னொரு சிறப்பு; ஆஸ்பத்திரி யில் அனுமதி பெறும் அவசர நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய குவாட்டர்ஸ்களில் இருந்து வைத்தி யர் வர பல மணி நேரம் கூட ஆக லாம். ஆனால் குவாட்டஸில் வைத்தியத்திற்காக வரும் ஒரு நோயாளிக்கு சிகிச்சைசெய்ய - அந்த வைத்தியர் ஆஸ்பத்திரியில் கடமையில் இருந்தாலும் கூட - சில நிமிடங்களில் பறந்து வந்து விடுவார், அந்த அளவுக்கு பணத்தில் கரிசனை.

ஒவ்வொரு புது வைத்தியரும் வரும் பொழுது சில நாட்களுக்கு மக்கள் மனதில் உயர்ந்து நிற்கிறார். அவரது சேவையையும் பணிவான வார்த்தை களையும் மக்கள் வியந்து பாராட்டு கிறார்கள். ஆனால் காலப்போக்கில் சகவாச தோஷத்தால் பணம் பண்ணும் வியாபாரிகளாக இவர்கள் மாறும் போது மதிப்பிழந்து போகிறார்கள். இவ்வாறு உயர்ந்து தாழ்ந்து போன பல வைத்தியர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

பிரைவேட் தொழில் செய்யாத - பிரைவேட் பிராக்டிஸ் செய்தும் நேர்மையாகத் தொழில் புரியும் - வைத்தியர்களும் இருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் களை பண்புடன் உபசரிக்கும் மனப்போக்குக்கொண்டோர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் வியாபார வைத்தியர் களையும் இவர்களையும் பிரித்தறி வதென்பது பாமரன் ஒருவனுக்கு கஷ்டமான காரியமே.

**விவேகி**

# முஸ்லிம் பிர. செயலாளர் நியமனம்!

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் குச்சவெளி, ஈச்சிலம்பத்தை ஆகிய பிரிவுகள் இன்னும் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படவில்லை. இவை உ.அ. அதிபர் காரியாலயங்களா கவே செயற்படுகின்றன.

இந்த 11பிரிவுகளிலும் கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், குச்சவெளி என்பன முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக்கொண்ட பிரிவுக ளாகும். (அட்டவணையைப் பார்க்க)

இந்த நான்குபிரிவுகளிலும் முஸ்லிம் அல்லாதவர்கள் பிரதேச செயலாளர் களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் முஸ்லிம்கள் தமது அன் றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கு வதுடன் அபிவிருத்தித் திட்டங் களிலும் திட்டமிட்டு புறக்கணிக்கப் படுகின்றனர். தற்போது இலங்கை நிர்வாக சேவையில் கணிசமான அளவு முஸ்லிம்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளதனால், இவர்களை இப் பகுதிகளுக்கு நியமிக்க முடியும். இது விடயமாக இப்பகுதி மக்களும் சமூகசேவை அமைப்புகளும், பாராளுமன்ற உறுப்பினர்களுக் கும், முஸ்லிம் அமைச்சர்களுக்கும் பல தடவை அறிவித்தும் இதுவரை எதுவிதமான காத்திரமான நடவ டிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பிரதேச செயலாளர் பிரிவுகளை மீள் அமைப்பது தொடர்பாக நியமிக்கப் பட்ட ஆணைக்குழுவில் முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளை மைப்பது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தீவிரம் காட்டி வருகிறது. இது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். அதே நேரம் இருக் கின்ற முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம்களை நியமிக்கும் விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். இது தொடர்பாக அதிகாரத்திலுள்ள சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் இம்மக்களின் நீண்டநாள் அவாவாகும்.

**முத்தூரான்**

| பிரிவும் பிரதேச செயலாளர்களும் | குடும்பங்கள் | மக்கள் தொகை | முஸ்லிம்கள் | தமிழர்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|---|---|
| மூதூர் | 13125 | 55348 | 29387 | 25570 | 391 |
| *(ஏ. நடராஜா)* | | | 54% | 46% | |
| கிண்ணியா | 12173 | 58865 | 54872 | 3985 | 08 |
| *(அருள் ராசா)* | | | 94% | 6% | |
| குச்சவெளி | 3225 | 12077 | 8460 | 3434 | 183 |
| *(ஜெயசந்திர)* | | | 70% | 28% | 02% |
| தம்பலகாமம் | 6015 | 27997 | 13732 | 7341 | 6920 |
| *(விஜயசூரிய)* | | | 50% | 26% | 24% |

www.tamilarangam.net





# அக்கரைப்பற்று பொலிசாரின் அடாவடித்தனங்கள்

தமிழ் மக்களுக்கென்றும், முஸ்லிம் மக்களுக்கென்றும் தனித்தனியாக ஆலயடிவேம்பு, கருங்கொடித்தீவு என்ற பிரதேச சபைகள் பிரிக்கப்பட்ட 1990க்குப் பிற்பாடு இரு பகுதிகளுக்குமான எல்லைகளுக்காக சர்ச்சைகள் உருவாகிய பின்னைய காலகட்டங்களில் தமிழ் பிரதேசமான ஆலயடிவேம்பு பிரதேச எல்லைப் பகுதிகளை ஊடறுத்து அடிக்கடி கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டு வருவது என்பது, அண்மைக்காலமாக தமிழ் புத்திஜீவிகளின் கவனத்தில்பெருத்த கவலைகளை ஏற்படுத்தி வருகின்றது.

1995ன் இறுதிப் பகுதியிலிருந்து இன்று வரைக்குமாக சுமார் ஒன்றரை வருட காலப் பகுதியில் உயிரிழப்புக்கள், கால் கை ஊனங்கள், வீடு பொருள் வியாபார ஸ்தலங்கள் சேதமாக்கப்பட்ட நடவடிக்கைகளாக சுமார் நான்கு சம்பவங்கள் தலைவிரித்தாடியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல அரசியல் கட்சித் தலைவர்களும் அவ்வப்போது கண்டனங்களும், பத்திரிகை அறிக்கைகளும் விடுத்த போதும் இந்நடவடிக்கைகள் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே தொடருகின்றன.

***1995 நவம்பர் 07***

அம்பாறை வீதியில் ஒரு முஸ்லிம் பொலிஸ் சுடப்பட்டதையடுத்து இக்கோரத் தாண்டவம் அரங்கேறியது. சுமார் முப்பது நிமிடங்களுக்குப் பின் அம்பாறை வீதியிலிருந்து ஆர்.கே.எம். வீதியை ஊடறுத்து உள்ளே புகுந்த முஸ்லிம் பொலிசாரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் தமிழ் மக்கள் மீதான தமது வேட்டையை ஆரம்பித்தார்கள்.

பைபிள் படித்துக்கொண்டும், சாப்பிட்டுக் கொண்டும், மேசன் வேலை செய்து கொண்டும் வீடுகளில் இருந்த நான்கு அப்பாவி பொது மக்கள் அந்தந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இ.சீவரெத்தினம்(65), சீ.விஜயரெத்தினம் (20), க. எலிசபெத் பொன்னம்மா (இவர்கள் மூவரும் அக்கரைப் பற்றைச் சேர்ந்தவர்கள்) எம். சிறீதரன்(21) ஆகிய நால்வருமே பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டவர்களாகும்.

***1996 ஜுன் 29***

அக்கரைப்பற்று மாயழகுவீதி, வீரக்குட்டி வீதி, பழைய மார்க்கட் வீதி, பன்சாலை வீதி ஆகிய எல்லைப்புற குடியிருப்புக்களை நோக்கி இரவு வேளைகளில் அடிக்கடி கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்கள் காரணமின்றித் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்தன.

புலியா கிலியா என்று புரியாத வகையில் ஜுன் 27,28,29ம் திகதிகளில் பொலிஸாரும் ஊர்காவற் படையினரும் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இத்தினங்களில் மின்சாரத்தடை ஏற்படுத்தப்பட்டு கிரனைட் ஒன்று வெடிக்கவைக்கப்படும். இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளை நோக்கி குண்டு மாரி பொழியும். பல மணித்தியாலயங்கள் தொடரும் இந் நடவடிக்கைகளின் போது குடியிருப்புக்களில், வீட்டுக்கதவுகளில் கீழிருந்து ஐந்து அங்குலம் உயரத்தில் துப்பாக்கி ரவைகள் துளைத்து ஊருடுவி உள்ளறைச் சுவர்களில் ஆழமாகப் பதிந்திருக்கும். இது இன்றுவரை சாட்சிகளாயுள்ளன.

இச்சம்பவங்களின் போது சாகாம வீதியிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான பிரபலமான சில கடைகளும் குறிவைக்கப்பட்டன. 'சுரேஸ் டெய்லர் கடை' சல்லடையாக்கப்பட்டதுடன் பல கடைகளும் சேதமாக்கப்பட்டன. வர்த்தக ரீதியான பழிவாங்கல்களும் இதிலடங்குமென்று ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகளும் அடிபட்டன.

தமிழ்ப் பகுதிகளின் எல்லைப் புறங்களில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச்சம்பவங்களின் போது தமிழ் மக்கள் தமது உயிரைக் கையில் பிடித்த வண்ணம் இரவுகளை விடியவைத்தனர் என்பதுடன், எச்சமயத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடன் பகல் வேளைகளில் கூட உயிர் தப்பியோட மூட்டை முடிச்சுக்களுடன் ஆயத்தமாக காலந்தள்ளினர்.

''குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி எல்லைப்புற தமிழ் மக்களை இடம்பெயரச் செய்வதற்கே திட்டமிட்டு இத்துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழ் மக்கள் நம்பவேண்டிய நிர்க்கதியும் சூழ்நிலையும் தோன்றியிருந்தது என செய்திப் பத்திரிகைகள் கூறின.

**(தினகரன் 03.07.96, 04.07.96 வீரகேசரி 03.07.1996)**

***1996 நவம்பர் 15***

முஸ்லிம் பகுதியில் ஒரு சம்பவம் நடந்திருந்தது. ஒரு அரச வீரரின் துப்பாக்கியை யாரோ எடுத்துக் கொண்டு ஓடி எங்கோ வீசிவிட்டு ஓடியிருந்தான்.

அது ஆற்றிலே போட்டு குளத்திலே தேடிய கதையாய் ஆனது. சம்பவம் நடந்த பகுதியைத் தாண்டி வந்து தமிழ்ப் பகுதியின் எல்லைப் பகுதிகளை ஊடறுத்து மாயழகு வீதியை நோக்கி பொலிசார் கண்டபடி சுடத் தொடங்கினார்கள். பல வீடுகளின் கூரைகள் உடைந்து சிதறியதுடன் முனியாண்டி கணேஸ் என்னும் நாட்டாமை படுகாயமுற்றார். இவரது இடது கை நிரந்தரமாகவே செயலிழந்து போனது.

***1997 ஜுன் 13***

அக்கரைப்பற்று பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து நூறு யார் தூரத்தில் சாகாமவீதியிலுள்ள ''சென்றி பொயின்ற்'' ஐ நோக்கி காலை 7.30 மணியளவில் கடமைக்காக பொலிசார் வந்துகொண்டிருந்த போது கிரனைட் ஒன்று வெடித்துள்ளது. இச்சம்பவத்தில் யாரும் காயம் அடையவில்லை.

இதைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதியான இராமகிருஷ்ணமிசன் வீதி, கமலகம் வீதி எனபவற்றை ஊடறுத்து உள்ளே புகுந்த பொலிசாரும் ஊர்காவற் படையினரும் தமிழ் மக்களது வீடுகளை நோக்கி சரமாரியாகச் சுட்டுத் தள்ளினர். ''எங்கேயடி உங்கட புலிகள் வெளிய வரச் சொல்லுங்கடி'' என்று, அலறியடித்துக்கொண்டு ஓடிய குடும்ப பெண்களைப் பார்த்து வீராப்பு பேசவும் இவர்கள் தவறவில்லை.

ஒரு வீட்டுக்குள் குடும்ப பெண்ணொருத்தி குண்டடிபட்டு அலறிய போது துப்பாக்கி வீரர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றதாக. தெரிய வருகிறது. ஏற்கெனவே பயங்கரவாத சம்பவமொன்றில் கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான வண்ணமணி கோணேஸ்வரியே (33) இச்சம்பவத்தில் தொடை எலும்பு பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

பொலிசாரின் அன்றைய நடவடிக்கைகளின் போது சாகாம வீதியில் வழிமறிக்கப்பட்ட ''ஹீரோ கொண்டா'' (இல.140 - 5871) நடு வீதியில் எரிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியில் எழுதுவினைஞராக கடமை புரியும் கே. தங்கவடிவேல் என்பவரின் மோட்டார் சைக்கிளே இதுவாகும். இவர் தனது மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தன் மீது குறி பார்க்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து தப்புவதற்காக சைக்கிளைப்போட்டு விட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடித்தப்பிய போதே அவரது சைக்கிள் எரிக்கப்பட்டது.

**(இவரது பொலிஸ் முறைப்பாட்டு இல.167-98/எம்.ஓ.ஐ.பி)**

இராமகிருஷ்ணன் வீதியில் வசிக்கும் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமைபுரியும் நா. குகதாசன் என்பவரது வீடு சல்லடையாக்கப்பட்டது. மூடப்பட்ட கதவுகளை ஊடறுத்து சென்ற துப்பாக்கி ரவைகள் அறைக்குள்ளிருந்து தொலைக்காட்சிப் பெட்டி, ரேப்செட், பல்வேறு பொருட்களையும் நாசமாக்கியிருந்தது.

**(இவரது பொலிஸ் முறைப்பாட்டு இல. 176-104/எம்.ஓ.ஐ.பி.)**

கமலகம் வீதியில் பத்மராஜா ஆனந்தியின் வீடு, இராமசாமி இராஜேந்திரனின் தேனீர்க்கடை, கே. காசுபதியின் சில்லறைக் கடை உட்பட பல வீடுகளும் கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. **(இது தொடர்பான செய்திகள் 18.06.1997 வீரகேசரி, தினகரனில் பிரசுரமாயின)**

நீண்ட இருண்ட அவலங்கள் தொடரும் இப்பகுதிமக்களுக்கு தகுந்த நிவாரணங்களும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. பொலிசுக்கு சென்று முறைப்பாடு செய்வதற்கே அச்சமுறும் இவர்களது முறைப்பாடுகள் ஏனோதானோ என்று எழுதப்பட்டு கையெழுத்து வாங்கப்படுகிறது. என்ன நடந்தது, என்ன சொல்லப்பட்டது, என்ன எழுதப்பட்டது என்று தெரியாமலே சிங்களத்தில் எழுதப்படும் முறைப்பாடுகளுக்கு கூனிக்குறுகி கையெழுத்துப் போட்டு விட்டு பெ( )மூச்சு விடும் நிலைமைகளே இப்பகுதி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**(பயிரை மேயும் வேலிகளிடம் உயிரைக் காக்க மன்றாடுவது எங்ஙனம்)**

''இம்மாதிரியான சில நடவடிக்கைகளைத் தடுக்க முயன்ற ஏ.எஸ்.பி. சுரேஸ்நாதன் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார் என வீரகேசரி பத்திரிகை செய்தி 25.06.97ல் கூறுகிறது.

இதுதவிர தமிழ் - முஸ்லிம் எல்லைப்பகுதிகளை ஒட்டிய மூன்று பிரதான வழிப்பாதைகள் கடந்த ஒருவருடத்துக்கும் மேலாக முள்வேலியிட்டு பொலிசாரினால் அடைக்கப்பட்டுள்ளது. சிங்கள மகாவித்தியாலய வீதி, பன்சாலை வீதி, மாயழகு வீதி என்பனவே இவைகளாகும். இவற்றுக்கான காரணம் இன்றும் பொது மக்களுக்கு விசனத்துக்கும், வேடிக்கைக்கும் உரியதாகவே இருக்கிறது. (இதில் சிங்கள மகாவித்தியாலய வீதி பொது மக்களால் பலவந்தமாக திறக்கப்பட்டுள்ளது.)

திருக்கோவில் ஆலயடிவேம்பு என்னும் தமிழ்ப் பிரதேசங்களையும், கருங்கொடித்தீவு, அட்டாளைச்சேனை என்னும் முஸ்லிம் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகவே இப்பகுதி பொலிஸ் நிலையம் உள்ளது. ஆகவே இனம் மத பேதம் பார்க்காது பொது மக்கள் மீது உண்மையான பாதுகாப்பையும், கௌரவத்தையும் உறுதிப்படுத்தக் கூடியதாகவும், அரச இறைமையின் கண்ணியத்தை காக்கக்கூடியதாகவும் தமது பகுதிகளை (திருக்கோவில் / ஆலயடிவேம்பு) உள்ளடக்கியதாக தனியான பொலிஸ் நிலையமொன்று தமக்கு வேண்டும். அல்லது விகிதாசார அடிப்படையில் பொலிசார் நியமிக்கப்படும் பட்சத்திலேயே இவ்வகைப்பட்ட அத்துமீறிய அராஜக நடவடிக்கைகளுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பதே ''முஸ்லிம் தனியலகு'' கோரப்படும் அம்பாறை மாவட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களின் அளப்பெரிய அங்கலாய்ப்பாகும்.

***நெற்றிக்கண்ணன்.***

# வாழைச்சேனை - புதுக்குடியிருப்பு: எரிக்கப்படும் வீடுகள்

கால் நடையாகவும், சைக்கிள்களிலும் சுற்றிக்கொண்டு திரியும் விடுதலைப்புலிகள், முகாம்களிலும் இடையிடையே ரோந்து செல்வதிலும் ஈடுபடும் படையினர், மூடப்பட்டுபோன (தமிழ்) இயக்கங்களின் அலுவலகங்கள், வாழைச்சேனை நகருக்குள் வந்து போவோரை மிரட்டி சோதனையிடும் ராசிக்குழுவினர், ஒவ்வொரு நிமிடமும் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள், இழுத்து மூட தயாரென காத்திருக்கும் அலுவலங்களும், கடைகளும், இதுதான் இன்றைய வாழைச்சேனை நகரம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே புலிகள் படையினரின் மோதலின் போது அல்லது அதற்கு பின்னரான படையினரின் தேடுதல் சுற்றிவளைப்புகளின் போது காயமடையும் அல்லது கொல்லப்படும் பொது மக்களின் எண்ணிக்கை வாழைச்சேனையில் மிக அண்மைக்காலமாக அதிகரித்து கொண்டு வருவதாக தெரிகிறது.

15.07.97 செவ்வாய்க்கிழமை காலைவேளையில் வாழைச்சேனையிலிருந்து ரோந்து சென்ற படையினர் மீது புதுக்குடியிருப்பில் வைத்து புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலின் போது ஒரு புலி உறுப்பினரும் மூன்று படையினரும் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவத்தை தொடர்ந்து இங்குள்ள பொது மக்கள் உடனடியாக புதுக்குடியிருப்பைவிட்டு அயல் கிராமங்களுக்கு ஓடினார்கள்.

தாக்குதல் நடந்து முடிந்த பின்னர் அவ்விடத்துக்கு வந்த பேத்தாளை முகாம் படையினர் புதுக்குடியிருப்பை நோக்கி ஷெல் மற்றும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

வீடுகளுக்கும் வேலிகளுக்கும் தீவைத்தனர். வீடுகளின் உள்ளேயிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப்பெட்டிகள் ஏனைய வீட்டுத் தளபாடங்கள் ஆகியவற்றை அடித்து நொருக்கினார்கள்.

படையினரின் இந்த வெறியாட்டத்தில் 67 வீடுகள் தீவைத்து கொளுத்தப்பட்டதாகவும், 32 வீடுகளில் இருந்த வீட்டுப்பொருட்கள் முற்றாக அடித்து நொருக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் சரிநிகருக்கு தெரிவித்தார்.

கனகையா சங்கரமூர்த்தி (51) என்ற இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கானார். இதைவிட வீதிகளில் அகப்பட்ட பல் பொதுமக்கள் படையினரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளானதாகவும் தெரிய வருகிறது.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்தும் புலிகளின் நடமாட்டத்தை அறிந்ததுமே பொது மக்கள் வீடுகளை விட்டு அயல்கிராமங்களுக்கு தப்பியோடியதாலேயே பல உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிகிறது.

வாழைச்சேனையில் நிலைகொண்டிருக்கும் 14வது பிரிகேட்டின் பொறுப்பாளர் கேர்ணல் சில்வாவிடம் இது பற்றி முறையிடப்பட்டதற்கு இது புலிகளின் செயலாக இருக்கலாம். அல்லது இது கோடைகாலமென்பதால் தாக்குதலின் போது தீப்பற்றியிருக்கலாமெனவும் கூறியதாகவும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினா ஒருவர் கவலைப்பட்டார்.

எரிந்து சாம்பலாகி சுடுகாடாக இக்கிராமம் காட்சியளித்ததாகவும் இக்கிராமத்தைச் சேர்ந்த 2800 பேரும் இரண்டு நாட்களின் பின்னரே ஐ.சி.ஆர்.சி.யினரின் உதவியுடன் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு சென்றுள்ளார்கள்.

வாழைச்சேனை மக்கள் ஒவ்வொரு கணங்களையும் அச்சமும் பீதியும் நிறைந்த ஆயுதம் தரித்தோரின் நிழல்களுக்கு கீழேயே தங்கள் வாழ்க்கையை இன்னமும் ஓட்டிக் கொண்டுள்ளார்கள்.


***எம்.பிரவினா***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டுக்குப் பதில் இரண்டாயிரம் வாய்கள்!







சென்ற இதழில் தான் தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களின் படுகொலை தொடர்பாக எழுதியிருந்தேன்.

இந்த இதழில் இன்னொரு படுகொலை தொடர்பாக எழுத வேண்டி வரும் என்று அப்போது யாரும் நினைத்திருக்க முடியாது. ஆனால் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஈ. எச்.மஹ்ரூப் அவர்களின் படுகொல்ல அந்த நிலைமையை உருவாக்கிவிட்டுள்ளது.

திருமலையில், அதுவும் ஒரு சில நாட்கள் இடைவெளிக்குள் நடந்த இந்த இரண்டு படுகொலைகளும் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. சமீபகாலமாக, அரசியல்வாதிகளின் கொலைகளுக்கு காரணமான கோஷ்டி மோதல்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே தான் நடந்து வந்தன. இந்த மோதல்கள் காரணமாக ஐ.தே.க., பொ.ஐ.மு. ஆகிய இரண்டு கட்சிகளதும் பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் கொல்லப்பட்டார்கள். இவர்களின் வரிசையில் இறுதியாக நடந்த படுகொலைதான் நாலந்த எல்லாவல என்ற இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினரின் படுகொலையாகும்.

இப்படுகொலைகள் தெற்கில் நடந்து கொண்டிருக்கையில் வடக்கு கிழக்கில் இத்தகைய அரசியல் படுகொலைகள் அற்ற ஒரு சூழ்நிலை நிலவியது. அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடிந்தது. அதுவும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகாமலேயே கிழக்கு மாகாண அரசியல்வாதிகளால் இயங்க முடிந்தது. ஒரு சில அரசியல்வாதிகட்குப் புலிகளுடன் தொடர்புகளும் கூட இருந்து வந்துள்ளது.

ஆனால், தங்கத்துரை அவர்களது கொலையுடன் இந்த நிலைமை முடிவுக்கு வந்துவிட்டது. பழைய படியும் புலிகள் எதிர் அரசியல் கட்சியினரைக் கொல்லும் தமது நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. தங்கத்துரை அவர்களை புலிகளே கொலை செய்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளவர்கள், அக்கொலைக்கு எந்தக் காரணங்களையும் கண்டுகொள்ள முடியாத போது இவ்வாறான ஒரு முடிவுக்கு வருதல் தவிர்க்க முடியாததே.

உண்மையில் இக்கொலைக்கு புலிகள் தான் காரணமா என்ற கேள்விக்கு தெளிவான பதில் தரக்கூடியதாக விசாரணையின் முடிவுகள் இது வரை கிடைக்கவில்லை. ஆனால் பொலிஸாரினதும், தொடர்பு சாதனங்களினதும் அபிப்பிராயம் புலிகளது வேலையே இது என்பதாகவே உள்ளது. பொதுவாகவே, இலங்கையின் அண்மைக் கால அரசியலில் நடைபெற்ற அனைத்துப் படுகொலைகட்கும் புலிகளே காரணம் என்ற அபிப்பிராயமே நிலவி வருகிறது. இது லலித் அத்துலத்முதலி படுகொலையில் இருந்து தொடர்ந்து வருகின்ற ஒரு நிலைமை ஆகும். ஆனால் எந்த விசாரணைகளும் இவற்றைப் புலிகளே செய்தார்கள் என்பதை உறுதி செய்வதாக முடிவடையவில்லை. வெறும் அபிப்பிராய மட்டங்களிலேயே விசாரணைகளும் நின்று விடுகின்றன.

இந்த, புலிகளே காரணம் என்று தெரிவிக்கின்ற நிலையானது உண்மையில், பல்வேறு கொலையாளிகட்கும் கூட வாய்ப்பான ஒரு விடயமாகிவிட வாய்ப்புண்டு என்பதை பலரும் மறந்துவிடுகிறார்கள். பொலிஸாரும் தமது விசாரணைச் சிரமங்களை இலகுவாக்கிக் கொள்ள, புலிகளே செய்தார்கள் என்று கூறுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக இருந்துவிடுகிறார்கள். ஆனால் இது எவ்வளவு தவறான முடிவுக்கு இட்டுச் செல்கின்றது என்பதை லலித் அத்துலத்முதலி தொடர்பான விசாரணைகள் தெளிவுபடுத்துகின்றன.

புதிய அரசாங்கமும் பதவிக்கு வந்த போது 'எல்லாவற்றுக்கும் புலிகளை குற்றம் சாட்டும்' நடவடிக்கையை எதிர்த்தது. ஆனால், விரைவிலேயே அதுவும் புலிகளை காரணமாக்கக் கூறும் முடிவுக்கு இலகுவாக வந்துவிடத் தயாராகிவிட்டது. அதுவும் புலிகளுடனான யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவாக மாறிவிட்டது. இது விசாரணையில் ஈடுபடும் பொலிஸாருக்கு விசாரணையை நடத்துவதற்கு வாய்ப்பான ஒரு நிலையாக உள்ளது. புலிகள் தான் காரணம் என்று முடிவு செய்தலின், காரணமாக குற்றவாளிகளை தேடுவதும் கூட அவ்வளவு முக்கிய மற்ற விடயமாகிவிடுகிறது.

இப்படி நான் எழுதும் போது, இக்கொலையை புலிகள் செய்யவே இல்லை என்று சாதிப்பதற்காக எழுதுவது போலத் தோன்றலாம். ஆனால், எனது நோக்கம் அதுவல்ல. புலிகள் தான் இக்கொலையை செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை கொண்டிருப்பதற்கும், விசாரணையே இல்லாமல், அல்லது அது முடிய முதலே புலிகளே செய்தார்கள் என்று சாதிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. முன்னையது, உண்மைக் குற்றவாளியை கண்டுபிடிக்க உதவக் கூடிய திறந்த விசாரணையை நடத்துவதற்கான சந்தேகம். மற்றையது, விசாரணைகளை நடத்தாமலே இலகுவாக யார்மீதாவது குற்றத்தைச் சுமத்திவிடும் அவசரம்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளாலும், தொடர்புசாதனங்களின் இந்த மனப்பான்மையாலும் பல குற்றவாளிகள் தப்பி விடுகிறார்கள் என்பதை வலியுறுத்துவதே இதை நான் சொன்னதற்கு காரணம்.

மற்றப்படி, புலிகள் அரசியல் கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் தாக்குவதை தமது கோட்பாடாக கொண்டு செயற்பட்டு வந்தவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. தவிரவும் தங்கத்துரை அவர்களை அவர்கள் கொன்றிருக்க மாட்டார்கள் என்று அடித்துச் சொல்லவும் முடியாது. அவர்களின் கொலைகளுக்கு கட்டாயம் உடனடிக் காரணங்கள் இருந்துதான் ஆக வேண்டியதில்லை என்பதை நான் சென்ற இதழிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது ஐ.தே.க. எம்.பி. மஹ்ரூப் அவர்கள் கொல்லப்பட்டது கிழக்கில் மேலும் பதட்டநிலையை ஏற்படுத்தியுள்ளது. இக்கொலையைப் பொறுத்தவரை, அது உடனடியான புலிகளது அரசியல் எதிரி என்று பார்க்கக் கூடிய ஒருவரது படுகொலை என்று சொல்ல முடியாது. தங்கத்துரையை வேண்டுமானால் 'துரோகமிழைத்த தமிழ்த் தலைமையின்' பட்டியலில் ஒருவராகக் கொள்ள முடியும். ஆனால் மஹ்ரூப்? மஹ்ரூப் கொல்லப் படுவதற்கான காரணம் என்ன?

மஹ்ரூப் அவர்கள் கிழக்கு மாகாணத்தில் புலிகளுடைய அரசியலுக்கு சவால் ஆன ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று கூற முடியாது. இறக்கக்கண்டியில் புலிகளால் கடத்தப்பட்ட முஸ்லிம்களின் குடும்பங்களுடன் தொடர்பை கொண்டிருந்ததை தவிர வெளிப்படையான ஒரு அரசியல் எதிரியாக அவரைக் கொள்ள முடியாது.

அதுவும், கிழக்கில் முஸ்லிம்கள் மீதான புலிகளின் நடவடிக்கைகள் பலத்த உணர்வலைகளை தட்டி விடலாம் என்பதால் இந்த விடயத்தில் தாம் கவனமாக இருக்க வேண்டும் என்பது குறித்து புலிகள் உணர்ந்துள்ளதாக கூறிவந்துள்ள நிலையில் இது நடந்திருக்கிறது. அண்மைக்காலமாக புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான உறவு சீர்ப்பட்டு வருவதாக ஒரு கருத்து பொதுவாக தெரிவிக்கப்படட்டது. இத்தகைய ஒரு நிலையில் தான் இந்த இறக்கக்கண்டி சம்பவம் நடைபெற்றது. இச்சம்பவத்தை அடுத்து நடந்த மஹ்ரூப் அவர்களின் கொலை இந்தக் கருத்தை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஆக, இன்றைய கிழக்கில் எழுந்துள்ள நிலைமையைப் பார்க்கும் போது, இக்கொலையின் மூலம் புலிகள் எதைத்தான் சாதிக்க விரும்புகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் அவர்களது கொலையை கிழக்கின் அரசியல்வாதிகளை கொல்லும் ஒரு நீண்ட திட்டத்தின் இரண்டாவது சம்பவமாக கொள்வதா அல்லது இதை இறக்கக்கண்டி விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக கொள்வதா?

முதலாவதே உண்மையான காரணம் என்பது பரவலாகப் பேசப்படுகிறது. கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் நீங்கலாக ஏனையோரை கொல்வது புலிகளின் திட்டங்களில் ஒன்று என்று புலிகளிடமிருந்து கசிந்த தகவல்கள் தெரிவிப்பதாகவும் கூறப்படுகிறது.

இவையெல்லாம் எவ்வளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை.

ஆனால், நாம் திரும்பவும் வலியுறுத்தி கூறவேண்டிய ஒரு விடயம் இருக்கிறது.

தனிநபர் அரசியல் படுகொலைகள், அரசியல் வெற்றியையோ விடுதலையையோ தரப்போவதில்லை. சூழவுள்ள மக்களின் மன உணர்வுகளை மதிக்காது செய்யப்படும் இத்தகைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஒரு அரசியல் இயக்கம் தனது சவக்குழியை தானே வெட்டுகின்ற நடவடிக்கையாகும்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற விடுதலை இயக்கங்கள் தமது விடுதலைப் போரை தமது அரசியல் பலத்திலும் மக்களது அசைக்க முடியாத இணைந்த பலத்திலும் நின்றுதான் நடத்த முடியுமே தவிர, மாற்றுக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் - அவை எவ்வளவுதான் எதிர்நிலைக் கருத்துகளாக இருப்பினும் - தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு வளர்வதில்லை. அதுவும், கருத்துக்களை, தனிநபர்களை அழிப்பதன் மூலமாக அழிக்க முனைவதன் மூலம் எதையும் சாதிக்க முடிவதில்லை.

உண்மையில், எதிர்க்கருத்துக்களை எதிரில் நின்று பேசுபவர்களை அழிப்பதன் மூலம், அடக்கப்படும் அக்கருத்துக்கள் தமது சொந்த இயக்கத்துள்ளே மறைமுகமாகவே ஊடுருவவே செய்ய முடியும். இதற்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உண்டு. இந்த நிலைமை உட்களையெடுப்பாக வளர்வதும், அதுவே மொத்த இயக்கத்தின் அழிவுக்கான அடிப்படையாக மாறுவதும் தவிர்க்க முடியாத விடயங்களாகிப் போய்விடும்.

தங்கத்துரையும் மஹ்ரூபும் இரண்டு தனி மனிதர்கள் மட்டுமே. அவர்களை அழிப்பதன் மூலம் உயர்ந்த பட்சம் ஒரு இயக்கத்தால் சாதிக்கப்படக்கூடியது , இரண்டு வாய்களை அடக்குவது மட்டுமே. ஆனால் இது இரண்டாயிரம் வாய்கள் எதிராக கிளம்ப வழிவகுத்து விடுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் விடுதலை பற்றிய உண்மையான அக்கறையுடன் போராட்டத்தில் ஈடுபடுபவர்களாக இருந்தால், இத்தகைய படுகொலை மூலமாக பெறக்கூடிய அரசியலில் தமது போராட்டத்தை நிலைநிறுத்தி நடாத்துவது, அந்த அக்கறைக்கே எதிரான ஒரு செயற்பாடாகும்.

இந்தப் பத்தியில் பல தடவைகளில் நாம் சுட்டிக்காட்டியது போல, இத்தகைய அரசியல் படுகொலைகள், அவை எவ்வளவுதான் நியாயப் படுத்தக்கூடிய காரணங்களை கொண்டிருப்பினும் விடுதலை அரசியலுக்கு நேரெதிரான விளைவுகளையே தரும்; தந்திருக்கின்றன்.

சகிப்புத்தன்மையும் பொறுமையும் அற்ற அரசியல், விடுதலை அரசியல் அல்ல. அது விடுதலைக்கு எதிரான அரசியலே.

படுகொலை அரசியலை நிறுத்தாத வரை புலிகள் எந்த ஒரு விடுதலைக்கான உணர்வையும் மக்களிடையே வளர்த்துவிட முடியாது.

மாறாக, அவர்களது அதிருப்தியை, ஏமாற்றத்தை எதிர்ப்பையே அது பெற்றுக் கொள்ளும்.

இதைப் புரிந்து கொள்ள அடிப்படையாக தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று உண்டு.

அதுதான் மக்கள் மந்தைகள் அல்ல; மேய்க்கப்படுவதற்கு.

பதிலாக, அவர்களால், அவர்களால் மட்டுமே விடுதலையை சாதிக்க முடியும்.

இது புலிகளுக்கு மட்டுமல்ல, எல்லா அரசியற் கட்சிகட்கும் பொருந்துகின்ற உண்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீலாத் விழாவுடன் தொடங்கும் அஷ்ரப்பின் புதிய அரசியல்!

## சொல்வதற்கு வேறு வழியில்லை

கடந்த 18, 19ம் திகதிகளில் அட்டாளைச்சேனையில் நடைபெற்ற மீலாத் விழா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கடந்த 12 வருடகால அரசியல் வழியில் முஸ்லிம் காங்கிரசின் வெற்றி, தோல்வி, பலம், பலவீனம், பதவிக்கான அரசியல், கொள்கைகளை கைவிட்ட அரசியல் முன்னெடுப்புக்கள், இஸ்லாத்திற்கு எதிரான தவறான போக்குகள், முஸ்லிம் காங்கிரசின் உண்மைத் தொண்டர்களை புறக்கணித்தல் போன்ற பல்வேறுபட்ட வீக்கத்திலும், வெடிப்பிலும், புகையிலும், இருளிலும் சிக்கி வந்து இவை பற்றி அச்சப்படும் தருணத்தில் தனது பதவிக்கு அச்சுறுத்தலான விடயமென அஷ்ரஃபின் அச்சங்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அஷ்ரஃபின் தலைமையில் நடந்து முடிந்திருக்கிறது.

முஸ்லிம்களின் தனித்த அடையாளத்துடன் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ள அல்குர் ஆனுக்கும் நபிவழிக்கும் விசுவாசமான பிரமாணங்களுடைய அன்றைய தொடக்ககால ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்றும் அதே வழியில் சற்றும் பிசகாமல் , பிறழாமல் தொடர்ந்தும் வந்திருக்கிறது என்று சொல்ல யாராலும் முடியுமென்று நான் நம்பவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் கூட மாற்றமடைந்து விட்டது என்பதை ஏற்றுக் கொள்வார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முதலாக முஸ்லிம்களுக்கு முஸ்லிம்களாலான அரசியல் தலைமையை உருவாக்கியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றமே முஸ்லிம்களால் முஸ்லிம்களுக்கு' ஆக்கப்பட்ட முதல் அரசியல் தனிவழி வரலாற்றில் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் மார்க்கத்தையும் தங்குமிடத்தையும் 1985க்குப் பின்னான கால வரலாற்றின் ஊடே பல தளங்களில் நாம் பார்க்கலாம். அவற்றை மேலோட்டமாக இப்படி வகைப்படுத்தலாம்.

1. 1985 தொடக்கம் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வடகிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடக்கும் வரையான கால கட்டம்.

2. வடகிழக்கில் மாகாண சபைக்கு முஸ்லிம் காங்கிரசில் 17 பேர் பிரதிநிதிகளாக தெரிவான காலம் தொடக்கம் 1989ம் ஆண்டில் பொதுத் தேர்தல் வரையான காலகட்டம்.


3. 1989ம் ஆண்டின் பொதுத் தேர்தலுடன் தொடங்கி அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவு வரையான காலகட்டம்.


4. பிரேமதாசாவின் மறைவின் பின்னான காலகட்டத்திலிருந்து பொது ஜன முன்னணியுடனான தேர்தல் ஒப்பந்த காலகட்டம்.

5. பொதுஜன முன்னணியுடனான தேர்தல் ஒப்பந்த காலத்திலிருந்து அமைச்சராகவுள்ள அஷ்ரஃபின் இன்றைய காலகட்டம் வரை.

இவ் ஐந்து வகையான முஸ்லிம் காங்கிரசின் அரசியல் காலத்தில் நாம் இக்காலங்களையும் - மாறி மாறி வரும் காங்கிரசின் அரசியல் நிலைப்பாடுகளையும் பின்னோக்கிப் பார்ப்போமேயானால் முஸ்லிம் காங்கிரசின் உண்மை முகத்தை நாம் தெளிவாக அடையாளம் கண்டு விடலாம் - 1985 இல் அஷ்ரஃப் எங்கே நின்றார், 1989 இல் அஷ்ரஃப் எங்கே வந்தார் - 1994 இல் அஷ்ரஃப் என்னவாக இருக்கிறார் என்பது முக்கியமாகிறது. இதனூடாக 1985ம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கைகளும் கோட்பாடுகளும் 1997ம் ஆண்டில் எப்படி திரிந்திருக்கிறது எப்படி கோணலாகிப் போனது, எப்படி மாறி இருக்கிறது என்பதற்கு விடை கிடைத்துவிடும்.

நாங்கள் அமைச்சராவதற்கும் முஸ்லிம் சமூகத்தை அடகு வைப்பதற்கும் காட்டிக் கொடுப்பதற்கும் எப்போதுமே தயாரில்லாதவர்கள் என்ற வெற்றுக் கோஷத்துடன் புறப்பட்டு வந்த முஸ்லிம் காங்கிரஸும் திட்டமிட்ட வகையில் பயன்படுத்தித் தான் ஒரு பாராளுமன்ற பிரதிநிதியாகவும் அமைச்சராகவும் வரவேண்டுமென்ற தனது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள காத்தான்குடியைச் சேர்ந்த அஹமட் லெப்பையால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை தனது கைப்பாவையாக்கி இன்று அரசியலில் தன்னை ஒரு பேரம் பேசும் சக்தியாக நிலைநிறுத்திக் கொண்டார்.





அதன் தலைவரும் இன்று ஒரு எம்.எச்.முகமட்டாகவும், மன்சூராகவும், மஜீத்தாகவும் மாறி அரசியல் வியாபாரம் செய்து வருகின்றனர். அன்று கிழக்கிலும் அம்பாறை மாவட்டத்திலும் ஆதிக்கம் பெற்றிருந்த **ஐக்கிய** தேசியக் கட்சியின் **முஸ்லிம் பிரதி**நிதித்துவத்தை உணர்ச்சிமிக்க அரசியல் பிரச்சாரத்தின் ஊடாக முற்றாகத் துடைத்தெறிவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் முஸ்லிம்களை உணர்ச்சி வசப்படுத்தி, தனது இருப்பை உறுதிப்படுத்துவதற்காக போட்ட ஒரு ஏமாற்று வேலைத் திட்டமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் பின்னர் தேர்தலுக்கு முஸ்லிம் ஐக்கிய முன்னணியிலும் பாராளுமன்றக் கதிரையை பிடித்து விட வேண்டுமென்ற அஷ்ரஃபின் கனவு 1977ம் ஆண்டின் தேர்தலுடன் நொருங்குண்டதன் பின் சரியான சந்தர்ப்பத்தில் அதை அடைவதற்கான சரியான மார்க்கத்தை அஷ்ரஃபின் கனவுகள் நிறைவேறி விட்டது. எப்போது முஸ்லிம்களின் அபிலாசைகள் நிறைவேறும்? இக்கேள்விதான் இன்று பிரதானமாகிறது. இப்பிரதான கேள்விக்கு பதில் தேடப்புறப்படின் முஸ்லிம் காங்கிரசையும் அதன் தலைவரான, நூறுவீதம் கேள்விக்குட்படுத்தப்படாத அஷ்ரஃப் அவர்களையும் நியாயமாக விமர்சிப்பது தவிர்க்க முடியாததாகிறது. வரலாற்றின் ஊடே மாற்றுக் கருத்துக்களுக்கும், கருத்துச் சுதந்திரத்திற்கும் பாரிய பெறுமானமும் விளைவும் இருந்து வந்திருக்கிறது. இதனை முதலில் அஷ்ரஃப் அவர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது முஸ்லிம் காங்கிரசினுள்ளும் சிறு சிறு மாற்றுக் கருத்துகள் முன் வருகின்றன.

கடந்த 12 வருடகால முஸ்லிம் காங்கிரசின் அரசியல் வழியில் முஸ்லிம்களுக்கு கிடைத்த ஒரு இலாபமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மாத்திரமே என்னால் சொல்ல முடியும். துறைமுகத்தில் கிடைத்த வேலைகளையோ, கட்டிட ஒப்பந்தங்களையோ, அமைச்சர், உதவி அமைச்சர் பதவிகளையோ முஸ்லிம்களின் அரசியல் வெற்றியாக கொள்ள முடியாது! அப்படி நாம் கொள்பவர்களாக இருந்தால் மன்சூரையும் மஜீதையும் உதுமாலெப்பையையும் நாம் விரல் சுட்டி குற்றம் சாட்ட முடியாதவர்களாகிறோம்.

**அஷ்ரஃபின் கனவுகள் நிறைவேறிவிட்டது. எப்போது முஸ்லிம்களின் அபிலாசைகள் நிறைவேறும்? இக்கேள்விதான் இன்று பிரதானமாகிறது. இப்பிரதான கேள்விக்கு பதில் தேடப்புறப்படின் முஸ்லிம் காங்கிரசையும் அதன் தலைவரான, நூறுவீதம் கேள்விக்குட்படுத்தப்படாத அஷ்ரஃப் அவர்களையும் நியாயமாக விமர்சிப்பது தவிர்க்க முடியாததாகிறது. வரலாற்றின் ஊடே மாற்றுக் கருத்துக்களுக்கும், கருத்துச் சுதந்திரத்திற்கும் பாரிய பெறுமானமும் விளைவும் இருந்து வந்திருக்கிறது. இதனை முதலில் அஷ்ரஃப் அவர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

அன்று தேர்தலுக்காக முஸ்லிம் காங்கிரசால் தூக்கிப்பிடிக்கப்பட்ட முஸ்லிம் மாகாணக் கோரிக்கை இன்று முஸ்லிம் காங்கிரசின் அஷ்ரஃப் தலைமையை மட்டும் பாதுகாக்கும் ஒரு ஏற்பாடாக எப்படி மாறிப்போனது? அன்று முன் வைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான தனிமாகாணக் கோரிக்கை கிழக்கில் நிலத்தொடர்பு அற்றதும் அதிகாரங்கள் தொடர்புடையதுமான பொத்துவில் தொடக்கம் கிண்ணியா வரையான முஸ்லிம் மாகாணமே, இன்று பொத்துவில் தொடக்கம் கல்முனையாக ஏன், எப்படி மாறியது?

கிழக்கில் இருக்கும் ஒட்டுமொத்தமான 33 வீதமான முஸ்லிம்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய முஸ்லிம் மாகாணம், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை மாத்திரம் பாதுகாப்பதற்கான, ஒரு ஏற்பாடாக மாறி காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, திருமலை நகர், மூதூர், கிண்ணியா, முஸ்லிம்களை தனது நலன்களுக்காக பலிகொடுத்திருக்கிறது. கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் ஒட்டு மொத்தமான தொகையில் 46 வீதத்தை மட்டுமே கொண்ட அம்பாறை மாவட்ட (தென்கிழக்கு மாகாணம்) முஸ்லிம்களுக்காக 54 வீதமான மட்டக்களப்பு திருமலை முஸ்லிம்களை அஷ்ரஃப் ஏன் கைவிட்டார்? அதற்கும் மேலாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வளமிக்க நிலத்தையும் நீர்ப்பாசன குளங்களையும் 900 சதுரமைல் நிலப்பரப்பையும் சிங்களவர்களுக்கு தாரைவார்த்துவிட்டு தனது ராசதானியை நிலை நிறுத்துவதற்காக அஷ்ரஃப் ஏன் முற்படுகிறார் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய விடயமாகிறது.

இந்த விடயத்தில் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் துணைத் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹிஸ்புல்லாஹ் தனது பகிரங்க நிலையை தெரிவிக்க வேண்டியவரானார். ஏனெனில் ஹிஸ்புல்லாஹ்வை தொடர்ந்தும் இரண்டு முறை பாராளுமன்றத்துக்கு வாக்களித்து அனுப்பிய மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு ஹிஸ்புல்லாஹ் பதில் சொல்லாது இருந்துவிட முடியாதல்லவா? இதுதான் இன்று அஷ்ரஃப்புக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பனிப்போர்.

அம்பாறை மாவட்டத்திற்கு வெளியேயான முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கும் அஷ்ரஃபிற்குமிடையிலான முரண்பாடுகள் அம்பாறைக்கு வெளியில் வாழும் முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸ் மீதான நம்பிக்கையீனம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள உண்மை முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்களின் நம்பிக்கை வீழ்ச்சி, நீண்ட காலமாய் பதவியே கண்ணாக இருந்ததினால் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் தீவிர அதிருப்திகள், மோசடிகள், ஊழல்கள், உடைவுகள் இவற்றிற்கு மேலாக பங்காளியாகவிருக்கும் பொதுஜன முன்னணி அரசுக்கு நாட்டில் ஏற்பட்டுவரும் எதிர்ப்புகளும் அதிகாரம் கைநழுவிப் போய் விடுவதற்கான சமிக்ஞைகளும், தனது அமைச்சர் அந்தஸ்து கணக்கெடுக்கப்படாது குறைக்கப்பட்டதும் ஆன நிலைமைகளின் பின்னால் அஷ்ரஃப் அவர்கள் இப்போது புதிய அரசியல் வழியொன்றைத் தேட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

அந்தப் புதிய வழியின் ஆரம்பத்தை அஷ்ரஃப் அண்மைக்காலமாக ஒத்திகையோடு மெல்ல மெல்ல அரங்கேற்றி வருகிறார். இவ் அரங்கேற்றம் ஆரம்பிக்கும் போதே அஷ்ரஃப் மீது வலை வீழ்ந்திருக்கிறது. அதுதான் தீகவாபி புனித பிரதேசத்தில் புத்த பகவானை புனிதப்படுத்த மலர்த்தட்டு ஏந்திச் சென்றதற்காக அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபை அஷ்ரஃபுக்கு எதிராக மார்க்கத் தீர்ப்பு வழங்கி இருப்பதும் பெரும்பாலான முஸ்லிம்கள் அஷ்ரஃப் மீது அதிருப்தி அடைந்திருப்பதுமாகும்.

அண்மைக்காலமாக அஷ்ரஃப் கட்சியை புனரமைக்கவேண்டுமென 'மேடைகளிலும் கட்சிக் கூட்டங்களிலும் உணர்ச்சியாக பேசிவருவதும் உண்மை போராளிகளைத் தவிர முஸ்லிம் காங்கிரசில் இலாபங்களுக்காகத் தொற்றிக் கொண்டிருப்பவர்களை விலகிச் செல்லுமாறு கேட்பதும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையுடன் நெருங்கி வருவதும், தான் அமைச்சராக இருப்பதை விட கவிஞனாக இருப்பதை விரும்புகிறேன் என பிரகடனப்படுத்துவதும் இவ் அரங்கேற்றத்திற்கான சிறு உதாரணங்களாகும்.

அமைச்சர் அஷ்ரஃப் பழைய தட்டில் புதிய பூக்களை இப்போது ஏந்திவர தொடங்கிவிட்டார்! அஷ்ரஃபுக்கு பூக்கள் என்றால் மிகவும் பிரியம் - இதனை அமைச்சர் அஷ்ரஃப் அவர்களே அண்மைய ரூபவாஹினி பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

''வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை:
# பறிபோன தலைவர்கள்!



திருமலையில் கொல்லப்பட்ட சிறுவன் சராஜ் (4)

இரண்டுவார கால எல்லைக்குள் திருகோணமலையின் இரு தலைவர்களும் அவர்களுடன் இருந்தோரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உலகிலேயே இத்தகைய குறுகிய நாட்களில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பறிகொடுத்த இடம் திருகோணமலையாகவே இருக்கிறது.

ஜூலை மாதம் தொடர்ந்து இலங்கை நாட்டில் இருண்ட சம்பவங்களையே வருடா வருடம் கொண்ட மாதமாக இருந்து வருகிறது. ஜூலை மாதத்தை இருளவைத்த பெருமை தீர்க்கதரிசனமற்ற சுயநலவாதிகளான இலங்கை அரசியல்வாதிகளையே சாரும். எல்லோருக்கும் பங்கிடப்பட வேண்டிய கௌரவம், உரிமை, வாய்ப்பு, வளம், பொருளாதாரம் என்பவை ஒரு சிலருக்குள் பங்கிட்டுக் கொண்டால் போதுமானது என்று செயல்பட்ட அரசியல்வாதிகளால் விதைக்கப்பட்ட கறுப்பு ஜூலையின் விளைச்சலை இப்போது எல்லோரும் நெருப்பில்நின்று அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்.

ஜூலை 5ம் திகதி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரை அவர்கள் நகர மத்தியில் மங்கிய மாலைப் பொழுதில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் கூடவே மேலும் ஐவர் பலியாக வேண்டி ஏற்பட்டது.

திருகோணமலையின் முன்னணிப் பெண்கள் பாடசாலையான ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் (தேசிய) கல்லூரியின் கட்டிடத்திறப்பு விழா முடிந்ததும் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. விழா முடிந்து தேநீர் விருந்துபசாரத்தை ஏற்றுக் கொண்ட தங்கத்துரை அவர்கள் பாடசாலை வாசலில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் ஏற முற்படுகையில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதல், துப்பாக்கி வேட்டுக்கள் என்பவற்றால் கொல்லப்பட்டார். இவரை வழியனுப்ப வந்த கல்லூரி அதிபர் இராஜேஸ்வரி தளையசிங்கம் அவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினர் பெ.சி.கணேசலிங்கம் அவர்கள், தனது பாடசாலையில் குறைகளை பாராளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்த முயன்று கொண்டிருந்த நாமகள் வித்தியாலய அதிபர் சி.யோசப் அவர்கள், தங்கத்துரையின் நண்பரும் கொழும்பு விவேகானந்த கல்லூரியின் உப அதிபருமான கே.ஜீவரத்தினம் அவர்கள் ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

பலர் காயமடைந்த இச்சம்பவத்தில் கல்விப்பகுதிக் கட்டிடப் பொறியியலாளரும் நேர்மையான பொறியியலாளர் என்று மக்கள் மத்தியில் பெயர் பெற்ற இளைஞருமான வெற்றிவேல் ரட்ணராசா அவர்கள் வைத்தியர்களின் முயற்சியையும் மீறி பின்னர் மரணமடைந்தார்.

சரியாக பதினைந்தாவது நாள், ஜூலை மாதம் 20ம் திகதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப் மொகமட் எகுத்தார் ஹாஜியார் மஹ்ரூப் அவர்கள் நகரத்திலிருந்து ஆறுமைல் தொலைவில் பட்டப்பகலில் துப்பாக்கி வேட்டுக்கு இரையானார். அண்மையில் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஏழு இஸ்லாமிய இளைஞர்களையும், அவர்களது குடும்பங்களையும், இன்னமும் விடுவிக்கப்படாதிருப்போரின் குடும்பங்களையும் சந்தித்துக் குறைநிறைகளைக் கேட்டறியச் செல்லும்போதே நிலாவெளி வீதியில் இவ்வாறு கொல்லப்பட்டார்.

இவருடன் கூடச் சென்ற பாராளுமன்ற உறுப்பினரின் நண்பரான ஜனாப் ஐதுறுஸ் அப்துல் லத்திப் (57 வயது) (இவர் வான் எல புகாரி முஸ்லிம் வித்தியாலய அதிபர்) மெய்க்காவலர் ஜனாப் முகமது காசிம் அப்துல்லா (வயது 39), சாரதியான இப்றாகிம் மன்சூர் (39 வயது) அவரது மகன் மன்சூர் சறாஜ் (5 வயது) ஜனாப் உதுமான் (தொழிற் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர்

சாரதியான மன்சூர் சுமார் பன்னிரண்டு வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினரிடம் பணியாற்றிய்வர். மெய்க்காவலர் அப்துல்லாவும் ஏழு வருடங்களாக கூட இருந்தவர். 1989ம் ஆண்டு காலப்பகுதியில் கோமரன் கடவல என்ற இடத்தில் இதே பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் இனம்தெரியாதோரின் துப்பாக்கி வேட்டுக்குள்ளான சமயம் மிகவும் லாவகமாக வாகனத்தைச் செலுத்திப் பாராளுமன்ற உறுப்பினரைக் காப்பாற்றியவர் சாரதி மன்சூர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தங்கத்துரை அவர்கள் கொல்லப்பட்டதற்குப் பலரிடம் பலவிதமான காரணங்கள் இருக்கலாம். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர். அவரின் அரசியல் முறையில் வேறொரு சாரார் வெறுப்புற்றிருக்கலாம். ஏற்கெனவே பல தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் இந்த வரிசையில் கொலையுண்டு இருக்கிறார்கள்.

ஆனால் மஹ்ரூப்பைப் பொறுத்த மட்டில் அவர் எதிரிகள் இல்லாத மனிதராகவே வாழ்ந்து வந்திருக்கிறார். மூதூரில் ஏக தலைவனாக ஒரு காலத்தில் விளங்கிய ஜனாப் அப்துல் மஜீதை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிவாகை சூடியவர். தேர்தல் காலங்களில் மட்டுமே மஹ்ரூப் கட்சி சார்ந்த மனிதனாக மக்களிடம் அடையாளப்படுத்தப் படுபவர். தேர்தல் முடிந்ததும் பொதுமனிதனாகவே செயல்படுபவர். ஏற்றத்தாழ்வு பாராதவர். சிறுபிள்ளைகள் கூட அணுகிப் பேசக்கூடியதன்மை கொண்ட அரசியல்வாதி அவர் என்று பலராலும் பாராட்டப்பெற்றவர்.

இந்த மனிதரின் கொலைக்கான காரணகர்த்தாக்கள் விடுதலைப் புலிகளே என அரச சார்பிலான அறிக்கைகள் தெரிவிக்கின்ற போதிலும் மக்கள் ஐயப்பாடுடையவர்களாகவே காணப்படுகிறார்கள். தங்கத்துரை அவர்களின் கொலைக்கு விடுதலைப் புலிகளை அரசு சார்பு அறிக்கைகள் பொறுப்பாளியாகக் கூறியதை ''ஒருவேளை இருக்கலாம்'' என்று நம்பிய மக்கள் மஹ்ரூப் விடயத்தில் விடுதலைப் புலிகள் அவரைக் கொலை செய்ய என்ன தேவை என்று கேட்கிறார்கள்.

எவ்வாறாயினும் இரண்டு கொலைகளும் விடுதலைப் புலிகளால் இதுவரை மறுக்கப்படவில்லை. அதேபோல் உரிமை கோரப்படவுமில்லை என்பதும் கவனத்திற்கொள்ளத் தக்கது.

தங்கத்துரை அவர்கள் காலமானதையடுத்து பட்டியலில் அடுத்த கூடிய விருப்புவாக்குகளைப் பெற்ற இரா.சம்பந்தன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகிறார். தங்கத்துரை அவர்களின் விருப்பு வாக்குகள் 22409 ஆகவும் சம்பந்தர் அவர்களின் விருப்பு வாக்குகள் 19525 ஆகவும் உள்ளன.

ஆனால் மஹ்ரூப் மறைவையடுத்து (அவரது விருப்பு வாக்குகள் 17035) அடுத்துள்ள இடத்தில் ஆரியபால வல்பிட்டகம என்பவர் இருக்கிறார். இவர் பெற்ற விருப்பு வாக்குகள் 6799 மட்டுமே. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினராக சுனில் சாந்த ரணவீர பெற்ற விருப்பு வாக்குகள் 15084 ஆகும். அந்த இடத்தில் சேனசிங்க போதகப்பட்டிய ரஞ்சனியும் (வி.வாக்கு. 5166) அதனையடுத்து

→20

## யுத்தகால பாலியல் நடவடிக்கை!

வடக்கு நோக்கி பயணிக்கும் இராணுவத்தினரின் தரிப்பிடமாகியுள்ள அனுராதபுரத்தில் வெகு பிரசித்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விபச்சார தொழில் தொடர்பான கட்டுரையொன்று சென்ற வாரம் யுக்தியவில் வெளிவந்திருக்கிறது.

அந்தக் கட்டுரையை எழுதுவதற்காக சில நாட்களை அங்கு கழித்த யுக்திய பத்திரிகையாளர்களது முழு அறிக்கையையும் நாம் வெளியிடவில்லை. (அதற்கான காரணத்தை தெரிவிக்கும் சந்தர்ப்பம் அல்ல இது) பொதுவாக அவர்களது அறிக்கைகளை இவ்வாறு சுருக்கிக் கூறலாம்.

''இலங்கையின் இராணுவத்தினர்களில் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பிரதான நிலையமாக அனுராதபுரம் விளங்குகின்றது. எனினும், இந்நடவடிக்கைகள் ரகசியமாக மேற்கொள்ளப்படுவதால், இவ்விடயம் தொடர்பான சமூக விளக்கமும், தெளிவும், நோய் பற்றிய விளக்கங்களும் இவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை.''

இளமைக்காலம் வாழ்க்கையின் உத்வேகமான காலகட்டமாகும். குறிப்பாக பாலியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் விழித்தெழும் காலகட்டம் இதுவாகும். மனிதனின் பாலியல் செயற்பாடுகள் எழுச்சி பெறுவது 20 - 25 வயதெல்லையில் ஆகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தொன்று.

இராணுவத்தில் தொழில் புரிபவர்களில் பெரும்பாலானோர் இளமைக்காலம் என வரையறுக்கப்பட்ட 35 வயதுக்கு உட்பட்டோராக விளங்குகின்றனர். மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டு, யுத்த பிரதேசங்களில் சேவை புரிபவர்கள், சந்தோஷத்துக்காக கிடைக்கும் ஒரு வினாடியையும் இழக்க விரும்பமாட்டார்கள் என்பது நிச்சயம்.

இலங்கை யுத்த பிரதானிகளுக்கும் இது தெரிந்த விடயமே.

விடுமுறை பெற்று செல்லும் தறுவாயில், இராணுவத்தினர்களுக்கு இலவசமாக ஆணுறைகளை வழங்குவதும் இதனாலேயே ஆகும். இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கத்தினால் வருடாந்தம் லட்சக் கணக்காக இவை வழங்கப்பட்டு வருகின்றன.

யுத்த பிரதானிகள், இந்நடவடிக்கை மூலம் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டது என எண்ணுவார்களாயின் அது தவறு. எமது அறிக்கையாளர்களின் அறிக்கையின் படி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆணுறைகளை அணிய இளம் இராணுவத்தினர்கள் விரும்பவில்லை என்பது தெளிவடைகின்றது. விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்கள் தொடர்பாகவும் உரிய சுகாதார விளக்கமளிப்புகள் செய்து கொடுக்கப்படவில்லை. அனுராதபுரம் நகரத்தில் வசிக்கும் சுமார் 1000 விபச்சாரிகள் தொடர்பான சுகாதார அறிக்கைகள் எங்கும் இல்லை எனலாம்.

இலங்கை இராணுவம் இவ்வாறு யுத்தத்துக்கு முகம் கொடுப்பதற்கு முன்னம், இரத்தப் பரிசோதனைகள், சமூக நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் உக்கிர யுத்தத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் இவ்வாறான நிலைமை இல்லை எனலாம்.

பாலியல் தேவை, மனித சமூகத்தின் அத்தியாவசிய தேவை ஆகும். அதனை நல்லொழுக்க அடிப்படையில் எதிர்க்கும் வஞ்சகத்தன்மையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் அனுராதபுரத்தில் இடம்பெற்றுவரும் இந்நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

இவ்வாறான நிலைமை அனுராதபுரத்தில் மட்டும் வளர்ச்சியுறவில்லை. ரகசியமான முறையில் இத்தொழில் வெலிகந்த தொடக்கம் பதவிய வரையிலான உப நகரங்களிலும், கிராமங்களிலும் இடம் பெற்றே வருகின்றன.

இந்நடவடிக்கைக்கு எதிராக கண்மூடிக் கொண்டிருப்பது நல்ல விடயமல்ல.

இப்பாலியல் நடவடிக்கை காரணமாக யுத்த பிரதேசங்களுக்கு உரிய எல்லை கிராமங்களில் ஏற்பட்டு வரும் வேறுபாடு யாது?

2500 யுத்த சேனைகள் நிறுத்தப்பட்டிருக்கும் உப - நகரத்தில் இதன் காரணமாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் யாது?

நீண்ட கால யுத்தத்துக்கு முகம் கொடுத்த வியட்நாம் நாடுகளான பிலிப்பின்ஸ் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளும் இன்னும் அதன் விளைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. வியட்நாம் யுத்த பிரதேசத்திற்கு சென்ற அமெரிக்கா இராணுவத்தினரின் தரிப்பிடமான தாய்லாந்தில் 50 லட்சம் விபச்சாரிகள் தோன்றினர். இன்று தாய்லாந்து 'எய்ட்ஸ்' காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். உண்மையில் எயிட்ஸ் காரணமாக தாய்லாந்து நாட்டில் 10 லட்சம் பேர் மரணமடைந்துள்ளனர். வடக்கு பிரதேச யுத்தத்துக்கு லட்சக் கணக்கான இராணுவத்தினர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்களில் மோசமான பாலியல் நோய்க்கு உட்பட்டவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சுகாதார சேவையின் பெறுமதிமிக்க வாசகம் 'நோய் வருவதை தவிர்ப்பது, நோய்க்கு வைத்தியம் செய்வதை விட சிறந்தது' என்பதே. பிரச்சினையை பொலிஸாருக்கு பாரமளித்து விட்டு, அப்பாவி விபச்சாரிகளை சிறையில் தள்ளுவதை விட இது தொடர்பான சிறந்த பிரயோக ரீதியான தீர்மானங்களை எடுப்பது சிறந்தது என்பது எமது அபிப்பிராயமாகும்.

**யுக்திய**

**ஆசிரியர் தலையங்கம்**

1997-07-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோணேஸ்வரிகளுக்காய்...

## ஒழிவு மறைவின்றிக் காட்டியது!

ஜூன் 5 - ஜூன் 18 சரிநிகர் இதழில் வெளியிடப்பட்ட ''கோணேஸ்வரிகள்'' என்ற கவிதை வரிகள் ஒழிவு மறைவு இன்றி காம வெறியர்களினால் இரையாக்கப் பட்ட கோணேஸ்வரி எவ்வாறு பலாத்காரமாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாரோ அவ்வாறே தெட்டத் தெளிவாக கலா அவர்கள், பெண்ணியம் இழிவு படுத்தப்படும் விதத்தை ஏனைய சமுதாயத் தினருக்கு உணர்த்தும் வகையில் அக்கவிதை வரிகளை வடித்திருந் தமை ஆச்சரியமிக்கதாகவும், வியக் கத்தக்கவையாகவும் காணப்பட்டது.

ஆனால் சில வாசகர்கள் இக்கவிதை வரிகள் பெண்மையை இழிவுபடுத் துவதாகவும், தூசனத்தை வாசிப்பது போலவும், ஆபாசமாகவும், ஏனைய பெண்களை நிர்வாணப் படுத்தியதாகவும் அமைந்துள்ளது என கூறிய கருத்து யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும்.

என்னைப் பொறுத்தவரையில் இக் கவிதை வரிகளை வாசித்த போது நேரடியாக இச்சம்பவத்தை கண் முன்னே பார்த்த மாதிரி ஒரு பிரதி பலிப்பாக காட்சியளித்தது. அத்து டன் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட கொடுமையின் வெளிப்பாட்டை ஒரு பெண்ணானவள் உணர்ச்சி பூர்வமாகவும், ஆதங்கத்துடனும் இக்கவிதை வரிகளில் கையாளப் பட்ட சொற்பிரயோகம், ஆழமான கருத்துக்களை வெளிக்காட்டியி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*கே. லதன்*
*அக்கரைப்பற்று*

○

## பட்டவனுக்குத்தான் நோவு தெரியும்!

சரிநிகர் 123ம் இதழில் கோணேஸ் வரிகள் என்ற கவிதையை படித்த நான் கவிதைக்கான விமர்சனங்கள் எழுதவேண்டும் என எண்ணியி ருந்தேன். ஆனால் கவிதையின் விமர்சனங்களிற்கான விமர்சனங் கள் எழுதும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டேன்.

கவிதை பெண்களை கொச்சைப் படுத்துகின்றது. கவிதையின் வசன நடை வாசிக்க தகுதியற்றவையாக இருக்கின்றது. தூசண வார்த்தைகள் போல் இருக்கின்றது என பலர் விமர்சித்திருந்தார்கள்.

வாசகர்கள் ஒன்றை மனதினில் வைத்துக் கொள்ள வேண்டும். எமது விமர்சனங்கள் பத்திரிகைக ளில் இடம் பெற வேண்டும் என்ப தற்காக எழுதப்படக்கூடாது. உண் மையான யதார்த்த நிலைமைகளை புரிந்து கொண்டு கவிதையோ, கதையோ, அதில் உள்ள உண்மை யற்ற மக்களின் வாழ்க்கைப் பண்பு களிற்கு புறம்பான விதத்தில் எவையேனும் அமையின் அவற்றை குறைகளாக கூறலாம். அவை எல் லோராலும் பாராட்டப்படக்கூடிய வையாக அமையும். கவிஞர் எச் செயலை, எதனை மையமாக வைத்து கவிதையை புனைந்திருக் கின்றார் என்று பார்க்க வேண்டும். சாதாரணமாக இலங்கைப் பிரச் சினை விளங்காத ஒரு வெளி நாட்டவனிற்கு இதை மொழி யாக்கம் செய்து கொடுத்தால் விடயமேதும் அறியாத அவன் என்ன இது என்றுதான் கேட்பான். அவ்வாறல்லவா இருக்கின்றது சில விமர்சகர்களினது செயல்.

இக்கவிதை எதற்காக எழுதப் பட்டது என்பது கவிதையின் கீழ் துல்லியமாக கொடுக்கப்பட்டல் லவா இருக்கின்றது.

கவிதை பெண் இனத்தை கொச் சைப்படுத்துகின்றது என்று கூறியி ருக்கிறார்கள். அவ்வாறாயின் மேற்படி பொலிசார் செய்த விடயம், பெண்ணினத்தையும் மேம்படுத்து கின்றது என்று கூற இயலுமா, துன்பமான செயலை துன்பமான எழுத்துருவில்தானே எழுத முடி யும். இச்செயலை எவ்வாறு வெளிப் படுத்துவது? கவிஞர் வெளிப் படுத்தியது மிகவும் சிறந்தமுறை. கவிதையின் முதல் பத்தி மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. உணர்ச் சிகளின் மிகையான வெளிப் பாட்டை சொல் வடிவில் இதைவிட எப்படி எழுதுவது. இரண்டாம் பந்தி நிகழ்ந்த நிகழ்வு தமிழ் பெண்களை எவ்வகையில் பாதித்திருக்கின்றது என்றும், இனியும் பேசாமல் இருந் தால் இவ்வாறானவை தொடரும் என்பதையும் விளக்கியுள்ளது.

ஒரு வாசகர் புத்தரை கொச்சைப் படுத்திவிட்டதாக எழுதியிருந்தார். எங்கு அவ்வாறு கூறப்பட்டுள்ளது. கவிதையினை நன்றாகப் படியுங் கள். புத்தரின் வழியிலே வந்தோம் என்று அவர்கள் தான் புத்தரை கொச்சைப்படுத்துகின்றார்கள். அது தான் புத்தரின் வழியில் வந்தவர் களே என்று கையாளப்பட்டிருக் கின்றது.

உண்மையில் சாதாரணமாக போரின் எதுவித மணங்களையும் நுகராத நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் வாழும் தமிழ் தாய்க் குலத்திற்கு இது ஒரு மிகை யான கவிதையாய்த்தான் தெரியும். அவ்வாறானவர்கள் நாட்டில் இருப் பது அரிது. அதனால் அவர்கள் இவ்வாறு தான் விமர்சிப்பார்கள், சில வேளைகளில் இவ்வாறும் யோசிப்பார்கள். இக்கவிதையை விடுத்து சரிநிகர் இவ்விடத்தில் ராசி -பலன் போட்டிருக்கலாமே என்று, ஆனால் போர் மேகங்களால் சூழப்பட்டு எப்போது போர் வெள்ளம் வருமோ என இருக்கும் என் போன்றவர்களிற்கு இது மிகவும் ஆறுதலான வாசகமாக இருக்கும். ஆனால் நேரடியாக பாதிக்கப்பட்ட கோணேஸ்வரிக ளின் உறவினர்களிற்கு அவர்களின் ஆத்மா சாந்திக்காக பாடப்பட்ட பாடல் வரிகளாகக் கூட இக்கவிதை வரிகள் இருக்கலாம்.

பாத்திமா என்றொரு நபர் 'யோனி', 'நிர்வாணம்' என்ற வார்த்தைகளைப் பற்றி எழுதியிருந்தார். நிர்வாண மாக்கப்பட்ட பெண்ணின் யோனி யில் கிரனைட்டு வெடிக்கவைத்து கொலை செய்யப்பட்டால், சாரிய ணிந்த மங்கை தற்கொலை செய்து கொண்டார் என்றா எழுதுவது. நிர்வாணமாக்கப்பட்ட மங்கையின் யோனியில் குண்டு வைத்து கொன்ற கயவர்களின் மேல் உங்களிற்கு எதுவித குற்ற உணர்வுகளும் வர வில்லை. அவ்வாறான ஒரு பாதக செயலை பாமரர்களும் விளங்கும் வகையில் உணர்ச்சிகளின் வெளிப் பாட்டை இனிய தமிழில் வடித்த கவிஞர் மீது இவ்வளவு ஆதங்கங் கள் ஏன்? ''யோனி'', ''நிர்வா ணம்'' என்பன தமிழ் சொற்கள். இதில் வருத்தப்படுவதற்கு எதுவு மில்லை. சற்று சிந்தியுங்கள். உங்கள் அம்மாவின் பெண்குறியில் கிர னேட்டு வைத்து வெடிக்கப்பட்டு ஒரு பத்திரிகையாளன் வந்து என்ன நடந்தது என்று கேட்டால் ஐயோ பெண்கள் கொச்சைப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்று எண்ணி அப் பாதக செயலை மறைத்து ஒன்று மில்லை மாரடைப்பால் இறந்து விட்டார் என்றா கூறுவீர்கள். இப்படி பெண்களிற்கு நடக்கும் இழிவான செயல்களை மறைப்பது தான் கூடிய கொச்சைத்தனமாகும். இவ்வாறான கவிதைகளை கண்டு பத்திரிகையை மூடிவைக்காது அய லில் உள்ளவர்களிற்கு உரக்கப் படித்துக் காட்டுங்கள். யதார்த்த நிலைகளை புரியவைக்கத்தான் பத்திரிகை (கள்) உள்ளது.

''கலா'' என்பவர் உண்மையில் ஒரு கவிஞராகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. மேற்படி நிகழ்வு சாதாரண பெண்களையே இவ்வாறு எழுதத்தூண்டும், பெண்களிற்கு இழைக்கப்பட்ட கொடூரங்களில் உலகளாவிய ரீதியில் நான் கேள்விப் பட்ட மிகையான செயல் இதுதான். சிலரின் விமர்சனங்களிற்கு தயக்கம் கொள்ளாதீர்கள். முற்போக்கு கவிஞர்களே எழுதுங்கள். எழுது ங்கள். நிறைய எழுதுங்கள். கலா எழுதுவது போன்ற கவிதைகள் வாழத்துவண்டு கூனிப்போகும் பெண் சமுதாயத்தின் விலங் கொடிக்கும் சக்தியை கொடுக் கக்கூடிய மாத்திரைகளாக அமை யும். இவ்வாறான செயல்களை செய்ய எத்தனிக்கும் கயவர்களின் செயல்களை இவ்வாறான கவிதை களால் தடைப்படுத்த கூட இயலும். சிலர் ஆயுதங்களால் போராடட்டும். நீங்கள் அவர்களிற்கு இணையாக எழுத்தாணியால் போராடுங்கள். உங்களிற்கு துணையாக ஏராளமான விழுதுகள் இருக்கின்றன.

பட்டவனுக்குத்தான் நோவு தெரியும்.

*சிம்மான்*
*வவுனியா*

○

> குறிப்பு: 'கோணேஸ்வரிகள்' தொடர்பான உங்கள் கருத்துக் களை சுருக்கமாக எழுதியனுப் புங்கள்.
>
> ஆ-ர்

# ஏழுப்பேறு



## நம் நாட்டுப் பெரிய திரையில் 'பூலான் தேவி'

80 களில் இந்தியாவை பரபரப்பிலாழ்த்தியவர் பூலான்தேவி.

கொள்ளை, கொலைகாரியாக நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் மயிரும், மற்றும் சிலதும் கூச்செறிகிறபடி மொழிவாணனால் எமது உள்நாட்டு தமிழ் வாசகர்களை பிரமிக்க வைத்தவர். வயது வராத ஒரு பருவத்தில் மறைத்து வைத்து வாசித்து இன்புறக் கிடைத்தது. இச் சந்தர்ப்பத்தை இன்றைய தலைமுறையினர்க்கு 'ரசிகன்' சுவைசொட்டத் தந்துகொண்டிருக்கிறார். மொத்தத்தில் பல்வேறு வகை 'மீடியாக்களில் ''பூலான்'' தேவியாக உலவிக்கொண்டிருக்கிறார்.

நமக்கு வாசிக்கக் கிடைக்கிற பூலான்தேவிக் கதைகள் எந்த ஆதாரங்கள், தகவல்கள் அடிப்படையில் எழுதப்படுகிறது என்பது எமக்குத் தெரிவதில்லை. அல்லது 'பாமர' வாசகர்களான எமக்கு 'அறிவார்ந்த' எழுத்தாளர்கள் தெரியப்படுத்துவதுமில்லை.

எம் நிலை அப்படிப் போக, மாலா ஸென் என்ற இந்தியப் பெண் எழுத்தாளர் பூலான்தேவியை சந்தித்துரையாடி அவர் வாழ்க்கையைப்பற்றி அறிந்து நூலொன்றை எழுதியிருந்தார். அந்த நூலை அடியொட்டியதாக ஷேகர் கபூர் என்ற திரைப்பட நெறியாளர் Bandit Queen எனும் படத்தைத் தயாரித்துள்ளார். இப்படம் திரையிடப்படுவது தொடர்பாக பலத்த சர்ச்சைகளுக்கும், கெடுபிடிகளுக்கும் உட்பட்டது. எப்படியோ திரைக்கும் வந்தது. இந்தியாவில் பூலான்தேவி பற்றிய பரபரப்பான செய்திகள் போல் பூலான்தேவி பற்றிய படமும் பரபரப்பை ஏற்படுத்தியது. 'சென்ஸார்' பண்ணியது, பண்ணாதது என வீடியோ பிரதிகள் எம்மிடையே புழங்கின. அப்போது இது சம்பந்தமான குறிப்பொன்றை ஆழ்வார்க்குட்டி எழுதியிருந்தார்.

இப்போது இந்தப் பூலான்தேவி இலங்கையின் பெரிய திரைக்கு வந்துள்ளாள். இலங்கையின் ஆரம்ப கால தியேட்டர்களில் ஒன்றானதும் தமிழர் ஒருவரால் நிர்மாணிக்கப்பட்டதுமான கொழும்பின் பிரபல 'சவோய்' திரையரங்கில் இப்படம் காண்பிக்கப்படுகிறது. இத்திரையரங்கு 'A' படங்களுக்கு பிரசித்தமானது. ஆங்கிலப் படங்கள் மட்டுமே காண் பிக்கப்படுவது. (நான் அறிந்தவரை நொமியன மினிசுவும், சத்யஜித்ரே திரைவிழாப் படங்களுமே விதிவிலக்காய் காண்பிக்கப்பட்டன)

இத்திரையங்கு இப்போது EAP எதிரிசிங்க நிறுவனத்தின் கைக்கு மாறியுள்ளது. இந்நிறுவனம் சிங்களப் படங்களைத் தயாரித்தும், வேறுபடங்களை தருவிக்கும் நிறுவனமாகும். (இது அடவுக் கடைக்கும் பிரசித்தமானதாகும்)

திருத்தங்கள், கட்டண உயர்வுகளுக்கு பின் இலங்கை ரசிகர்களை நம்பி இந்த நல்ல படத்தை இறக்குமதி செய்துள்ளது. ரசிகர்களும் ஏமாறவில்லை போல் தான் தெரிகிறது. மற்றும் இது வார்த்தை ஜால சலப்பல்கார கதைக்காரர்களுக்கும் என்னவோ செய்யலாம்.

உயிரோட்டமாய், எல்லோரையும் ஒன்றச் செய்கிறதாய், மனதில் தைக்கிறதாய், கெமராவின் பூரண ஈடுபாட்டோடு தயாரிக்கப் பட்டிருக்கிறது படம். பாகிஸ்தானிய இசையமைப்பாளரான நுஸ்ரத் பதே அலிகானின் ஆர்ப்பாட்டமில்லாத இசையில் மனம் லயிக்கிறது. அஷோக் மேத்தாவின் கெமரா நிஜம் பேசுகிறது. எல்லாவற்றையும் விட பூலானாக நடித்திருக்கும் 'சீமா பிஸ்வாஸ்' நடிக்கவில்லையென்றே கூறலாம்.

ஓரிரு மணித்தியாலங்களுக்குள் ஓராயிரம் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. மொழி பெயர்ப்புத் தலைப்புக்கள் இட்டிருக்கலாம். (விடியோப் பிரதியில் இருந்தது) எனினும் மொழி ஒரு தடையாகவே இருக்காது. முற்றிலும் உளவியல் பாதிக்குட்பட்டவளாக காட்டப்படுவது போல் உள்ளது. அதுவே உண்மையுமாகவே இருக்கலாம். படம் முடிந்து வெளிவருகையில் ஒரு குற்றவுணர்வு ஏற்படுகிறது மொத்தமாக எல்லாவற்றிலும், எல்லோரிலும்.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான நிஜ பூலான்தேவி பற்றிய லேட்டஸ்ட் தகவல் அவர் இந்தியா மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்படுவதை எதிர்த்து போராட வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார். அண்மையில் தமிழ்நாட்டுக்கு, மீனவ நலன் சார் மாநாட்டுக்கு சிறப்பு அதிதியாக வந்து உரையாற்றுகையிலேயே இந்த அழைப்பு விடுத்துள்ளார்.

மணிக்கணக்காய் எழுதி நாட்கணக்காய் வாசிக்கவும், ஓரிரு மணிகளுக்குள் சிலிர்த்துப் போகவுமான சந்தர்ப்பம் எமக்கிருக்கிறது.

திருப்தியை அனுபவிப்பவர்கள் பெறுவார்களாக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிளவுண்ட மனங்களும் நாடோடிப் பாடல்களும்

யமுனா ராஜேந்திரன்

## செட்டை கழற்றிய நாங்கள்

- ரவி -

வெளியீடு:

**விடியல் பதிப்பகம்**

*1. சிறுநீர் கழித்தாலே*
*குழி விழும் மணல் பரப்பில்*
*புழுதிவாரி எறியும் காற்றிலும்*
*அநாயசமாய்*
*துள்ளித் திரிந்தேன்.*

நிறபேதம் மூன்றாம் உலக நாடுகள் சம்பந்தமான இச்சமூகத்தின் கருத்தியல்கள், தொடர்புச் சாதனங்களின் பிரச்சாரங்கள், கலாசார முரண்பாடுகள், காலைநிலைத் தாக்கங்கள் என்பன பற்றிய புரிதல்கள் பெறாத / பெறச் சாத்தியமில்லாத நிலையிலுள்ள எவரும் புலம்பெயர்ந்தோரின். உணர்வு நிலைப் பாதிப்பை புரிந்துகொள்வது இயல்பானதல்ல. பெறும் பொருளாதார ரீதியான ஒப்பீடுகளும், இந்த வாழ்வியலின் அடிப்படைத் தேவைகளை சொந்த நாட்டின் ஆரம்ப வசதிகளோடு பொருத்திப் பார்க்கும் பார்வையும் சேர்ந்து இவற்றைத் தாண்டி புலம்பெயர்ந்தோரின் மனநிலைகளைப் புரிந்து கொள்ளவிடாமல் தடுத்து விடுகிறது.

**(ரவி - செட்டை கழற்றிய நாங்கள்)**

சோவியற் யூனியனைப் பற்றிய விமர்சனம் என்பது ஒரு சோவியத் எதிர்பாளரால் மட்டுமே மேற்கொள்ளப்படமுடியும். சீனா பற்றிய விமர்சனம் என்பது ஒரு சீன எதிர்ப்பாளரால் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும்.

ஸால்வடார் கம்யூனிஸ் கட்சிப்பற்றிய விமர்சனத்தை ஒரு சி.ஐ.ஏ.ஏஜென்ட் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

சுயவிமர்சனம் தற்கொலைக்கு ஒப்பானது

(ரோஜ் டால்டன்/ எல்ஸால்வடார் கவி in After lives)


பெர்ட்டோல்ட் பிரெக்ட், பாப்லோ நெரூடா, அன்ரு அக்மதோவா, மொஹமத் தர்வீஸ் என கவிஞர்களின் தொகுப்புக்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வந்துள்ளன. மாவோ வின் கவிதைகளும் வந்துள்ளன. குவேராவின் கவிதைகளும் தொகுக்கப்பட்டுள்ளது. பொதுவாக அதிக அளவிலும் அரசியல் சார்ந்த மனிதர்களின் அகவுலக நெருக்கடிகளை வெளியிடும் இக்கவிகள் தமிழ்ச் சூழலில் அதிகமாகக் கவனிப்புப் பெறவில்லை. இப்புத்தகங்கள் பற்றி விரிவான மதிப்புரை களோ, விமர்சனங்களோ தமிழில் எழுதப்பட வில்லை. இதற்கான காரணங்கள் என்ன? தனது அனுபவப் பரப்பிற்குள்ளும் அறிவெல்லைக ளுக்கும் வராத படைப்புக்கள் மற்றும் மனிதர்களின் அனுபவங்கள் பற்றி தமிழ் வாசகன் அக்கறைக் கொள்வதில்லையென்றே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. தமது அடைத்துக்கொண்ட முகங்கள் தமிழ் வாழ்வின் உணர்ச்சி அனுபவப் பரப்பு தவிர, பிற அறிவுத்துறைகள், பிற மனிதர்கள் பற்றின அக்கறை தமிழருக்கு இல்லையென்பதையும் காரணமாகக் காணமுடியும்.

அனுபவங்களின் மேற்பரப்புக்குள் நின்று சிலாகிக்க மட்டுமே இவனுக்குத் தெரிகிறது. தன் அகந்தையை வெளியிடுவதும் கற்பனைப் புரட்சியைப் படைப்பதுமே தமிழ்க் கவிதையின் இரண்டு எல்லைகளாக நீள்கிறது. விடுதலைப் போராட்டம் பற்றிய கவிதைகளை வன்முறை, வன்முறை ஏற்படுத்தும் அவலம் என்பதைத் தாண்டி இலகுவில் பார்க்க முடிவதில்லை. இன்று விடுதலைப் போராட்டம் பற்றிய கவிதைகள் சேரன், ஜெயபாலனைத் தாண்டியும் பிறிதொரு பரிமாணத்துக்கு வளர்ந்து விட்டது. ஞானக் கூத்தன் தொடங்கி வைத்த பின் நவீன எதிர் கவிதையின் திசை இன்று தேங்கிவிட்டது: விக்கிரமாதித்தன் தனக்குள்ளாகவே சுற்றிச் சுற்றி வருகிறார். இன்குலாப்பின் [illegible]தைகள் அரசியல் பிறவாழ்வுக் கவிதைகள் என்பதற்கு மேல், அரசியலில் ஈடுபட்ட மனிதனின் அகவுலக் நெருக்குதலை பதிவு செய்யும் நுண் புலத்திற்குள் போகவில்லை.

வழிபாடு சேரன்/ பசுவய்யா/ இன்குலாப் ஞானக்கூத்தன் என்று அவரவர் சார்பு நிலைக் கேற்ப நிலவுகிறது. தமிழில் இவர்களைத் தாண்டி கவிதை இன்னொரு பரிமாணத்திற்கு வந்திருக்கிறது. போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டு அதன் அனுபவங்களைத் தாங்கி, வேறொரு உலகின் அனுபவங்களையும், குரூரங்களையும் தாண்டியும், தாங்கியும் கவிதை வந்திருக்கிறது. இளவாலை விஜயேந் திரன், அரவிந்தன், சுகன். ரவி போன்றோர் எழுதும் கவிதைகளை இவ்வகையில் குறிப்பிட முடியும்.

இவர்களின் கவிதைகள் பற்றிப் பேசுவதற்கு பழைய கவிதைகள் பற்றிய மதிப்பீடுகள் போதாது. தமிழுக்கு வெளியில் இருக்கிற, பிற தமிழர்கள் எதிர்கொள்ளும் வரலாறு, தம்மை பாதிக்கும் பல்வேறு அரசியல், கலாசார நிகழ்வுகள் ரணங்களை தமிழர் புரிந்து கொள்ள முயலவேண்டும். தலித் எழுத்தாளர்களின் கலைத் தரம் பற்றிப் பேச எவ்வாறு புதிய விமர்சன எல்லைகள் வேண்டுமோ அதைப் போல் புலம்பெயர் எழுத்தாளனின் பிளவுண்ட மனநிலை பற்றிப் பேசவும் புதிய விமர்சன மதிப்பீடுகள் தேவையாகிறது.

பல்வேறு மொழி புலம்பெயர்ந்த எழுத்தாளர் களின் உலகங்களைப் புரிந்துகொள்கிற அதே பயிற்சியும் படிப்பும் புரிதலும் தமிழில்




எழுதுகிற புலம்பெயர்ந்த எழுத்தாளனைப் பற்றியும் புரிந்து கொள்ளத் தேவையாகிறது.

இப்படிப் புரிந்துகொள்வதற்கான மனத்த டையும்/ உதாசீனமும் தமிழகத்திலும், ஈழத்திலும் இருக்கிற எழுத்தாளர்கள்/ வாசகர்கள் மத்தியில் நிலவுகிறது. புலம் பெயர்ந்த எழுத்தாளன் பொருளாதார போகத்திலும் நிம்மதியான பாதுகாப்பான வாழக்கையும் பெற்றிருக்கும் என்ற எண்ணம் தான் இத்தகைய அணுகுமுறைக்கான காரணம்.

புலம்பெயர்ந்த எழுத்தாளனின் இருத்தல் இத்தகைய கற்பிதங்களுக்கு நேர்மாறானது. சொந்த நாட்டு நினைவின் ரணங்களுக்கும், புலம்பெயர்ந்த நாட்டின் ஊசிக் குளிரின் காயத்துக்கும் அனுபவங்களுக்கும் தீண்டத் தகாது சுரண்டப்படும் நிராகரிப்புகளுக்கும் இடையிலான தீராத வேதனையில் கழிகிறது அவன் வாழ்வு.

இவனைப் பொறுத்து நிலப்பரப்புக்கள் (Landscapes)தான் வேறு. அங்கே அரச உத்தியோகஸ்தராக இருந்தால் இங்கு தெருக்கழிவு சுத்தம் செய்பவனாக இருப்பான். அங்கே பொறியியலாராக இருந்தவன் இங்கு பெட்ரோல் பாங்க் கிளார்க்காக நாயாக வேலை செய்வான். அதிவிஞ்ஞான தொழில்நுட்பமும் நிறவாதமும் 'நிலைப்படுத்தப்பட்ட' (Standardi-fied) வெள்ளைக் கருத்தியலும் இவனை கடைக் கோடி நிலையில் தான் வைத்திருக்கிறது.

சொந்த நாட்டின் அரசியல், ரணங்கள், உறவுகளுக்கான பொறுப்புக்கள், நம் கண்முன் தெருக்களில் விழும் சிறுபான்மையினர் பிணங்கள், தனக்குச் சொந்தமில்லாத விடி காலைத்தெருக்கள் எனத்தான் இவன் வாழ்கிறான்.

இவனது கவிதைகளில் அழகைப் பார்ப்ப தென்பதும், அமைதியை, அன்பை தரிசிப்பது என்பதும் அரிதானது. ரவியின் கவிதைகளில் சொற்கள் ஒருவகையான வன்முறையில் நொறுங்கிச் சரிகிறது. அழிவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. நம்பிக்கையின்மைதான் வீழ்ந்து கிடக்கிறது. இந்த நம்பிக்கையின்மையும் அழிவும், வன்மமும், வாழ்ந்து பெற்ற அனுபவத்திலிருந்து வருவது.

செட்டை கழற்றிய நாங்கள் தொகுப்பில் மூன்று மாதிரியான கதவுகளை நோக்கி ரவி மோதி, மறுபடி மீண்டும் மோதுவதை என்னால் அவதானிக்க முடிகிறது. தாய் நாட்டின் மண் நிலப்பரப்பு இயற்கையில் புரண்டெழுகிறார். சொந்த நாடும், வந்தநாடும் அழிவை மட்டுமே இவருக்குத் தந்திருக்கிறது. எதிலேனும் அர்த்தமும் வாழ்வதில் நியாயம் இருக்கிறதா என தனக்குள் கேட்டுக்கொண்டு மனசின் இருண்ட அறைகளுக்குள் புதைந்து விழுகிறார்.

2.

*உப்பு நீரில் பாரம் கழுவி*
*புனித வேள்வியின் தயாரிப்புக்காய்*
*அக்கரை சென்றதும்*
*சவுக்கம் தோப்பில்*
*விரக்தியை வாங்கி*
*தற்செயலாய் இக்கரையில் சேர்ந்ததும்....*

**(ரவி - செட்டை கழற்றிய நாங்கள்)**

புனித வேள்விக்காக அக்கரை சென்றதற்கும் விரக்தியை வாங்கி தற்செயலாக இக்கரை சேர்ந்ததற்குமான கால இடைவெளியில் ரவியின் கவிதைகள் வேர் பிடிக்கின்றன. வேள்வி விடுதலைப் போராட்டம் என்பது நாம் எல்லோரும் அறிந்தது தான். விரக்திக்கான காரணங்கள் எல்லோருக்கும் உரிவை.

கவிதை, படைப்பு என்பது தான் என்ன என்கிற கேள்வி அடிக்கடி எனக்குள் வருகிறது. புத்திசாலித்தனமான சொல்லாடல்களா, எறிச்சலூட்டும் அபிப்பிராயங்களா, தன் மோக பிரகடனங்களா, உள் மனக்குகை ஓவியங்களா? எது கவிதை? நான் சொல்லுகிற இந்த அனுபவங்கள் தான் எழுத்துக்களில் எனக்கு உடனடி சாத்தியங்கள் என்றால், அவை கவிதைகள்/ படைப்புக்கள் அல்ல என எனக்குத் தெரிகிறது. இந்த 'அறிவை' விடவும் சாராம் சமான அனுபவங்கள் நமக்குள் எல்லோருக் குள்ளும் நிறைந்திருக்கிற போது அந்தப் பக்கங்களை விரல் நுனியில் வேகமாக தள்ளி விட்டுப் போய் விடுகிறோம்.

அப்படியானவைகளை முதலில் தள்ளிவிட்டு நுழைகிறேன். அப்படி ரவியிடம் கொஞ்சம்தான் இருக்கிறது. இப்படி நான் புறம் தள்ளுகிற கவிதைகளில் (?) கூட சில வரிகள் சுரீர் என தைக்கத்தான் செய்கின்றன. ஒரு பழைய மாணவன் அறிக்கை, இன்னொரு அவனும் அதே அவளும், புதிய உலகம், நிகழ்வுகளும், நிகழ்த்துதலும், பிரசுரமாகும் ஒரு கடிதம், நட்சத்திரங்களே வருக போன்ற கவிதைகள் ஒரு சில பிரச்சினைகளுக்கான எதிர் வினைகள் என்பது தவிரவும் எந்த தீவிரமான அனுபவத் தையும் எனக்கு ஏற்படுத்தவில்லை.

ரவியின் மன உலகம் நம்பிக்கையின்மையிலும், இருண்மையிலும் தேடித் தவிக்கிறது.

தாய் நாடு பற்றிய கவிதைகளில் அர்த்தமற்ற சாவுகள், திசை தவறிய இலட்சியங்கள் அவரை நம்பிக்கையின்மைக்குத் தள்ளுவதை போலவே, இக்கரையில் தனது உடலும் மூச்சும் கூட அதனது சுயத் தன்மையில் அங்கீகரிக்கப் படாமல் நிர்ணயமான சட்டங்களுக்குள் பூட்டப்படுகிறபோது வாழ்வது குறித்த நம்பிக்கையின்மை இன்னும் தீவிரப்படுகிறது.

புலம்பெயர்ந்த மனிதனின் அனுபவ உலகிற்கு செயல்படும் நெருக்கடிகள் என்ன? அவனது படைப்புக்களில் இடம்பெறும் சிக்கல்கள் எத்தன்மையானவை? ஆதார நாட்டிலிருந்து அவன் பிரச்சினைகள் எவ்வாறு வேறுபடு கின்றன? அவனது படைப்புக்களைப் புரிந்து கொள்வதன் பொருட்டு ஆதார நாட்டு மனிதனோ விமர்சகனோ பூர்வாங்கமாக அவன் திறந்து கொள்ள வேண்டிய கதவுகள் எவையெவை?

நிச்சயமாக புலம்பெயர்ந்த படைப்பாளிகளின் மீதான வெறுப்பை அவன் கைவிடவேண்டும். படைப்பு பற்றிய தனது மதிப்பீடுகளை மறுபரி சீலனைக்கு உள்ளாக்கவேண்டும். புலம் பெயர்ந்த படைப்புக்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டாலும் இதுவரைத்திய தமிழ் இலக்கியத்தின் எல்லைகளுக்குள் வைத்து மட்டும் அவற்றின் தன்மையை அவன் மதிப்பிட முடியாது.

புலம்பெயர் படைப்புக்களில் தென்படும் அர்த்தமற்ற கொலைகள், மாற்று அபிப்பிராயத் துக்கான சுதந்திரம் கோருதல், தனது இயற்கை வேர்கள் அழிவது குறித்த அவனது கதறல் போன்றன ஆதார நாட்டு எழுத்தாளனோடு பொதுத்தன்மைகள் கொண்டவைதான். ஆனால் புலம்பெயர்ந்த எழுத்தாளனின் படைப்புக்களில் வெளிப்படும் நிலப்பரப்புக்கள், அனுபவங்கள், சொற்றொடர்கள் முற்றிலும் அவனது அனுபவத்தின் நின்று மையம்கொண்டு வருபவை. புலம்பெயர்ந்த படைப்புக்களில் தீராது அவஸ்தையாக இடம்பெறுவது தாய் நாட்டு மண் நிலப்பரப்பு சீதோஷணம் மரம், செடி, கொடிகள் கூட்டு வாழ்க்கை முறைகள் குறித்த அவனது துக்கம். புலம்பெயர்ந்த சூழலில் இட்டுநிரப்பப்பட முடியாத ஏக்கம் இது.

ரவியின் கவிதைகள் பெரும்பாலும் அழிவு பற்றியவைதான். சாவுபற்றியவை, மனித உடலின் இயற்கையின் நீலப்பறவையின், மாற்றுக் கருத்து சாவுப் பற்றியவை. நினைவுக ளின் வேர்களை நிரூற்றில் பாதுகாக்குமாறு அம்மாவை வேண்டுபவை. தான் திரும்பவும் தாய் நாடு வரவேண்டும், ஆனால் முடியுமா என்ற சந்தேகத்திலும் அவலத்திலும் தோன்றுகிறவை.

இயற்கை இவரது கவிதைகளில் அனேகமாக அழிவின் சாவின் குறியீடாகவே இடம் பெறுகிறது.

ரவிக்கு -

*நட்சத்திரங்கள் உதிர்ந்த பானம்*
*கவிழ்ந்து*
*தலைமேல் கிடக்கும்*

**/பக்கம் 17**

*இரத்த வாடையை*
*சுமந்து சுமந்து*
*களைத்துப் போய் விட்ட காற்று*
*தவழ்ந்து திரியும்*

**/ பக்கம் 22**

*ஊதிப் பெருத்த ஓர்*
*இரத்தத் துளியாய்*
*பிய்ந்து*
*தொங்கியது சூரியன்*

**/பக்.26**

*புகையிலையின் கொலை நடந்து*
*பசுமை போயிற்று*
*ஆடை கலைந்து*
*அம்மணமாய் வீழ்ந்த நிலம்*

**/பக். 29**

*புளுதியில்*
*புரண்டு அழுத துளிகள்*
*மேனி சிதைந்து*
*வெள்ளமாய் மரணித்தன.*

**/பக். 32**

*வெட்டப்பட்ட எனது இறக்கைகள் மீதான*
*வேட்கையில்*
*மேலும் அவதியுறுகிறேன்*

**/பக் 34**

*ஓடையும் செத்துக் கிடப்பதாக*
*அது நாவறண்டு செய்தி சொல்லிற்று*
*மரங்களும் மனம் சலித்து*
*இரகசியமாய் ஏதோ பேசுகின்றன*

**/பக் 36**

மழை, காற்று, நதி, நட்சத்திரங்கள், இறக்க கைகள், பசுமை சூரியன் என இயற்கையின் அனைத்து ஜீவனான சக்திகள் எல்லாமே ரவியின் கவிதைகளில் சாவின் குறியீடாக விடுகின்றன.

அடுத்த இதழில் முடியும்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலையை மையப்படுத்திய சில நிகழ்வுகள்

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கியதிலிருந்து வடகிழக்கு வாழ் மக்கள் யுத்தகால நெருக்கு தல்களுக்குள்ளாகிப் போனதும், அதுவே வாழ்வாகிப் போனதுமாக அல்லலுறுகிறார்கள்.

போராட்டத்தின் இலக்குகள் திசை மாறிப் போய் பரிமாணங்கள், பரிணாமங்கள் பெற்றவேளை சகல தரப்பாலும் அதிகம் அவதியுற்றது அப்பாவிப் பொது மக்களே. இது யுத்தச் சூழலின் தவிர்க்க முடியாத நியதி எனினும், கட்டாயம் தவிர்க்க வேண்டிய நிகழ்வுகளை அதிகம் கொண்டிருக்கிறது என்பதும் கண்கூடு.

இப்போக்கில் தற்போதைய களவீரர்களான அரச இராணுவமும், விடுதலைப் புலிகளும் அப்பாவி மக்களை அவஸ்தைப்படுத்துவதில் முன்னிற்கிறார்கள். இதில் ஒரு அங்கமாக இலங்கையின் மூன்றாம் தரப்பான முஸ்லிம்கள் மீது குறிப்பாக கிழக்கு வாழ் முஸ்லிம்கள் மீது (வடக்கு, முஸ்லிம்களற்ற மண்ணாகி பல வருடங்களாகின்றன) அண்மைக்காலமாக மீண்டும் ஆரம்பமாகியுள்ள புலிகளின் கெடுபிடித் தனங்கள் பற்றிய ஓர் மேலெழுந்த அவதானமே இப்பக்கக் கட்டுரைகளாகும். அதிலும் குறிப்பாக இக்கட்டுரை திருமலையின் அண்மை நிகழ்வுகளை கருத்திலெடுக்கிறது.

திருமலை எப்போதும் ஒரு பாதுகாப்பான நகரமாகவே கொள்ளப்படுகிறது. இங்கு அமைந்துள்ள முப்படைகளின் கேந்திரஸ்த்தானங்களால் ஏற்பட்ட ஓர் எண்ணமே அதுவாகும். ஆனால் அவை எந்தளவு மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்தது என்பது கேள்விக்குறியே. மிக அண்மை வரை திருமலை நகரின் இரண்டு, மூன்று மைல் சுற்றுவட்டாரப் பகுதி ஓரளவு பாதுகாப்பைக் கொண்டதாகவேயிருந்தது. இது இப்போது பொய்த்து வருகிறது. நகரின் மத்தியில் வைத்து தங்கத்துரை எம்.பி.யும், ஐந்து பொது மக்களும் கொல்லப்பட்டது இதற்கு நல்ல உதாரணமாகும். எனினும் கூட்டாக புலிகள் தரைமார்க்கமாக வந்து நேரடி மோதல்கள் மேற்கொள்ள முடியாதென்பதில், திருமலை நகரப் பாதுகாப்பில் மக்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.

இந்த நகருக்கு ஆறு, ஏழு மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்கள் பெரும்பாலும் புலிகளின் நடமாட்டப் பகுதிகளாகவும், தாக்குதல்களுக்கு ஏதுவான இடங்களாகவும் இருக்கின்றன. இவ்வாறான பிரதேசங்களில் பல முஸ்லிம் கிராமங்களும் அடங்குகின்றன. நிலாவெளி, குச்சவெளி, இறக்கக்கண்டி, புடவைக்கட்டு, புல்மோட்டை, தோப்பூர், கிண்ணியா என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்விடங்களிலெல்லாம் அரச படைகள் தங்கள் முகாம்களை அமைந்திருந்தாலும் அவை மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமானதல்ல.

மேற்குறித்த கிராமங்களில் புல்மோட்டை தோப்பூர் பகுதிகள் நேரடியான புலிகளின் நடமாட்டத்திற்கு உட்பட்டவையாகும். அவர்கள் எப்போதும் அப்பகுதி வாழ் மக்கள் மீது தங்கள் பலத்தை பிரயோகிக்க முடியும். அவர்களை நிர்ப்ட, நத்திற்கு உள்ளாக்க முடியும். இதன் கராணமாக அவர்கள் இராணுவத்தின் சந்தேகங்களுக்கும் ஆளாகிறார்கள். அவர்களால் தங்கள் பாட்டில் வாழ முடியாத நிலையே இப்பகுதிகளில் நிலவுகிறது. ஆளுக்காள் 'சப்போட்டர்கள்' என்று குற்றஞ்சாட்டியே ஆட்டி வைத்திருக்கிறார்கள்.

புல்மோட்டை முஸ்லிம்களில் சிலர் படையினரால் பழிவாங்கப்பட்டதற்கு (இது பற்றிய செய்தி முன்பொரு முறை சரிநிகரில் வந்திருந்தது) 'சப்போர்ட்டர்' எண்ணக்கருவே காரணமாகும். இன்றும் கூட அப்பிரதேசங்களில் பலர் வேறிடங்களில் வாழ்வைக் கழிக்கிறார்கள்.

அடுத்தது, அதிகம் பாதிப்புறுவது தோப்பூர் பகுதி மக்கள். இவர்களிடம் புலிகள் அடிக்கடி கப்பம் கேட்கிறார்கள். இக் கப்பக் கோரிக்கை மூதூர், கிண்ணியாப் பகுதிகளிலும் இடம்பெறுகிறது. தோப்பூரில் கப்பம் கோரி கொடுக்கத் தாமதமாகி ஒருவர் கொல்லப்பட்டதும்( உரியவரன்றி அவரைப் போல் ஆடையணிந்த வேறொருவர்) நிகழ்ந்துள்ளது. அத்துடன் மாணவர்களும் பணயமாகப் பிடிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அப்பாவிப் பொது மக்கள் அறுவர் தோப்பூர் வைத்தியசாலையருகே புலிகளின் துப்பாக்கி வேட்டுகளுக்கு இரையாகினர். இதில் ஓர் கர்ப்பிணிப் பெண்ணும் கொல்லப்பட்டதே கடும் துயரமானது. பொதுவாக இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான சண்டையில் அகப்பட்டு பொது மக்கள் அகால மரணமடைவர். ஆனால் இந்தச் சம்பவத்தில் அப்பாவிகள் மீதான தாக்குதலின் இடையில் அகப்பட்டு இரு பொலிசார கொல்லப்பட்டிருக்கின்றனர். கொல்லப்பட்டவர்களில் இரு அப்பாவித் தமிழர்களும் அடங்குவர். இப்பிரதேச பொலிஸ், இராணுவ காவலரண்கள் அடிக்கடி புலிகளின் தாக்குதலுக்குள்ளாவதால் இப்பகுதி முஸ்லிம்கள் தம் உயிர்பற்றிய அச்சத்தை அதிகம் உணர்ந்துள்ளனர். தாக்குதலில் இலக்குகள் திசை மர்றிப்போவது அல்லது வேண்டுமென்றெ திசை திருப்பப்படுவது இவ்வச்சத்திற்கான காரணமாகும்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக, பொதுவாக மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை விட இவர்கள் அதிகப்படியான கஷ்டங்களை எதிர்கொள்கிறார்கள். இவர்களின் சுதந்திர இருப்பு எச்சரிக்கைகளுக்குள்ளாகியிருக்கிறது. துப்பாக்கிகள் குறிபார்த்துக் கொண்டிருக்கின்றன. கட்டாயக் கொடுப்பனவுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். உயிருக்காக மௌனித்துக் கிடக்கிறார்கள்.

இந்த நிலை வேறு சில பிரதேசத்தவர்களுக்கும் பொருந்தும்.

மூதூரைப் பொறுத்தவரையும் புலிகளின் கெடுபிடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊழியர்களுக்கும் மாதச் சந்தாக் கப்பம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இது பயம் காரணமாக வெளிப்படுத்தப்படாதிருக்கிறது. பலர் ரகசியக் கொடுக்கல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆசிரியர்களிடம் கோரப்பட்டிருக்கிற தொகை 500/= எனப்படுகிறது. ஒவ்வொருவரும் இதனால் விரக்தியுற்றிருக்கிறார்கள். சமீபத்தில் சமுர்த்தி முகாமையாளர் சம்பள உயர்வு பற்றி பத்திரிகைகளில் வந்த போது ஒருவர் விசனப்பட்டு இவ்வாறு கூறினார். ''பேப்பர்ல போட்டுட்டானள், இனிமேல் கணக்குப் பார்த்து காசு கேட்பானள்'' ஒவ்வொருவரின் மன நிலையும் இவ்வாறு இருந்தாலும் வெளிக் காட்டமுடியாத நிலையிலும் இராணுவத்தைப் பகைத்துக் கொண்ட நிலையிலும் உரிய தொகையை பெரும்பாலோர் வழங்கியே வருகிறார்கள்.

இப்பகுதி மக்களுக்கு தங்கள் இருப்பின் அவசியம் உள்ளது. சில வருடங்களின் முன் இப்பிரதேசத்தின் அதிகமான மக்கள் புலிகளால் தாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்ட நிலையில் கிண்ணியாவில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

அண்மையில் மூதூர் நகர மத்தியில் வேறொரு இயக்க உறுப்பினரைக் கொல்வதற்காக பாடசாலைச் சீருடையில் புலிகள் சிலர் வந்துள்ளனர். பட்டப்பகலில் மக்கள் மத்தியில் நடந்த கொலையை கண்ணுற்ற மக்கள் வந்தவர்களை கற்களால் தாக்கியுள்ளனர். மக்களின் கல்லெறிகள் பட்டும் கையில் துப்பாக்கி இருந்தும் கூட ஒருவரை நோக்கியும் சுடவில்லை. அவர்களில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இராணுவம் செத்த உடலின் மீது வேட்டுக்கள் தீர்த்து வீரம் காட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவத்தால் ஏதும் நிகழலாம் என மக்கள் அச்சப்பட்டிருந்தாலும் புலிகளின் தற்போதைய நிலையை உணர்ந்தவர்களாகவும் உள்ளனர்.

குறித்த நபர் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மக்களைச் சுட்டிருக்கலாம். 'சுடக்கூடாது' அதுவும் குறிப்பாக முஸ்லிம்களைச் சுடக்கூடாது என்று புலிகள் கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறார்கள் போல. அதுதான் சுடவில்லை. என்று சிலர் நம்பிக்கையும் தெரிவித்தனர். இது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் அதன் பின்னர் நடந்த சம்பவங்கள் நம்பிக்கையை தகர்த்து விட்டதென்றே கூற வேண்டும்.



ஏனெனில் மேற்குறித்த சம்பவத்தின் பின்னரே தோப்பூர் சம்பவமும், மஹ்ரூப் எம்.பி.யுட்பட அறுவரின் கொலைச் சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது. மஹ்ரூப் கொலையில் பல்வேறு ஊகங்கள் சந்தேகங்கள் தெரிவிக்கப்படினும் இன்றைய நிலையில் புலிகளைத் தவிர வேறெவரும் இதைச் செய்யக்கூடிய நிலையிலில்லை. சுடப்பட்ட பிரதேசத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதிகள் எப்போதும் புலிகளின் பிரதேசமாகவே இருக்கிறது. தோப்பூரில் கர்ப்பிணிப் பெண்ணும், குளித்துக் கொண்டிருந்த சிறுவனும் கொலலப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்திலும் நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டுள்ளான். தோப்பூர் சம்பவம் புலிகளது என்று கூறக்கூடியதாயிருப்பதால் இதுவும் புலிகளாகத்தான் இருக்கும் என்று சொல்வதில் பெரிதாக ஐயப்பாடுகள் இல்லை.

மூதூரில் நடந்த இன்னொரு சம்பவமும் புலிகளின் முஸ்லிம்கள் மீதான அத்துமீறல்களைக் காட்டுகிறது.

இப்பிரதேச மீனவர்களின் வள்ளங்கள் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டு ஒவ்வொன்றுக்கும் மூவாயிரம் ரூபா கேட்கப்பட்டது. சுமார் முப்பத்தியொரு வள்ளங்கள் இக்கடத்தல் கோரிக்கைக்கு உட்பட்டன. மின்பிடியைத் தவிர வேறு தொழிலறியாத மீனவர்களும், அவர்கள் குடுப்பத்தினரும் சிரமப்பட்டு பணம் கொடுத்து வள்ளங்களை மீட்டெடுத்துள்ளனர். இக்கட்டுரை எழுதும் வரை இன்னும் ஆறு வள்ளங்கள் புலிகளிடம் இருப்பதாகவே அறிய முடிகிறது. குறித்த இப்பிரதேசத்து மீனவர்கள் கடற்படையினரின் தடையால் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமலையின் ஏனைய பிரதேசங்களில் அண்மையில் பத்திரிகைச் செய்திகளில் அடிபட்டது, இறக்கக்கண்டியும் குச்சவெளியுமாகும். அண்மைய நிகழ்வுகளில் அவதானிக்கத்தக்கதொரு பெரிய நிகழ்வாக இடம்பெற்றது இறக்கக்கண்டி முஸ்லிம்கள் கடத்தப்பட்டது. இதுபற்றிய சில தகவல்கள் கடந்த சரிநிகர் இதழில் பாதுஷா என்பவரால் எழுதப்பட்டிருந்தது. கடத்தலுக்கு முக்கிய காரணமாக இடம்பெற்ற சம்பவத்தின் பழிவாங்கல் நிகழ்வுகளாகவே ஏனைய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என பொதுவாகக் கதைபடுகிறது. அது கூட உண்மையாக இருக்கலாம் கடத்தப்பட்டவர்களின் (இதில் மௌலவி அப்துர் ரஹ்மானும், ஏனைய ஆறு மாணவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது புலிகளுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி வரும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வாகாரைப் பிரதேச புலிகளிடம் விடுத்த வேண்டுகோளின் படியே இவர்கள் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.) குடும்பத்தினரைப் பார்க்கச் சென்ற வழியிலேயே மஹ்ரூப் எம்.பி.யும் ஏனையோரும் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பான இன்னொரு செய்தியையும் அறிய முடிகிறது. ஆனால் இது எந்தளவு உண்மையானது என்பதையிட்டும் சந்தேகம் நிலவுகிறது. கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களிடம் புலிகள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்புக்கும், மஹ்ரூப் எம்.பி.க்கும் கடிதம் கொடுத்தனுப்பியிருப்ப

தாகவே இச்செ
அஷ்ரஃபுக்கான
ளைச்சேனை மீ
போது கொண்டு
தாகவும், மஹ்ரூ
வழங்க சந்தர்ப்ப
யென்றும் கூறப
விக்கப்பட்ட நப
கைகள் பற்றி எச்
தாகவும் அவர்க
பட்டு வருவதா
கிறது. இதனா
செய்திகளை
முடியாமல் இரு
ஏதோ நிகழ்ந்து
மட்டும் அவதான
இருக்கிறது.

விடுவிக்கப்படா
கதி என்ன என்
அறியப்படாததா
அவர்களை பண
பேரம் பேசலுக்
மறுப்புத் தெரிவித்
கள் நிலைபற்றி அ
வேண்டியிருக்கிற

மஹ்ரூப் எம்.பியி
இரு நாட்களின்
யாவைச் சேர்ந்த
தொழிலாளர்களி
டில்கள் புலிகளா
லப்பட்டுள்ளன.
வொன்றுக்கும் ஐ
பட்டிருந்தது. குறி
செலுத்தியே வண்
மீளப் பெறப்பட்
போன்றவை
கிழக்கு முஸ்லிம்
ஓர் அங்கமாக மாற

திருமலையை
மேற்குறித்த ச
கிழக்கின் பிறபகுதி
சம்பவங்களும் புலி
மீதான தங்கள் ஆதி
தொடர்ந்தும் கா
படுகிறது.

கடந்த காலங்களி
சம்பவங்கள் புலிக
ஏனைய இயக்கங்க
என்று மட்டுப்பட்
தமிழர்கள் - முஸ்
கசப்பான குரூர நி
தந்திருக்கிறது.
வளர்ந்த பகை
மங்கிக்கொண்டு வ
க்கை கொண்டுள்ள
மீண்டும் இச்செய



படம்: நன்றி - வீரகேசரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



 தி உலவுகிறது.
கடிதம் அட்டா
ாத் விழாவின்
கொடுக்கப்பட்ட
எம்.பி.யிடம்
அமையவில்லை
படுகிறது. விடு
களின் நடவடிக்
க்கப்பட்டிருப்ப
கண்காணிக்கப்
வும் அறியமுடி
இது பற்றிய
ர்ஜிதப்படுத்த
றது. எனினும்
ளது என்பதை
க்கக் கூடியதாய்

ஏனையோரின்
து இன்றுவரை
வே இருக்கிறது.
மாக வைத்து
இராணுவமும்
ள்ளதால் அவர்
ம் கொள்ளவே

கொலை நடந்த
ன்னர் கிண்ணி
இருபத்தைந்து
மாட்டுவண்

# விடுதலைப் புலிகளும் கிழக்கு முஸ்லிம்களும்



டுத்துச் செல்
இவை ஒவ்
யிரம் கோரப்
த பணத்தைச்
ல்கள் பின்னர்
ள் ளன. இது
ரும்பாலான
ன் வாழ்வில்
வருகின்றது.

மையப்பட்ட
பவங்களும்,
ளில் நிகழ்கிற
முஸ்லிம்கள்
கவுணர்வைத்
டுவதாகவே

இது போன்ற
முஸ்லிம்கள்
முஸ்லிம்கள்
க்கவில்லை.
ம்கள் என்ற
வுகளையே
ற்கெனவே
புணர்வுகள்
வதான நம்பி
வேளையில்
ள் அவநம்

பிக்கையையே ஏற்படுத்துகிறது.

இவ்வளவு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டிருப்பினும் முஸ்லிம்கள் புலிகளுட்பட அனைத்து தமிழர்களுடனும் நல்லுறவை பேணவே விரும்புகின்றனர். இதற்கு பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அண்மைய நல்லதொரு உதாரணமாகும். புலிகளின் நல்லுறவைப் பேணும் முயற்சிகளில் தலைமைப்பிடத்தவர்களுடன் அதிருப்தியை இவர் சம்பாதித்திருப்பதை பத்திரிகைகளில் படிக்கக் கிடைக்கிறது.

இவ்வாறான ஒவ்வொரு மனிதரினதும் மன விருப்பு, வெறுப்புக்களை மக்களுக்காய் மக்கள் விடுதலைக்காய் போராடுகின்ற இயக்கம் ஏன் உதாசீனப்படுத்துகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எனினும் முஸ்லிம்கள் சந்தேகங்களைக் கடந்து புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் அனேகருக்குள் ஒட்டிக்கொண்டு தான் இருக்கின்றது.

- ரிஷி



# முனைப்புடன் நிகழும் சினமூட்டல்கள்

எம்.எம்.நூறுல் ஹக்

கடந்த ஜூன் 19 ஜூலை 03, 1997க்குரிய ''சரிநிகர்'' இதழ்124ல் ''வாழைச்சேனை வருமானம்!'' என்ற தலைப்பில் பிரசுரமான செய்தியை - சம்பவத்தை ஒட்டிய மேலும் சில நிகழ்வுகளைப்பற்றிய குறிப்புக்களை இங்கு பதிவு செய்து வைப்பதே இக்கட்டுரையின் இலக்காகும்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் மிக அண்மைக்காலமாக என்றுமில்லாதவாறு அடிக்கடி புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்குமிடையில் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. யுத்தக்கெடுபிடியுள் இங்குள்ளோர் சிக்கி, சீரழிவது அன்றாட வாழ்க்கையின் ஓர் அங்கம் போல் ஒட்டிக்கொண்டுள்ளன.

இந்நிலையை இங்குள்ள முஸ்லிம்களும் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆயின் இவர்களின் வாழ்க்கையிலும் நிம்மதியை இழக்கசெய்ததோடு இழப்புகளையும் சுமக்க வேண்டியதுடன், அச்சத்தோடு வாழ்க்கையை ஒட்டவேண்டிய. இக்கட்டான நிலையையும் உருவாக்கியுள்ளது.

இது தவிர்க்க முடியாத யுத்த ஜுவாலையினால் ஏற்பட்டதொரு சுமை - மேலதிக வேதனையென ஆறுதல் அடைந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறுவது நியாயமாகிவிட முடியும்.

ஆனால் கடந்த மார்ச் 1997களிலிருந்து இப்பிரதேச முஸ்லிம்களிடமிருந்து கட்டாயப்படுத்தி கப்பம் வாங்கும் போக்கை மீண்டும் புலிகள் மேற்கொண்டு வருவதாக நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இருநூறு இயந்திரப் படகுக்காரர்களிடமிருந்து தலா ஒவ்வொரு இயந்திரப் படகுக்கும் மாதாந்தம் ''இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாய்பணமாகவும், இருபத்தி நான்கு கலன் டீசலும், இருபது கிலோ மீனும்'' கப்பமாக வசூலிக்கப்படுவதாக தெரிய வருகிறது.

அவ்வாறாயின் ஒவ்வொரு இயந்திரப்படகுக்காரரும் ஏறத்தாழ 6372/= ரூபாவை கப்பமாக புலிகளுக்குச் செலுத்துகின்றனர். இது அவர்கள் மனமொப்பிச் செலுத்தவில்லை என்பதால் தான் இது குறித்த அதிருப்தியும் முனங்கல்களும் வெளிப்படுகின்றன.

நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் மீது கணரக ஆயுத பாணிகளாக புலிகள் மேற்கொள்ளும் கப்பவசூலிப்பு மனக்கசப்புக்களையும், பகையுணர்வுகளையுமே தங்கச் செய்து விடுகின்றன என்றே கூற வேண்டியுள்ளது.

ஏனெனில் ஏலவே இவ்வாறான போக்கை முஸ்லிம்கள் மீது திணித்த போது, அது சின மூட்டலுக்கு வழி வகுத்து, சமூக மோதலை ஏற்படுத்தி ஒய்ந்ததே வரலாறு. மீண்டும் அப்படியொரு இரத்தக் கறைபடிந்த வாழ்வை நோக்கிப் பயணிப்பது விவேகமான நடைமுறையல்ல.

கசப்பான அனுபவங்களை வழங்கிவழியில் மீண்டும் மீண்டுமொரு நிலை கொள்ளுதலில் புலிகள் கரிசனை கொள்வதென்பது, இன்னுமின்னும் விலகிச் செல்லும் கைங்ரியத்திற்கே உதவ வல்லதென்பது மறைவானதல்ல. ஆயின் மீட்சிப் பாதையையும் இந்த நெருக்கடிகள் உடனடியாக நிறுத்தப்படும் வழிவகைகளை புலிகளின் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டும். இல்லையேல் மீண்டுமொரு சமூக மோதலை ஏற்படுத்தி விடக் கூடும் என்ற நியாயமான ஐயத்தைப் புறந்தள்ள முடியாது.

கப்பம் செலுத்தத் தவறுவோர் மீது நையப்புடைக்கப்பட்டு தொழில் உபகரணங்களை புலிகள் எடுத்துச் செல்லும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற ஐயத்தின் காரணமாகவே கப்பம் செலுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது உண்மையில் இப்படியொரு நெருக்கடி இம்மக்கள் மீது ஏற்பட்டால் இங்கு வாழும் பலரின் வாழ்வில் வறுமையை ஏற்படுத்தி விடவல்லதாகும்.

இது ஒரு புறமிருக்க ''மரத்திலிருந்து வீழ்ந்தவனை மாடு மிதித்த'' கதை போன்று புலிகளின் அட்டகாசத்தை உள்வாங்கிக் கொண்டிருக்கும் இயந்திரப் படகுக்காரரிடமிருந்து இப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவமும், காவல் துறையினரும் தினசரி முந்நூறு கிலோவுக்குக்குறையாத மீன்களை எடுத்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான கப்பத் திணிப்புக்கள், கண்டிக்கத்தக்கதும், தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றுமாகும். இச்செயல்கள் விசனத்தையும், சின மூட்டல்களையுமே விளைவிக்கக் கூடியது. இது ஆரோக்கியமான சூழலுக்கும், சுமுகமான வாழ்க்கை முறைக்கும் வேட்டான ஒன்றென்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இப்பிரதேசத்திற் குரியவர்களின் சுமார் இருபது ஆயிரம் ஏக்கர் பயிர் காணிகள் ஏறத்தாழ பன்னிரெண்டு வருடங்களாக பயிர் செய்யப்படாது உள்ளது. ஆயினும் இவற்றின் இரண்டாயிரம் ஏக்கர் காணிகளில் பயிர் செய்வதற்கு முஸ்லிம் விவசாயிகள் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எது எப்படி இருப்பினும் பேச்சுவார்த்தையில் முக்கிய தொணியாக இருப்பது பயிரிடப்படும் காணிகளுக்கு தலா ஒரு ஏக்கருக்கு ''இவ்வளவு கப்பமாக - வரியாகச் செலுத்தப்படல் வேண்டும்'' என்பது பற்றியே எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அதேநேரம் முஸ்லிம் விவசாயிகள் அச்சமின்றி பயிரிடலாமென்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

* புலிகளின் அழைப்பை ஏற்று பயிர்ச் செய்கையில் ஈடுபடலாமா? முன்னரும் நம்பவைத்து காலை வாரியது போல் இம்முறையும் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?
* பயிர்ச் செய்கையின் போது உபயோகிக்கப்படும் உழவு இயந்திரங்கள், வாகனங்கள் என்பவைகளை பறித்துச் செல்லமாட்டார்கள் என்பதில் புலிகள் மீது நம்பிக்கை வைக்கலாமா?
* வயல் வேலைக்குச் செல்வோர்களை கடத்திச் செல்லாதிருப்பார்களா? அதே நேரம் இரவு வயல் காவலுக்கு - தங்குவதற்கு அனுமதிப்பார்களா?
* இப்போது கேட்கும் வரி - கப்பத்தை விட பயிர்கள் விளைந்த பின்னர் ஏக்கருக்கு இவ்வளவு என்று அதிகரித்து கோரமாட்டார்கள் என்று நம்பலாமா?
* இப்போது அடிக்கடி தலை காட்டும் இராணுவ புலிகளுக்கான மோதல் வலுத்து, தொடரான யுத்தச் சூழல் தோன்ற மாட்டாதென்பதற்கு என்ன உத்தரவாதம்?
* அறுவடைக் காலங்களில் உற்பத்திப் பொருட்களிலும் கப்பம் கேட்கமாட்டார்கள் என்பதை எப்படி - எதனை வைத்து நம்புவது?

மேற்படி அச்சம் நிறைந்த - நியாயமான ஐயங்களை இங்குள்ள முஸ்லிம் விவசாயிகளும், நிலச்சுவாந்தர்களும் முணுமுணுப்பதாகவும் தெரிய வருகிறது. இதற்கு முக்கிய காரணம் ஒரு நிலையான முடிவில் புலிகள் இருப்பு கொள்வதில்லை என்பதாகும்.

பேச்சுக்கள், உறுதிமொழிகள் ஒருபுறமாகவும், செயல்கள் அதற்கு எதிர் சாயலில் அமைத்து விடும்பாங்கை புலிகள் கைக்கொள்வதில் கரிசனை கொண்டவர்கள் என்று சந்தேகத்துடனான நம்பிக்கைக்கு வழி வகுக்கின்றன என்றே கூற வேண்டும்.

பொதுவாக கப்பம் கோருவது விரும்பத்தகாத செயல் என்பதில் உறுதிகொண்டவர்கள் இங்குள்ள முஸ்லிம்கள் என்பது தெட்டத் தெளிவானது. ஆகவே இந்நடவடிக்கை இனவாதமாக - சமூக விரோத செயலாக கணிக்கப் படுவதையும் நாம் புறந்தள்ளி விட முடியாது.

ஆயின், சிந்தனை பூர்வமாகவும், சிநேகபூர்வமாகவும் முஸ்லிம்களின் மனதை வென்று திருப்திகொள்ளும் வகையில் புலிகள் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் நிகழ்ந்த கசப்பான அனுபவங்களை கருத்திற் கொண்டு. முஸ்லிம்களின் தனித்துவங்களை களைத்து விடாதளவில் புலிகள் தங்கள் செயற்திட்டங்களை நெறிப்படுத்த வேண்டும். இதுவே எதிர்காலத்தில் இப்பிரதேச குடியிருப்பாளர்களான தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் புரிந்துணர்வு வயப்படுத்தலை ஏற்படுத்தி அமைதியான உறவுநிலை கொள்ள வழியாகுமென நாம் நம்பிக்கை வைக்கலாம்.

இது போன்ற வேறுபல நிகழ்வுகள் திருமலை வாழ் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளமையையும் அறிய முடிகிறது.

இச்சம்பவங்கள் முஸ்லிம்களின் தன்மானத்தில் அல்லது உரிமைகளில் கைவைப்பதற்கு ஒப்பானதென்பது மிகையான கூற்றல்ல. இத்தகைய நிகழ்வுகள் ''பழிக்குப் பழி'' என்ற ஆட்டத்தை ஏற்படுத்த வல்லது என்பது கடந்த கால நிகழ்வுகளே.

இப்படி சின மூட்டல் சிறுக சிறுக தூவப்படும் சந்தர்ப்பத்தில் சில வேளை அது சமூக விரோத மோதலைத் தந்ததும் உடனே ''தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்துவதில் மூன்றாம் சக்தி வெற்றி கண்டுள்ளது'' என அறிக்கைகள் விட்டதுமே எஞ்சிப் போனதாக நிகழ்ந்தது.

இந்த அமர்க்களத்தில் மோதலுக்கு தூபமிட்ட சின மூட்டல் நிகழ்வுகள் யார் தரப்பிலிருந்து தொடங்கப் பட்டது என்பது மறைந்து விடுவதுண்டு. இந்நிலையினால் நாம் கண்ட பயன் தான் என்ன? அழிவுகளும், துயரங்களும் தவிர வேறென்ன?

வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவதிலும் பார்க்க முன்னர் அணைகட்டுவதில் தான் நன்மைகள் உண்டு. எனவே சமூக மோதலைத் துவக்கி, இரத்தக்கறைகளை ஒட்டிய பின்னர் சமாதானம் பற்றிச் சிந்திக்கும் போது, சில அழிவுகளை ஏற்றுக்கொண்ட நிலையில் தான் சாத்தியப்படுத்தலாம்.

ஆகவே இதனை ஆரம்பத்திலிருந்து அதாவது சமூக மோதலுக்கு காரணமாகின்றவற்றை இனங்கண்டு அவை யார் தரப்பில் நிகழ்வற்கான முனைப்புக்கொண்டு காணப் படுகிறதோ அதனைத் தடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுவதானது, அழிவுகளுக்கு முன்னரே தடைச் சுவர் எழுப்பி விட்டதாக அமையும்.

இப்போது நிகழ்ந்துள்ள சம்பவங்களிலிருந்து அதாவது நாம் மேலே சுட்டிக்காட்டியுள்ளவைகளை வைத்து நோக்கும் போது, கிழக்கு மாகாண முஸ்லிம்களிடம் மோதலை உருவாக்குவதற்கான சின மூட்டலில் புலிகள் இறங்கி இருப்பதாகவே கொள்ள முடிகிறது.

ஆகவே புலிகள் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் தங்களின் நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டிய காலகட்டத்தின் மீது உள்ளனரென்பதுவே இன்றைய நிலையும் அவாவும் ஆகும்.

விவேகமான நடைமுறைகளைக் கைக்கொண்டு தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவில் சுமுகமான உறவு நிலைகொள்ளும் வழிமுறைகளில் புலிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டியுள்ளதென்பதை மறக்காத வரை தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் பரஸ்பர உறவு விடுபடாதென்பது அப்பழுக்கற்ற உண்மையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 35

### பால்வேறுபாடுகள்

குழந்தைகள் பால் வேறுபாடுகளை நிலையானவையாக எடுத்துக் கொள்வதில்லை. இவை அவர்களுக்கு கணநேர மர்மங்களாகவே இருக்கின்றன. அவர்கள் தமக்குள் இதற்கான பல்வேறு விசித்திரமான விளக்கங்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். நாம் எவ்வளவு தெளிவாக விளங்கப்படுத்தினாலும் குழந்தை சிலவேளைகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு (ஆண்) குறியைக் கொண்டிருக்க உரிமையுண்டு என்று முடிவு செய்யவும் பிரகடனம் செய்யவும் கூடும்.

ஒரு பெண்குழந்தை தனது (ஆண், குறி தொலைந்து விட்டதாகவோ அல்லது தன்னை தண்டிப்பதற்காக எடுக்கப்பட்டுவிட்டதாகவோ கருதக்கூடும். சிலவேளை தான் நல்லபிள்ளையாக நடந்தால் அல்லது இன்னும் கொஞ்சம் வயது வர தனக்கும் அது முளைக்கும் என்று நினைக்கக்கூடும்.

ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் (ஆண்) குறியைத் தொலைத்தது போல தானும் தொலைத்துவிடக் கூடும் என்று கவலைப்படக்கூடும். பெற்றோர்கள் இவ்வாறான பயங்களை வெறும் பகிடிக்குரிய பயங்களாக எடுத்து பிறருடன் சிரித்து மகிழ்வதற்கான விடயங்களாக உபயோகிக்கக்கூடாது. இத்தகைய பயங்கள் அக்கறையுடனான அணுகுதலுக்கும், பரிகாரம் காணப்படுவதற்கும் உரிய முக்கியமான பயங்களாகும். உடலியல் சார்ந்த வேறுபாடுகள் குறித்த குழந்தைகளது கற்பனைகளை வெளியே கொண்டுவருவதற்கு குழந்தைகட்கு நாம் உதவ வேண்டும். நாம் எமது பெண் குழந்தைக்கு இப்படிக் கூறலாம்: ''சிலவேளைகளில் சில பெண்பிள்ளைகள் தமக்கு ஒரு (ஆண்) குறி இல்லாதிருப்பதை அறியும் போது அப்படி ஒன்று இல்லாதிருப்பது குறித்து பயந்து போய் யோசிப்பதுண்டு. நீங்களும் அப்படி நினைப்பதுண்டா?''

அல்லது நாம் ஆண்குழந்தைக்கு இப்படிக் கூறலாம். சிலவேளைகளில் பெண்களுக்கு (ஆண்) குறி இல்லாதிருப்பதை காணும் போது சில பையன்கள் பயப்படுவதுண்டு. நீ அப்படி எப்போதாவது யோசித்ததுண்டா?

சில வேளைகளில் ஒரு பையன் நினைக்கலாம்... ''அவளுக்கு அப்படி நடந்திருப்பதால் அப்படி எனக்கும் நடக்கக்கூடும்...'' ஆனால் பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் வேறு வேறானவர்கள். அவர்கள் அப்படித்தான் பிறந்திருக்கிறார்கள். அதனால்தான் ஆண்பிள்ளைகள் அப்பாவாகவும், பெண்பிள்ளைகள் அம்மாவாகவும் வருகின்றனர்''

சில பெற்றோர்கள், பெண் பிள்ளைகளுக்கு அவர்களது 'தொலைந்து விட்டது' பற்றிய கவலையை சமாளிக்க பால் வேறுபாட்டை இல்லையென்றளவுக்கு சிறிய வித்தியாசமே இருப்பதாக காட்ட முயல்கின்றனர். அவர்கள் அழும் மகளுக்கு இப்படிச் சொல்லக்கூடும். ''அந்த ஒரேயொரு குட்டிச்சாமானைத்தவிர மற்றெல்லாவிதத்திலும் நீயும் உன்ரை தம்பியும் ஒரே மாதிரித்தான். எனவே நீ அழ வேண்டாம். ''ஒரு தாயார் இந்தச் சிக்கலை சமாளிக்க தனது மகளுககு சீனக் களியால் செய்யப்பட்ட ஒரு (ஆண்) உறுப்பை தான் தரலாம் என்று கூறினாளாம். இத்தகைய ஒரு தற்காலிகத் தீர்வு, பிற்காலததில் பலத்த பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

ஒரு குழந்தை, ஆண் குழந்தைகட்கும் பெண் குழந்தைகட்கும் உள்ள உடலியல் வேறுபாட்டை கண்டுபிடித்துவிட்டால், வேறுபாட்டினைப் பற்றி விளக்கமாக பேச வேண்டும். வேறுபாடுகளை அளவுக்கதிகமாக குறைத்து பேசுவது நல்லதல்ல.

''ஒமோம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கு. உனக்கு ஒரு ஆண்குறி இருக்கிறது. ஆகவே நீ ஒரு பையன். நீ வளரும் போது ஒரு



பொக்பர். ஜகபம் ஜீ ஜீனாஸ்ட்
தமிழில் : சுதன்

தகப்பனாக வருவாய்''

''நீங்கள் ஒரு பெண்பிள்ளை. உங்களுக்கு இருப்பது பெண்குறி (யோனி) நீங்கள் வளரும் போது ஒரு அம்மாவாக வருவீர்கள். பெண்கள் ஒரு விதமாகவும் ஆண்கள் ஒருவிதமாகவுமே படைக்கப் படுகின்றனர் என்பதை நீங்கள் அறிந்து கொண்டது எனக்கு மிகவும் சந்தோசம்.

செய்தி தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். பால்ரீதியான அடையாளங்காணலில் குழப்பம் ஏற்படுவதை தவிர்க்க இப்படியான தெளிவான செய்தி முக்கியமாகும்.

## விடைகளுக்கான தருணங்கள்

ஒரு போதகர் ஒருவர் தமது எல்லைக்குட்பட்ட ஒரு புல்வெளிப் பிரதேசத்தில் தனது முதலாவது போதனையை செய்வதற்காக வந்திருந்தார். ஆனால் ஒரு மாட்டுக்காரனைத் தவிர வேறு யாரும் போதனையைக் கேட்பதற்காக வந்திருக்கவில்லை. தனது பிரசங்கத்தை ஆரம்பிப்பதா இல்லையா என்று தான் யோசிப்பதாக அவர் வாய்விட்டு சொன்னார். மாட்டுக்காரன் இவ்வாறு பதிலளித்தான். 'நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு சொல்ல முடியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக்காரன். ஆனால் நான் எனது மாடுகளுக்கு தீனி போடுவதற்காக வந்தேனானால், ஒரு மாடு வந்திருந்தாலும், நான் அதற்கு உணவளிப்பதா வேண்டாமா என்று யோசிக்கவே துணியமாட்டேன்.'' போதகர் அவனுக்கு நன்றி கூறிவிட்டு மணிக்கணக்காக பேசுவதற்கென தான் தயாரித்து வந்திருந்த தனது பிரசங்கத்தை நடத்தி முடித்தார். அவர் அதை முடித்தபின். அவனுக்கு தனது பேச்சுப் பிடித்ததா என்று கேட்டார். பதில் இவ்வாறு அமைந்திருந்தது. ''எனக்கு இத்தகைய பிரசங்கங்கள் பற்றி அதிகம் தெரியாது. நான் ஒரு சாதாரண மாட்டுக்காரன். ஆனால் நான் எனது மாடுகளுக்கு தீனிபோடுவதற்காக வரும் வேளையில் ஒரு மாடு மட்டுமே அங்கு நிற்குமானால், அதற்கு எல்லா மாடுகட்குமாக கொண்டுவந்த முழு உணவையும் கொடுக்கத் துணியமாட்டேன்....''

பாலியல் கல்வியிலும் நாம் விரைவிலேயே நிறையக் கற்றுக் கொடுத்துவிட வேண்டுமென்றும், எல்லாவற்றையும் சுமத்திவிட வேண்டும் என்றும் கருதும் மன நிலையில் இருந்து விடுபட வேண்டும். பாலியல் தொடர்பான குழந்தைகளின் கேள்விகட்கு பதிலளிக்காமல் விட எந்தக் காரணமும் இல்லை என்ற போதும், எமது பதில் குழந்தை பிறப்பது தொடர்பான முழுத் தகவல்களையும் தெரிவிப்பதாக அமைய வேண்டியுதில்லை. அவை சுருக்கமாக ஓரிரு வரிகளில் சொல்லப்படுவதாக இருந்தால் போதும். நீண்ட பெரிய அத்தியாயம் அத்தியாயமாக பந்திபந்தியாக விபரிக்கப்பட வேண்டியதில்லை.

குழந்தைக்கு பாலியல் தொடர்பான விடயங்களை தெரிவிக்க வேண்டிய சரியான வயது, குழந்தை அதுபற்றிக் கேட்கத் தொடங்குகின்ற வயது தான். ஒரு இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தை தனது பிறப்புறுப்பைச் சுட்டிக் காட்டி இது என்ன என்று கேட்டால். குழந்தைக்கு 'அதுதான் உனது ஆண்குறி அல்லது பெண்குறி' என்று சொல்வதற்கான சரியான சந்தர்ப்பமாகும். குழந்தைகள் ஆண்குறியை பீப்பீ. மணி என்று ஏதாவது பெயரைச் சொல்லி அழைக்கக்கூடுமாயினும். பெரியோர்கள் அதற்குரிய சரியான சொல்லைப்பயன்படுத்தவேண்டும். (தமிழில் இவற்றுக்கு சாதாரண பாவனையில் ஒரு சொல் இல்லை. ஆங்கிலத்தில் Penis Vegina என்ற சொற்களுக்கு சமமான அர்த்தத்தில் பேச்சுவழக்கில் அதன் அர்த்தத்தை தரும் ஆண்குறி, பெண்குறி (அல்லது யோனி) என்ற சொற்கள் பாவிக்கப்படுவதில்லை என்பது நம் கவனத்திற்குரியது. பேச்சுவழக்கில் உள்ள சொற்கள் தூஷண வார்த்தைகளாகவே அர்த்தப்படுத்தப் படுகின்றன. நமது மொழி பற்றிய அக்கறை உடையவர்கள் கவனத்திற்கு இது சமர்ப்பணம் - (மொ-ர்) ஒரு குழந்தை. குழந்தைகள் எங்கிருந்து வருகின்றன என்று கேட்கும் போது அவை வைத்தியரின் பையில் இருந்து, அல்லது வைத்தியசாலையில் இருந்து. அல்லது கடையிலிருந்து என்று நாம் சொல்லக் கூடாது. நாம் அது அம்மாவின் உடம்பிலுள்ள ஒரு பகுதியுள் வளர்வதாக சொல்லலாம். கர்ப்பப்பை பற்றிக் கூறுவது. முதற் தடவையில் தேவையாகவோ தேவையற்றதாகவோ இருக்கலாம்.

பொதுவாக குழந்தைகள் சிறுபராயத்திலிருந்தே தமது உடலுறுப்பின் பெயர்களையும் அவற்றின் செயல்களையும் அறிந்து கொள்ளுவது அவசியமாகும். அத்துடன் பால் ரீதியான உடலியல் வேறுபாடுகளையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். விளக்கங்கள் மிருகங்களையும், தாவரங்களையும் உதாரணம் காட்டுபவையாக அமையக் கூடாது. அலிஸ் பிளெயின்ட் (வாழ்வின் தொடக்க காலங்கள் - ஒரு மனோ தத்துவ ஆய்வு) தனது நூலில், ஒரு சிறுவன் அவனது தாயார் இன்னொரு குழந்தைப் பேற்றுக்கு தயாராகிக்கொண்டிருக்கையில். ஒரு பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டது பற்றிக் கூறுகிறார். அவன் திரும்பி வந்த பின்னர் தகப்பனாரிடம் இப்படிக் கேட்கிறான். ''எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. ஆனால் அப்பா எனக்கு ஒரு விடயத்தைச் சொல்லுங்கோ. அம்மா எருதிடம் போவாவா அல்லது எருது அம்மாவிடம் வருமா?''

அனேகமாக பாடசாலைக்கு போகத் தொடங்காத எல்லாப் பிள்ளைகளிடமும் இரண்டு கேள்விகள் எழுகின்றன. எப்படி ஒரு குழந்தை உருவாகத் தொடங்குகிறது. அது எவ்வாறு வெளியே வருகிறது. இது தொடர்பான குழந்தையின் சொந்தக் கற்பனைகளையும், கருத்துக்களையும் நாம் எமது கருத்தைச் சொல்ல முன்பாகக் கேட்பது நல்லது. குழந்தையின் பதி எப்போதும் சாப்பிடுவதும் கழிவகற்றுவதும் போன்ற ஒன்றாகவே அமையும். ஒரு புத்திசாலிப் பிள்ளை இப்படிக்கூறியது: நல்ல பிள்ளைகள் நல்ல சாப்பாட்டிலிருந்து வருகின்றன. அவை அம்மாவின் வயிற்றில் வளர்ந்து அவளது வயிற்றிலிருந்து தொப்புளின் ஊடாக வருகின்றன. கூடாத குழந்தைகள் கூடாத சாப்பாட்டினால் உருவாகி அவை கழிவுடன் (மலத்துடன்) வெளி வருகின்றன.

எமது விளக்கம் எப்போதும் சரியான தரவுகளை கொண்டதாக இருக்கவேண்டும். ஆனால் அவ் விளக்கம் உடலுறவு பற்றிய விபரங்களை உள்ளடக்கியிருக்கத் தேவையில்லை. ஒரு மாதிரி விளக்கம் வருமாறு:

''ஒரு தகப்பனும் தாயும் பிள்ளையை உருவாக்கவிரும்பும்போது தகப்பனின் உடலிருந்து ஒரு கலம் தாயின் உடலிலிருக்கும் ஒரு கலத்துடன் போய்ச் சேர்கிறது. குழந்தை வளரத் தொடங்குகிறது. குழந்தை பெரிதாக வந்ததும் தாயின் பெண்குறி வழியாக வெளியே வருகிறது.''

சிலவேளை ஒரு குழந்தை தான் வெளிவந்த பகுதியைப் பார்க்க ஆசைப்பட்டுக் கேட்கலாம். இத்தகைய அந்தரங்க விடயங்களைக் காட்டாமல் இருப்பது நல்லது. பதிலாக நாம் படம் வரைந்தோ, ஒரு பாவையை வைத்தோ இதை விளக்கலாம்.

*வரும்*

## அகன்ற வெளியில்

நீ இன்னமும் கனவில்
மிதக்கிறாய்
வாழ்வுக்காக ஏங்குகிறாய்

உனது அன்புக்கும்
எனது உயிருக்கும்
இடையிலான அகன்ற
வெளியில்
நீயோ நானோ
நிற்கதியானதற்கு
நிறையவே காரணமுண்டு

மறுபடியும் என்னிடம்
காதலைத்தேடாதே
வாழ்வைத்தேடாதே

உனது கரிய உதடுகளில்
எனது துயரக்
கவிதைகளையோ...
உனது நிர்வாண மேனியில்
எனது குளிர்ந்த
தேடலையோ...
கொட்டித் தீர்க்க
என்னால் முடியாது:
எனது துயரமும் இதுவல்ல.

97.05.27

**மஜீத்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ராதிகாவுக்குப் பதில்:

# நெஞ்சில் நிறைந்திருப்பதாலேயே போராட வருகின்றனர்

**வளவன்**

### சென்ற இதழ் தொடர்...

### தேசிய விடுதலை தவறானதா?

மத, இனத்துவ தேசியவாதத் தத்துவங்களே தற்கால உலகில் மனித உரிமைகளை ஈட்டிக் கொள்ளப் பெரும் தடைக்கற்களாக உள்ளதாகப் பொதுப்படையாகக் கூறி ரா.கு. குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மனித உரிமைக்குத் தடையாக இருப்பவை, மத அடிப்படைவாதம் (Religious Fundamentalism), இனவாதம்(Racism) , தீவிர தேசியவாதம் (Facism) என்பவையே. ஒரு மக்கள் தமது மத, இன, தேசிய அடையாளங்களைப் பேணுதலோ, அவற்றைப் பாதுகாக்கப்போராடுதலோ தவறாகாது. அவை பாதுகாக்கப்பட்டு, சுதந்திரம், சமத்துவம் நிலைநாட்டப்பட்டு அவ்வடிப்படையில் நல்லுறவுடனும், பரஸ்பர ஒத்துழைப்புடனும், மக்களும் தேசங்களும் வாழ்தலே (Co - Exist) சிறந்ததெனத்தற்கால ஆய்வாளர்கள் பலர் தெரிவிக்கின்றனர். இதன் மூலமே சமாதானத்திற்கும் சமத்துவ சகவாழ்விற்குமான ஓர் உலகை உருவாக்கலாம் என்பது அவர்களது கணிப்பு. ஓர் அரசிற்குள் ஓர் அங்கமாக ஒரு மக்கள் இருத்தல் என்பது அம்மக்களின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அவ்விருப்பைப் பலவந்தமாகத் திணித்தல் கூடாது. தமிழ்த் தேசிய இனம் பிரிந்து தனக்கென தனியரசு அமைத்து வாழ விரும்புகிறது. இதற்கு மாற்றாக, இன சமத்துவம் தரக்கூடிய திட்டமொன்றை இதுவரை சிங்கள அரசு முன்வைக்கவில்லை. சிங்கள மேலாதிக்கத்தை இராணுவத் தீர்வு மூலம் நடைமுறைப்படுத்தும் முயற்சியிலேயே அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சிங்கள - பௌத்தத்திற்கு முதன்மை ஸ்தானம் அளித்தவாறே சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்கும் தீர்வொன்றைக் காணப்போவதாக அது வாயளவில் சொல்லி வருகின்றது. ரா.கு.வின் பண்பாட்டுக் கலப்பு, கலாசாரப் பன்மைத்துவம் ஆகிய கருத்துக்கள், சிங்களப் பேரினவாதத்தின் கீழ் மிதிபட்டு அதற்குச் சேவகம் புரியும் பரப்புரைகளாக உதவுகின்றன.

ரா.கு கூறும் பண்பாட்டுக் கலப்புக் குறித்து மிக எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். ஓர் இனம் தனது தனித்த பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாத்தலை, கலாசார ஒருமைத்துவம் என்று ஒதுக்கிவிடல் கூடாது. வேற்றுப் பண்பாட்டின் நல்ல அம்சங்களை உள்வாங்குதல் நல்லதே. அது எம் பண்பாட்டை வளம்படுத்த உதவ வேண்டுமே தவிர அழித்துவிட வழிவகுக்கக் கூடாது. சிங்களப் பெரும்பான்மை குடியேற்றம், இராணுவ அடக்குமுறை, ஆதிக்கம் மூலம் எமது தனித்த (Distinct) தேசிய அடையாளங்களைக் கபளீகரம் செய்து சிங்கள மயமாக்கி விடத்திட்டமிட்டு முயலுகிறது. இத்தருணத்தில் தங்கு தடையற்ற பண்பாட்டுக் கலப்பை வலியுறுத்தல், சிங்கள மயமாக்கலுக்கு (Assimilation or Sinhalisation) உதவுவதாகவே இருக்கும். உலகில் புதிய தேசிய அரசுகள் உருவாவதைத் தடுத்தல் (Stopping of Pooliferation of new staxes), புதிய உலக ஒழுங்கு (New world order), Globalisation, பல்நாட்டு தொழில் நிறுவனங்களின் பலம் (Power of Transnational Companies), தகவல் ஆட்சி (Information realm) போன்றவை மேலாதிக்க சக்திகளின் குறிக்கோள்களாக உள்ளன. இவற்றையே உலகளாவிய விழுமியங்களாக ரா.கு. தூக்கிப்பிடிப்பதாக சந்தேகம் எழுகிறது. இக்கருத்துக்கள் ரா.குவுக்கு நோபல் பரிசைக்கூடப் பெற்றுக்கொடுக்கலாம். ஆனால் இலங்கைத் தீவிலோ, உலகிலோ உண்மையான சமாதானத்தைக் கொண்டு வர இவை உதவப்போவதில்லை

### பெண்விடுதலை

தமிழீழ மக்கள் தங்கள் இறைமையையும், அரசியல் அதிகாரத்தையும் பெறுவதற்கான தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டமே பிரதான போராட்டமாக உள்ளது. தேசிய சுயநிர்ணய உரிமையே ஒரு தேச மக்களின் ஆதார உரிமையாகும். இவ்வரசியல் உரிமையில் இருந்தே ஏனைய மனித உரிமைகள் முகிழ்கின்றன. தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையும் வெல்லப்பட வேண்டும் என்று விடுதலைப் போராட்டம் எனும் போது, ஆண், பெண் வேறுபாடு இன்றித் தகுதி உடையோர் அனைவரும் போராடுவதே நியாயமானது. வேறு பல போராட்டங்களில் போலவே, மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள தமிழீழ மக்களிலும் பெண்கள் போரில் தங்களையும் இணைத்துக் கொள்கின்றனர். பலவந்தமாக எவரும் சேர்க்கப்படுவதில்லை. ஆட்பலவளக்குறைவே பெண்கள் போரில் இணைக்கப்படக் காரணம் என்ற ரா.குவின் குற்றச்சாட்டு சரியானதல்ல. ஆட்பலத் தேவை இருப்பது உண்மைதான். ஆனால், ஆண் போராளிகளே போதுமானதாக இருந்தால், பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதான வாதம் தவறானது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் அன்னவரது புலிகளின் அரசியல் ஆவணம் தெரிவிக்கின்றது. தேசிய விடுதலையின் ஓர் அம்சமாகவே பெண் விடுதலை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பெண்களின் சமத்துவத்திற்கான முன்னெடுப்பாக விடுதலைப்புலிகளின் சட்டரீதியான சீதன ஒழிப்பைக் குறிப்பிடலாம். பெண்களைக் கீழ்மைப்படுத்தும் பாரம்பரிய பெண்ணடிமைக் கோட்பாடுகளை, விவாதம் கருத்துருவாக்கம், சட்டமியற்றல் மூலம் படிப்படியாக நீக்க விடுதலைப் புலிகளின் பெண்கள் அமைப்புகள் முன்னின்று செயற்படுவதாக அறிகிறேன். மத, சமூக கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ள பல மரபு வழிக்கோட்பாடுகளை உடனே சட்டம் கொண்டு வந்து நீக்குதல் முடியாது; அது பயனும் தராது மக்களின் மனமாற்றமும் அவசியமாகிறது.

### பெண்கள் போரில் ஈடுபடலாமா?

எந்தப் பிரச்சினையையும் தீர்க்க வன்முறையே கூடாது என்று மொழிந்த ரா.கு பெண்கள் போருக்கே செல்லக்கூடாது என்று ஒரே போடாய்ப் போடுகிறார். தேசிய பங்களிப்பும் சமமாகவே வேண்டப்படுகின்றது.

### பெண் போராளிகளின் இலட்சிய வாழ்வு

ஒரு பெண் போராளியாவதால், அவள் வளமான வாழ்வு, பாலியல் இன்பம், கலைகளின் மீதான காதல் என்பவற்றை இழக்கிறாள் என்பது அபத்தமானது. இப்போராட்டம் வாழ்வுக்கான போராட்டம். தமிழீழ தேசத்தின் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களதும் சுதந்திர வாழ்வுக்கான போராட்டம். மற்றவர்களுக்காக வாழ்வதும், மரணிப்பதும்தான் உன்னதமானவை என்பதை ரா.கு புரிந்து கொள்ள வேண்டும். இவ்விலட்சிய வாழ்வுக்கு அமைவாகவே பெண் போராளிகள் தமது குடும்ப வாழ்வையும் அமைத்துக் கொள்கின்றனர். ஒரு பெண் போராளி எவரையும் விரும்புவதற்கோ, திருமணம் செய்வதற்கோ எவ்வித தடையும் இல்லை. ஆயினும், எந்த இராணுவத்திலும் கட்டுப்பாடுகள் இருப்பது போன்றே, ஐந்து வருடங்களாகப் போராளியாக இருந்திருக்க வேண்டும் என்ற விதி உள்ளது. இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. இவ்விதிக்கு அமைய இருவர் திருமணம் புரியத் தீர்மானித்தால், இயக்கமே திருமணச் செலவுக்கான நிதியையும் வழங்கி ஊக்குவிக்கின்றது. திருமணம் புரிந்த பிள்ளைகள் பெற்ற எத்தனையோ ஆண், பெண் போராளிகள் இயக்கத்தில் இருக்கிறார்கள் என்பது ரா.கு அறியாத விஷயம். ஆண், பெண் இருபாலாரது முகாம்களும் அருகருகே காணப்படுவதும், இயக்கக் கடமைகள் பலவற்றை இருபாலாரும் இணைந்து புரிவதும் குறிப்பிடத்தக்கது.

கலைகளின் மீதான காதலைப் பெண்புலி இழந்து விடுகிறாள் என்பதன் மூலமே, பெண்புலிகளைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது என்பதைக் காட்டி விடுகிறார். சிறந்த எழுத்தாளர்களாகவும் (குறிப்பாக கட்டுரை, கவிதை, சிறுகதை), பாடகர்களாகவும், இசைக்கலைஞர்களாகவும், சினிமா, நாடக நடிகர்களாகவும், இயக்குநர்களாகவும், தொகுப்பாளராகவும், (Editors)- குறிப்பாக ஒளிவீச்சு), வீடியோ, புகைப்படப்பிடிப்பாளர்களாகவும், நாட்டியக் கலையில் வல்லுனர்களாகவும், மின்னியல், இலத்திரனியல், கணணியில் துறைகளில் விற்பன்னர்களாகவும் எத்தனை பெண் பேராளிகள் வளர்ச்சி பெற்றுள்ளனர். விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தில் பெண்கள் பிரிவும் உண்டு. பெண்புலிகள் சுதந்திரப் பறவைகள் என்ற தமது மாதாந்தப் பத்திரிகையில் தேசியப் போராட்டத்தில் பெண்களின் பங்கு, பெண் விடுதலை போன்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். சிறந்த நாட்டிய நாடகங்களும், ''உயிர்த்த மனிதர்களின் கதை'' போன்ற கலைத்தரம் வாய்ந்த நாடகங்களும், குறும்படங்களும் பெண் புலிகளின் பங்குபற்றலில் வெளிவந்துள்ளன. கஸ்தூரி, வானதி, பாரதி போன்ற எத்தனையோ பெண் போராளிகளின் சிறுகதைகள், கவிதைகள் உயர்தரம் வாய்ந்தவையாக இலக்கிய உலகில் கணிக்கப்பட்டு நூல்களாகவும் வெளிவந்துள்ளன. உச்ச நிலையில் இருக்கும் இசைப்பாடல்களை உருவாக்கும் செயற்பாட்டில் பெண் புலிகளின் பங்கு கணிசமாக உள்ளது.

### பெண்மைப் பண்புகள்

பெண் புலிகளிடத்தில் இரக்க சுபாவம், சகிப்புத்தன்மை, சாந்தம், கருணை, சமாதான விருப்பம், உயிர்களிடத்தில் அன்பு, சமூக உறவு பேணுதல், பெண் என்ற தளத்தில் உலகளாவிய ஒருமைப்பாடு ஆகியவை இருக்காது என்பது ரா.குவின் கற்பிதம். போராட்டத்திலிருந்து ''அகதி'' என்ற பெயரில் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடுதலையோ, ''நடுவுநிலை'' என்ற பெயரில் போராட்டக் களப்பக்கமே தலைகாட்டாமையையோ செய்யாமால் விடுதலைப் போரில் பெண்கள் உறுதியுடன் கால்பதித்து நிற்பதற்கான காரணம்யாது? பிள்ளைகளின் மேல் அன்பு, தாய்மைப்பாசம், ஊட்டி வளர்க்கும் உணர்வு என்று ரா.கு கூறும் பெண்மைப்பண்புகள் நெஞ்சிலே பூரணமாக நிறைந்து இருப்பதுதான் அவர்கள் போராட்டத்தில் இணைந்து போராடுவதற்கான காரணம். இதுவே ஒடுக்கப்படும் தன் தேசமக்களின் மீது அன்பு கொள்ளவும், அவர்களுக்காக மரணிக்கவும் தூண்டுதலைத் தருகிறது. இந்த அன்பினாலேதான் உலகை அரவணைக்கும் கரு உள்ளதாக நான் கருதுகிறேன்.

அடுத்த இதழில் முடியும்...

---

### மாணிக்க விநாயகர் VS முத்து மாரியம்மன்

பாரிஸ் லாசப்பல் (La chapeelle) திருவம்பதியில் 04.02.1985ல் அகதி அந்தஸ்து பெற்ற மாணிக்க விநாயகர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களும் அதிகமாகி, அவர்கள் பிரச்சினைகளும் அதிகமாகி, அதனால் வருமானமும் அதிகமாகவே எதை இழந்தாலும் வரு'மானத்தை' இழக்காத வீர மண்ணின் புதல்வர்களாம் புலிகள் மாணிக்க விநாயகரை மாவீரராக்கி விட்டு அல்லது அங்கு வருகிற பக்தர்களுக்கு கிறிக்கெட், உடற்பயிற்சி போன்றவற்றை யோகி பாணியில் வழங்கச் சொல்லி விட்டு மாணிக்க விநாயகர் துயிலும் இல்லத்திற்கு அடுத்த தெருவில் அன்னை பூபதி பாணியில் அருள் மிகு முத்து மாரி அம்மனை எல்லாக் கடவுளுக்கும் மேலான வீரத் தாயாக இவ்வாண்டு புது வருஷப் பிறப்புக்கு சில நாள் முன்னர் ஆக்கியதை அம்பதாயிரம் தமிழர்களில் ஐநூறு பேராவது அறிவர்.

ரெஸ்ரூரண்ட், பியூரோகிளீனிங், கடை, கண்ணி இவைகளில் அடித்துக் கொடுத்து விட்டு ஆத்துப் பதைத்து வந்து ஒரு 'அருணாச்சலம்' கசற் எடுத்து 'ஆண்டவன் சொல்லுறான், அருணாச்சலம் முடிக்கிறான்'- என்று ஆறுதலடையும் தமிழர்கள் தற்போத அதிகமாக செ(ா)றிந்த வாழும் La chapeelle புண்ணிய பூமி தற்போது இரண்டு கடவுளர்களுடைய பக்தர்களுக்குமான யுத்த பூமியாக மாறியுள்ளது.

மாணிக்க விநாயகர் ஆலயத்தின் முன்னாள் அர்ச்சகர் ஈஸ்வர அய்யர் புலிகளால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அருள் மிகு முத்து மாரியம்மன் ஆலயத்தின் புதிய அர்ச்சகராக நல்ல விலைக்கு வாங்கப்பட்டபின் 'ஆரோடு நோகேன் - ஆர்க்கெடுத்துரைப்பேன்' என்று மாணிக்க விநாயகர், தனது புதிய அர்ச்சகரான சிவானந்த சுப்பிரமணிய அய்யருடன் அகதியோடகதியாக அழுது கொண்டிருக்கிறார்.

அருள் மிகு முத்து மாரி அம்மனுக்கு எக்கச்சக்கமான கைகள் இருப்பதைப் போலவே புலிகளுக்கும் பிரான்ஸில் உண்டு. மண்மீட்பு நிதி, இறுதி யுத்த நிதி, அகதிகள் புனர்வாழ்வு நிதி, இடம் பெயர்ந்தோர் துயர் துடைப்பு வாரம் இப்படி ஒருவரே பல கைகளை பெற்றும் போதாத நிலையில் தமிழர் பிரச்சினை பாரிஸிலும் கூடிச் செல்கின்றது. புலிகளின் தீவிரப் பிரச்சாரகர் ஒருவரின் தோள் பையுள் கரும்புலிகள் நாள் நோட்டீசும் இருக்கும், மாரியம்மன் அபிஷேகத் திருநாள்களின் நோட்டீசும் இருக்கும்.

தெல்லிப்பழையில துர்க்கையம்மன் கலியாணத்திற்கு Fully guaranteed கொடுப்பதால் இங்கும் அவர் கொடுத்துத் தானாக வேண்டும் என்று எந்தத் தேவையும் இல்லை.


சுந்தரராமசாமியின 'குரங்குகள்' சிறுகதையில் வரும் குரங்குகள் பெண்களைப் பார்ப்பது போல் அப்படிப்பட்ட பார்வையை ஒவ்வொருவனும் பார்க்கிறான்- பாரிஸில். பாவம் இவனது கலியாணத்திற்கான நிகழ்தகவு 100:5 என்ற விகிதத்தில் இருப்பது உலகமறிந்தவொன்று . விடயம் வியாபாரம் சம்பந்தமானது;- இப்போது ஜேசுதாஸின் 'புரோகிறாம்' ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கிறது. பக்தியின் ஆதரவில் பணம் பண்ணியாச்சு, பவுன் கவச வாகனமும் அடிச்சாச்சு என்பதாக பக்தர்கள் இருக்கும் வரை எதையும் எங்கும் அசைக்க முடியாது என்றிருக்கிறது.

'மேன்மைகொள் சைவத் தமிழன் நீதி
விளங்குக உலகமெல்லாம்''
- பிரான்ஸிற்குத் தேவையா?

*'தூர்ஈபின் தூர்ராயா'*

www.tamilarangam.net





# சிசுக்கொலைகளும் மனிதர்களும்

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

''எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்ததற்கு நன்றி'' டொக்டர் ரமேஷ் பட்டேலின் குரலில் நன்றி படர்ந்தது.

''இந்த நாட்டில் கறுப்பு டொக்டர்களாக வேலை செய்கிறோம். எங்களில் எப்போது என்ன பிழை பிடிப்போம் என்று பார்த்திருக்கிறார்கள் இந்த வெள்ளையர்கள், அவர்களை எதிர்நோக்க நாங்கள் ஒற்றுமையாய் இருக்க வேண்டும் என்பது என் கருத்து''

டொக்டர் கார்த்திகேயன், டொக்டர் ரமேஷ் பட்டேலுக்கு மறுமொழி சொன்னான்.

இருவரும் அவர்களின் தலைமை டொக்டரின் அறையிலிருந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

கார்த்திகேயன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் டொக்டர். ரமேஷ் லண்டனில் பிறந்து வளர்ந்த இந்தியன். இருவரும் இந்தக் குழந்தைகளின் வார்ட்டில் வேலை செய்கிறார்கள். டொக்டர் ரமேஷ் ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருக்கிறான்.

இவர்களைக் கடந்து சில நேர்ஸ்மார் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி ஜேன் மார்ட்டின். அவள் டொக்டர் கார்த்திகேயனை அர்த்தத்துடன் பார்த்தாள். இவனுடன் தனியாகப் பேச வேண்டும் என்ற துடிப்பு அவள் கண்களில் தெரிகிறது. ரமேஷ் இருக்கும்போது கார்த்திகேயன் யாருடனும் பேச விரும்ப வில்லை.

இவனைக் கடந்து போயும் கார்த்திகேயனை திரும்பிப் பார்த்தாள். ரமேசுக்குத் தெரியாமல் ஜேனுடன் சாடையாய்க் கண்காட்டினான். 'உன்னை நான் இரண்டு மணிக்குச் சந்திப்பேன்' என்பது போல் தன் மணிக்கூட்டைக் காட்டிச் சைகையிற் பேசினான்.

நேரம் இப்போது பன்னிரண்டு மணியாகிறது. ஜேன் அவளுடைய மத்தியானச் சாப்பாட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறாள். திரும்பி வந்ததும் மிகவும் பிஸியாக இருப்பாள். பின்னர் மூன்றரை மணிக்கு அவளின் வேலை முடிந்து போய் விடுவாள்.

ரமேசுக்கு என்ன நடந்தது என்று அறிய அவள் ஆசைப்படுவாள் என்று கார்த்திகேயனுக்குத் தெரியும்.

ரமேஷ் தன் நேரத்தைப் பார்த்தான்.

'எனக்கு அவசரமான வேலையிருக்கு' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

''பின்னேரம் 'பாரில்' சந்திக்கிறேன்'' கார்த்திகேயனும் அவசரப்பட்டான். அவன் கிளினிக்குக்குப் போக வேண்டும். இன்று இரண்டு டொக்டர்கள்தான் வேலை செய்கிறார்கள். மிகவும் பிஸியாக இருக்கும். கார்த்திகேயன் நடையை துரிதப்படுத்தினான்.

இவனைத் தெரிந்த ஒரு சில நோயாளிகள் தங்கள் மரியாதையைப் புன்சிரிப்பில் வெளிப்படுத்தினர். சிலர் இவனைத் தெரியாதவர்கள் போல் கடந்து சென்றனர். இறப்பையும், பிறப்பையும் நிர்ணயிக்கும் வைத்தியசாலை. மனிதர்கள் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

தனக்குத் தேவையில்லாவிட்டால் மற்றவர்களுடன் ஒரு தொடர்பும் வைத்துக் கொள்ளாதவர்கள் ஆங்கிலேயர்.

அறிமுகம் செய்து வைக்காவிட்டால், அடுத்தவனின் முகத்தையும் பார்க்காதவர்கள் ஆங்கிலேயர். ஆனாலும், இந்த கட்டுப்பாடான பழக்க வழக்கங்களைத் தாண்டி ஜேன் இவனுடன் பழகுவாள்.

அவள் வித்தியாசமானவள். இரக்க மனப்பான்மையுடையவள். மற்றவர்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுவதைத் தாங்க மாட்டாதவள்.

அவளை முதற் தரம் சந்தித்தபோது ஆழ்கடலின் நிறத்தில் இவனை வெறித்துப் பார்த்த அவளின் நீல விழிகளுக்குள், இவன் தடுமாறி விழுந்து விட்டான். இப்படியும் ஆழமாக விழிகள் துளைத்துப் பார்க்குமா?

''நீங்கள் இந்தியனா'' அறிமுகமாக முதலே அவள் கேட்ட முதற் கேள்வியது.

''சமய ரீதியில் நான் இந்து, அரசியல் ரீதியில் அனாதை, சமுதாய ரீதியில் ஒரு கறுப்பன்''

இவன் இப்படிக் குதர்க்கமாக மறுமொழி சொன்னது அவளுக்கு வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும். தன் நீல விழிகளால் இவனை இன்னொரு தரம் ஆழம் பார்த்தாள். இவனின் அடிமனத்தின் ரகசியங்களை அம்பலப்படுத்தும் ஆவல் அந்தப் பார்வையில் பதிந்திருந்தது.

பழகத்தொடங்கிச் சில மாதங்களில் இவன் கேட்டான் ''ஏன் என்னைக் கண்ட அடுத்த வினாடியே நான் இந்தியனா என்று கேட்டாய்''

''இந்தியக் கலாசாரத்தில் எனக்கொரு பயம்''. அவள் இவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

இவன் அவளுடனிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இவன் மரக்கறிச் சைவம். ஆங்கிலேயர் தங்கள் முறையிற் செய்த சுவையற்ற சாப்பாட்டை ஏனோ தானோ என்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''ஏன் இந்தியக் கலாசாரத்தில் என்ன பயம'' என்று கேட்க மாட்டானா என்ற ஆதங்கம் அவள் பார்வையிற் குறுகுறுத்தது. கேள்வியைக் கேட்டவள் மறுமொழிக்குத் துடிப்பாள் என்று அவனுக்குத் தெரியும்.

''உங்கள் கலாசாரமும் என்னைப் பயமுறுத்துகிறது'' அவன் எடுத்தெறிந்து சொன்னான்.

அவள் இவனை வழக்கம் போல் நிதானமாக அவதானித்தாள்.

வெள்ளைத் தோலைக் கண்டால் வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்து வந்தனம் செய்யும் கறுப்பனாக இவனில்லாமலிருப்பது அவளுக்கு வித்தியாசமாக இருந்திருக்க வேண்டும் இவனிடம் பேசிக்கொண்டிருப்பதில் அவளுக்கு விருப்பம் என்றும் அவனுக்குத் தெரியும்.

''இந்தியக் கலாசாரத்தில் உனக்கு என்ன பயம்? நரபலி கொடுப்பதும், உடன்கட்டையேற்றுவதும் இந்தியாவில் எப்போதோ தடைசெய்யப்பட்டு விட்டது'' அவன் கிண்டலாகச் சொன்னான்.

''சிசுக்கொலை செய்கிறார்களே... பெண் சிசுக்கொலை செய்கிறார்களே....'' அவள் குரலில் ஆத்திரமா அல்லது பரிதாபமா?

அவன் அவளையேறிட்டுப் பார்த்தான். பொஸ்னியாவில் மனிதக் கொலை பயங்கரமாக நடப்பதை இவள் அறியாளா?

''காந்தி அஹிம்சை சொன்னாரே'' அவள் தொடர்ந்தாள். இந்தியக் கலாசாரத்தின் 'புனித'மான பகுதிகளை நிஜமாக்க நினைக்கும் கனவுகளில் வாழ்பவளா இவள்?

''உலகமெல்லாம் கொடுமைகளும், கொலைகளும் நடக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் படிப்பது தேவாரம், உடைப்பது திருக்கோயில் என்ற பொய்மையிற்தான் வாழ உலகம் எதிர்பார்க்கிறது''

''உலகம் சிசுக்கொலையை ஏற்கிறதா, அது பாவமில்லையா''

''உன்னுடைய நாட்டில் இனத்துவேசமில்லையா, மனிதனை மனிதன் இப்படித் துவேசத்துடன் நடத்தலாமா, உன்னைச் சுற்றி உலகமெல்லாம் கொலைகள் அரசியலால் நடக்கிறதே'' அவன் விட்டுக்கொடுக்காமற் சொன்னான்.

''இனத்துவேசமும் சிசுக்கொலையும் வித்தியாசமான விடயங்கள்'' அவள் தன் குரலையுயர்த்தி விவாதம் செய்தாள். நீலவிழிகளில் குழப்பம்.

''ஏகாதிபத்தியமும் இனத்துவேசமும் வித்தியாசமான விடயங்களா'' அவன் கிண்டலாகக் கேட்டான்.

ஜேன், கார்த்திகேயனுடன் விவாதிப்பதில் ஆர்வம் காட்டினாள்.

அவன் ஒரு டொக்டர். இலங்கையிலிருந்து மேற்படிப்புக்காக வந்தவன். சிங்கள அரசாங்கம் இலங்கைத் தமிழர்களை மிருகங்கள் போல் வேட்டையாடுவதால் அவன் தான் பிறந்த தாய் நாட்டுக்குத் திரும்பிப் போகாமற் தங்கி விட்ட பிரயாணி. போக இடமற்ற அகதி.

இங்கிலாந்து அவனை ஒரு நாளும் 'கவர்ந்து' பிடிக்கவில்லை. தாங்கள் வெள்ளையர்கள், உலகத்தையாண்டவர்கள் என்ற மமதையில் ஆங்கிலேயர் நடந்து கொள்ளும் விதம் அவனின் சுயமரியாதையைச் சீண்டியிழுத்தது. வெள்ளையர்களின் ஆஸ்பத்திரிகளில் கறுப்பு டொக்டர்களான ரமேஷ் பட்டேல போன்றோரை அவன் செய்யும் வேலையில் திறமையாக இல்லை என்று குற்றம் சாட்டி இந்த வெள்ளையர்கள் படுத்தும் பாடு கொஞ்சம் நஞ்சமில்லை.

ரமேசின் வார்ட்டில் ஒரு குழந்தை அகாலமாக மரணமடைந்து விட்டது. அந்த வார்ட் ஆங்கில நேர்ஸ் ரமேஷின் கவனக் குறைவால் அந்தக் குழந்தை இறந்து விட்டது என்று குற்றம் சாட்டி புகார் செய்திருந்தாள்.

அவள் செய்திருந்த குற்றச்சாட்டு நிரூபணமானால் ரமேசுக்கு வேலை போகலாம். ரமேசின் வாழ்க்கையே பாழடையலாம்.

கார்த்திகேயன் அந்த வார்ட்டின் சீனியர் டொக்டர். தன்னைப்போல் ஒரு கறுப்பு டொக்டர் படும் துன்பத்தையுணர்ந்தவன்.

இனறு ரமேசைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களின் தலைமை டொக்டரிடம் கதைத்தான்.

ரமேசுக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. கார்த்திகேயன் யோசனையுடன் தன் வார்ட்டுக்குள் நுழைந்தான்.

வயிற்றில் பசி கிள்ளியது. யாரும் நேர்ஸ் தென்பட்டால் காப்பி போட்டுத் தரமாட்டாயாயென்று கேட்க வேண்டும் போலிருந்தது.

தானாகப் போய் ஒரு கோப்பி போட்டுக் கொண்டான். பின்னேர 'வார்ட் ரவுண்ட்' தொடங்க வேண்டும்.

இவனின் மேலதிகார டொக்டர் இரண்டு கிழமைகளாக லீவிலிருந்து இன்று தான் வந்திருந்தார். வார்ட்டைப் பராமரிக்கும் பொறுப்பின் பெரும் பகுதி கார்த்திகேயனின் தலையிற் கிடந்தது.

''கார்த்தி'' ஜேன் இவன் பின்னால் வந்து இவன் கோட்டைச் சுரண்டினாள்.

'என்ன' என்பது போல் திரும்பிப் பார்த்தான்.

''ரமேசுக்கு என்ன நடந்தது''

''ஒன்றும் நடக்கவில்லை. விசாரணைக்குப் போக முதல் தன்னை வந்து இன்னொரு தரம் பார்க்கச் சொல்லிப் பெரிய டொக்டர் சொன்னார்

''டொக்டர் ரமேஷ் ஒரு நல்ல டொக்டர். இந்திய டொக்டர்களைப் பிடிக்காத படியால் இந்த ஸிஸ்டர் சும்மா குற்றம் சாட்டுகிறாள்''

ஜேன் பெருமூச்சுடன் சொன்னாள். இனவாதம் பிடித்த இந்த லண்டனில் ஜேன் போன்ற பெண்கள் இருப்பதனால் தான் நீதியும் நேர்மையும் நிலைத்து நிற்கிறதோ.

''பலமுள்ளவன் ஜெயிக்கும் உலகமிது, நாங்கள் கறுப்பர்.. வலுவிழந்தவர்கள்'' கார்த்தி எரிச்சலுடன் முணுமுணுத்தான்.

''ஸிஸ்டர் ஸிம்சன் பலமுள்ளவளா'' ஜேன் வழக்கம் போல் தன் நீலவிழிகளை இவனிற் தவழ விட்டாள்.

இவன் மறுமொழி சொல்லவில்லை.

''அவள் ஒரு.. நீ சொல்லுவது போல் ஒரு இனவாதி.. அவர்களைத் திருப்பித் தாக்காதபடியால்தான் அவர்களுக்கெல்லாம் பலம் வருகிறது''

அவன் மௌனமாக இருந்தான். புதிதாக வந்த ஒரு துருக்கியக் குழந்தையின் நோட்சைப் படித்துக்கொண்டிருந்தான்.

ஜேன் அங்குமிங்கும் பார்த்தபடி இவனின் முகத்தருகே குனிந்தாள்.

''கார்த்தி இந்தக் குழந்தையின் உண்மையான வருத்தத்தைப்பற்றி எங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று நினைக்கிறாய்'' ஜேன் என்ன சொல்ல வருகிறாள் என்று தெரியும். கறுப்பர்களை ஏனோ தானோ என்று நடத்துமுலகமிது. துருக்கியக் குழந்தையின் பெற்றோருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்கள் மொழி பெயர்க்கவென்று கூட்டிக்கொண்டு வந்த

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொந்தக்காரனும் சரியான விதத்தில், குழந்தையின் நோயைப் பற்றிய காரணங்களைச் சொல்லவில்லை.

குழந்தைக்கு என்ன வருத்தம் என்று தெரிந்து கொள்ள டொக்டர்கள் பல பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

துருக்கிய குழந்தைக்கு வயது நான்கு மாதம். துரும்பாய் இளைத்துப்போன தோற்றம். எந்த நேரமும் சிணுங்கிக்கொண்டிருக்கும். பாவம். பால் குடிக்காமல் அழுது கொண்டேயிருக்கும். குழந்தை ஒன்று பால் குடிக்க மறுத்தால், ஒன்றில் குழந்தையின் குடலிற் பிழையாக இருக்கலாம், பால் குடிக்கத் தேவையான சக்தியை குழந்தையின் இருதயம் கொடுக்காமலிருக்கலாம்.

துருக்கிய குழந்தை பால் போத்தலை வாயில் வைத்த ஒரு சில நிமிடங்களில் மூச்சு வாங்கத் தொடங்கிவிடும். சிலவேளை குடித்த பாலையே சத்தி எடுத்து விடும்.

பரிதாபமான அந்தக் குழந்தையின் தோற்றம் கார்த்திகேயனின் உணர்வைச் சிலிர்க்கப் பண்ணும்.

''இந்தத் தாய்கள் சரியான சோம்பேறிகள்'' அந்த வார்ட் ஸிஸ்டர் சிலவேளை முணு முணுப்பாள்.

கார்த்திகேயன் அவசரமாக வேலையிலீடுபட்டுக் கொண்டிருந்தான்.

வார்ட்டில் எங்கேயோ அபாய மணி ஒலித்தது. யாரோ குழந்தை இறக்கும் தறுவாயிலிருக்கிறது என்று அர்த்தம்.

கார்த்திகேயன் ஸ்டெதெஸ்கோப்பை எடுத்துக் கொண்டு ஓடினான்.

துருக்கிய குழந்தையின் உடல் அடித்துப்போட்ட வாழைத்தண்டாய்க் கிடந்தது. ஜேன் அந்தக் குழந்தைக்குப் பிராணவாய்வுக் குழாய்களைப் பூட்டிக்கொண்டிருந்தாள்.

கார்த்தி உடனடியாகக் குழந்தைக்குத் தேவையான சிகிச்சை செய்தான். 'இன்றாவீனய் ட்ரிப்' ஏற்றினான் (Iv). துருக்கிய குழந்தை மூச்செடுக்கத் துடித்தது.

உடனடியாக எக்ஸ்ரே எடுக்கப்பட்டது.

''இந்தத் தாயின் முதல் இரண்டு குழந்தைகளும் இருதய நோயால் இறந்து போனார்களாம்.

ஜேன் முணு முணுத்தாள்.

''என்ன'' கார்த்திகேயன் பதட்டத்துடன் கேட்டான்.

ஜேன் தான் முதற் சொன்னதை இன்னொரு தரம் திருப்பிச் சொன்னாள்.

இந்தத் துருக்கியக் குழந்தைக்கு இருதய நோய் இருக்கிறது என்ற செய்தி முதலே கிடைத்திருந்தால் இந்தக் குழந்தைக்கான நோயின் காரணத்தைக் கண்டறிய டொக்டர் கார்த்திகேயன் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பான்.

குழந்தை இறந்து கொண்டிருக்கிறது. ஏழைத் துருக்கியத் தாய் கண்ணீரும் கம்பலையுமாக முன்னின்றழுதாள். இவளைப் போல் எத்தனை தாய்கள், இனத்துவேசத்தாலும், ஏகாதிபத்திய வெறியாலும் தங்கள் குழந்தைகளையிழந்தார்களோ? அந்தக் குழந்தையைப் பிழைக்க வைக்க பட்டபாடு டொக்டர் கார்த்திகேயனுக்குத்தான் தெரியும்.

''இந்த வார்ட் ஸிஸ்டர் இனவாதம் பிடித்தவள் என்று சொன்னேனே நான் சொன்னது சரிதானா..''

ஜேன் கேள்வி கேட்பதில் கெட்டிக்காரி.

சரியான நேரத்தில் சிகிச்சை செய்யாதபடியால் யாரோ ஒரு குழந்தையிறந்து விட்டதாக ரமேசின் மேல் பழியைப் போட்டாளே இந்த ஆங்கிலேய ஸிஸ்டர், இப்போது என்ன மறுமொழி சொல்லப் போகிறாள். அவள் காலாகாலத்தில் இந்தக் குழந்தையின் உண்மையான நிலையையறிய நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தக் குழந்தைக்கு இந்த நிலை வந்திருக்குமா?

''ஜேன் ஏழ்மைக்கு முகம் கொடுக்க முடியாத இந்தியாவில் மட்டும் தான் சிசுக்கொலை நடக்கிறது என்று நினைக்கிறாயா'' கார்த்திகேயன் நிதானமாகக் கேட்டான்.

ஜேன் மறுமொழி சொல்லவில்லை; வெள்ளையினத்தின் பாரபட்சத்தால் எங்கேயோவெல்லாம் மனிதக்கொலைகள் நடப்பதை அவள் எப்படி மறுப்பாள்?

○

## அபகரிப்பு - 1997

பாம்ப பாம்பாகவேயிருந்து அதேவேளை
பல்லியாகவுமிருக்காதென்பது எனக்குத் தெரியும்

எல்லாமென்பதும் அனைத்துமல்ல,
அதனை விடவும் ஆழமானதும், அழகுமாகியது.

பெரிய பொய் சிறிய பொய்யிலிருந்து
வேறுபட்டு தஂனிப்படுமாகையால்,
எல்லாம் மாத்திரம், மட்டுமென்பதிலெல்லாம்
ஏற்கனவே குழம்பிப் போயிருக்கிறேன்.

நிகழ்தகவுகளில்லை என்பதற்காக
இந்த நாடு இலங்கையல்லாத
வேறு ஒன்றாவுமிருக்கக் கூடாதா என்பதற்கு
நியாயம் தேட -
இப்போதைக்கு எனக்கு அருகதையில்லை.

எனது எல்லைகள் பிரிந்து கிடக்கின்றன.
எனது நிலம் துண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.
எனது மசூதிகள் எரிக்கப்படுகின்றன.
எனது இனம் கடத்திக் கொண்டு கொல்லப்படுகிறது.

நான் வாழும் சூழல் -
சந்தேகங்களாலும், அட்டகாசங்களாலும், அகதிகளாலும்
நிறைந்து வழிகையிலெப்படி
'கெப்டன்' முனாசைப் பற்றி குறையாக நினைப்பது.

இப்போதிருந்தே -
எங்களுக்கென்றான வாழ் நிலங்கள்
புனித குடியேற்றங்களாகி விட்டன,
எங்களுக்கென்றான பம்பரங்கள் சுழல விடப்பட்டுள்ளன.

ஒருவரையொருவர் சந்தேகிக்கும் காலமிது.
கொலைகாரர்களெல்லாம் பெரும் பெரும்
அறிஞர்கள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.

சமாதானம் பற்றி பக்கம் பக்கமாக எழுதுகின்றனர்.
பலரும், பலரையும் வால் பிடிக்கின்றனர்,
வளரத் துடிக்கின்றனர்; அரசியலுக்காக.

குரல்கள் உண்டு என்பதற்காக
காகங்கள் கூட கூவ ஆரம்பித்து விடுகின்றன
அழகு குரலில்.

யாழ்ப்பாணத்தில் சாராயம்
நல்ல விலை போகின்ற போது இன்னமும் எங்களில் சிலர்
பனங்கள்ளிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர்,
சொர்க்கம் செல்ல துடிக்கின்றனர்.

அறிஞர் சந்திரனைச் சுட்டுகிறான்,
அப்பாவிகள் அவனது விரலை உற்று நோக்குகின்றனா.

அவன் அரசியலைப் பற்றி சிந்திக்கும் காலம்
அவர்கள் அபிவிருத்தியை பற்றி சிந்திக்கின்றார்கள்,
அவன் அபிவிருத்தியை சிந்திக்கும் காலம்
அவர்கள் கொந்தராத்துக்களைப் பற்றி சிந்திக்கிறார்கள்.

பௌத்த பேரினவாதத்திற்காக
அடிமைப் பட்டுப் போவதென்பது
எங்கள் தலைவர்களுக்கு பழக்க தோஷமாகிவிட்டது.
ஒரு சமூகத்தின் இலட்சியத்திற்கான
தேசிய விருதுகளென்பது
கொலைகளும், கொந்தராத்துக்களும்தான்.

பால் நகங்களைப் போலவும்,
பனங்குருத்துகள் போலவுமே மாறி விடுகின்றனர்,
மனிதர்கள்.

சிலவேளைகளில் நானும் இனவாதியாகிப் போவேனோ
ஒரே அச்சமே நிலவுகிறது.

ஒரு மோசமான அழிவிற்குப் பின்னால்
விடுதலையென்பது தன் சுயரூபங்களையிழந்தே
தலைவிரித்து ஆடுகிறது.
அது தனது எல்லையைக் கடந்து அப்பால் செல்கிறது.
பெரும் பெரும் சாதனைகளுக்கும்,
தோல்விகளுக்கும் வெளியிலும்,
தீகவாபி'யை ஊடறுத்தும்.

இனி இரவினமைதியை அது சீர்குலைக்கும்.
பகலின் வெளிச்சத்தை அது அசிங்கப்படுத்தும்.

தன் நாவுக்கு தீயிட்டுக் கொழுத்தும்,
தன்னை அழித்துக் கொள்வதாக கருதும்.

அல்லல்படும் நமதான வாழ்வின்
அந்தங்களில் குந்திக்கொண்டே அது குளிர்காயும்.

தனது குற்றங்களை வேரறுக்கும்,
தனது தண்டனையை உதறித்தள்ளும்,
'585' ஏக்கர் நிலத்தில் சிங்கள அரச ஆணிகளை
அடித்து இறுக்கி ஏத்தும்.

ஆனால்....
தேர்தலொன்று வந்து; போகுங்காலம்
எங்களில் சிலர் மேலான சத்தியங்கள் செய்வர்,
வேறு சிலர் வாய்ச் சொல்லில் வீரராகுவர்,
இம்பட்டுப் போலான இனம் பிரிவதா எனச் சொல்வர்,
சூடாய் விவாதிப்பர், பின் மாண்டு போவர்.

அதிகரித்து வரும் கொலைகள் பற்றியும்,
அழிஞ்சிப் பொத்தானை படு கொலைகள் பற்றியும்,
பேசப்படும் மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் பற்றியும்,
அடக்குமுறைக்கான மற்றோரினத்தின்
புதிய தந்திரோபாயங்கள் பற்றியுமே அடிக்கடி
வாய் பிழந்து கொண்டுமிருப்பர் சிலர் -
தங்களுக்குள்ளேயே.

குடியேற்றங்கள் நீண்டுகொண்டே போகவும் கூடாது
அது முறையுமல்ல.

-விஜயபூமி-



## நீ.. நான்... மழை....

இந்நகரத்து மழையும்
என் உடலில் வெந்து தணியும்
தீயும் ஒன்று தான்.
சிணுங்கி, பின் சிணுங்கல்களாகி
சலசலப்புடன் ஓய்ந்து விடுவதற்குள்
எனை நனைத்து
என் உயிரை உறைய வைத்தும் விடும்.

இப்பொழுதும்,
எனக்கு உள்ளும் புறமுமாய்
கொட்டுகிறது மழை.

ஓடும் பஸ்ஸிலும்
அவளுடைய மார்பை
திருட்டுத்தனமாய் வருட விளைகிற
அவனது விரல்களும்
குளிருக்குப் போர்வையாய்
அவனை ஆக்கிக்கொள்ளத் துடிக்கும்
அவளது அவஸ்தையுமாய்
யார் யாருக்கோ பயந்து
பஸ்ஸிற்குள் இழுபடும் அவர்கள்.

கண்ணாடியால் தெறித்து
என் உதட்டில் வழிந்த
ஒரு துளி மழை
எனை என்னமாய் சிலிர்ப்பிக்கிறது.
என் உடலை
எனை மீறி குளிர்வித்து
மோகத்துள் ஆழ்த்துகிறது.

கடந்து போன அழகான மழை இரவில்
எனை இறுக்கி அணைத்து
"ஏண்டி பயப்படுகிறாய்" என்று
காதோரம் உரசி
என் கூந்தலை நுகர்ந்து
............!? போன அவன்.

மனம் நோவு கண்டு அழுகிறது.

அறுத்தெறிந்து ஓரமாய்
ஒதுக்கவும் முடியாமல்
நினைவுகளோடும் நில்லாமல்
கனவுகளிலும் அவன் எனை வருட
தோற்றுத் தான் போனேன் நான்.

உயிர்ப்பெடுக்க முடியாமல்,
இயலாமையில் கண்கள் கலங்க
பற்கள் உதடுகள் கடித்து
கண்ணீரை அடக்கிக் கொண்டது.
வாழ்தலின் உயிர் மூச்சுக்காய் ஏங்கி
கால்கள் தன் வழி தொடர்கிறது.

அவன் இப்பொழுதும்
ஆராய்ந்து கொண்டிருக்கக் கூடும்
இந்தச் சமூகத்தின்
ஒழுக்கக் கட்டமைப்பு பற்றி.

●

ரேவதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "கருத்தியல்களை கல்லெறிந்து குழப்ப முயல்கிறேன்"

## திரைப்படவியலாளர் தர்மசிறி பண்டாரநாயக்க



இலங்கை திரைப்படத்துறையின் சிறந்த திரைப்படவியலாளராக கருதப்படும் தர்மசிறி பண்டாரநாயக்க அவர்கள் தமது திரைப்பட தயாரிப்பை ஆரம்பித்தது *'ஹங்சவிலக்'* எனும் திரைப்படத்தின் மூலமாகும். பின்னர் *''துன் வெனி யாமய''*, *''சுத்திலாகே கத்தாவ''* போன்ற திரைப்படங்கள் மூலமும் *''ஏக்காதிபதி''*, *''மக்கராக்ஷயா''*, *''தவள பீஷன''*, *''யக்ஷாகமனய''* போன்ற நாடகங்கள் மூலமும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்த அவர், தற்போது கதையாடல்களுக்குட்பட்டிருக்கும் பவதுக்க திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

இத்திரைப்படம் மிகுந்த சிரமங்களுக்கும் சினிமாத்துறைக் கெடுபிடிகளுக்கும் உட்பட்டு 50வது நாளைஎட்டியிருக்கிறது. சாதாரண திரைப்படத்தைக் காண்பிக்கும் நேரத்திற்கேற்ப வெட்டிச் சுருக்க வேண்டிய அவல நிலையோடே இப்படம் திரையிடப்பட்டிருக்கிறது. இதில் அதிருப்தியுற்ற தர்மசிறி பண்டாரநாயக்க முழுப் பிரதியையும், இரண்டாம் பாகமான 'பவகர்ம'வையும் பத்திரிகையாளர்களுக்கும் ஆர்வலர்களுக்குமென 'எல்பின்ஸ்டன்' திரையரங்கில் காண்பித்தார் என்பதும் இங்கு விஷேடமாகக் குறிப்பிடத்தக்கது.

திரைப்படம், கலை தொடர்பாக தர்மசிறி அவர்கள் 'சித்திஜய' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

***திரைப்படத்துறையை ஓர் கலை ஊடகமாக பாவிப்பது தொடர்பாக உங்கள் நோக்கம் யாது?***

திரைப்படத்துறையை எனது ஆத்மார்த்த அறிவிப்பாக பயன்படுத்தவே முயற்சித்து வருகிறேன்.

அதேபோல் நாடகக் கலைக்கேயுரித்தான இயல்புகளைக்கொண்ட நவீன தொழில்நுட்ப பலம் திரைப்படத்துறைக்கும் உண்டு. இவ்வதிகாரத்துக்கு அடிபணியவேண்டிய தேவை எனது திரைப்படங்களுக்கும் நேர்ந்தது. அது இளமையுடன் பொருந்திய இயல்பு. இன்று நான் மேலே குறிப்பிட்ட பலத்தை ஆத்ம அறிவிப்பாக வெளிப் படுத்தவே முயற்சிக்கிறேன். இதனை கலை ஊடகமாக மாற்றவேண்டுமெனில் நாம் அதிக பட்ச ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி வரும். இவ்வாய்வுகள் இரு முறையிலானவை. ஒன்று, தொடர்பூடக கருவிகளுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வு. மற்றையது நாம் வெளிப்படுத்த முயலும் விடயங்களை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு இடம்பெறும் சம்பவங்களுடன் தொடர்புடைய அனுபவப்பூர்வ சக்தியுடன் மேற்கொள்ளும் ஆய்வாகும். இவற்றை எனது திரைப்படங்களுடன் உதாரணம் காட்டுவதாயின், தொடர்பூடகத் தொழில்நுட்ப பலத்துடன் மேற்கொண்ட ஆய்வே ''ஹங்சவிலக்'' ஆகும்.

***''சுத்திலாகே கத்தாவ'' திரைப்படத்தில் பொருந்தாத பாலியல் காட்சிகளை திணித்ததன் மூலம் பிற்கால பாலியல் திரைப்படங்களுக்கு அடித்தளம் இட்டது நீங்கள் தான் என்ற குற்றச்சாட்டு நிலவுவது பற்றி உங்கள் கருத்து?***

குற்றச்சாட்டை முன்வைப்பவர்களுக்காக சுருக்கமாக விடை கூறுவது நன்று. எனது ''துன்வெனியாமய'', ''சுத்திலாகே கத்தாவ'' ஆகிய இரண்டும் வயது வந்தோருக்கு மட்டும் உரிய படங்கள். அவை இரண்டும் வெவ்வேறு கருத்தாக்கங்கள் கொண்டே தயாரிக்கப்பட்டன. உளவியல் ரீதியாக பலவீனமான ஒருவனின் முதலிரவு தொடர்பான திரையோவியமாக ''துன்வெனியாமய'' விளங்கியது. பாலியல் சுரண்டல் தன்மைக்குஉள்ளான கிராமிய பெண்ணொருத்தியின் கதையாக ''சுத்திலாகே கத்தாவ'' விளங்கியது. இவ்விரண்டு திரைப்படங்களை மீண்டும் பார்க்கவும், தற்போதுள்ள பாலியல் திரைப்படங்களையும் பாருங்கள். பின்னர் குற்றச்சாட்டும் அறியாமையும் எவ்வளவு தூரம் ஒன்றிணைந்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். அதன் பின் ''பவதுக்க'', ''பவகர்ம'' பாருங்கள்.

***''பவதுக்க'', ''பவகர்ம'' திரைப் படைப்பு மூலம் வரலாற்று கதையொன்றை மீள் படைப்பாக்கம் செய்தது ஏன்?***

இத்திரைப்படம் வரலாற்று ரீதியானதல்ல. இன்றுவரை இந்நிலைமை இருக்கின்றது என்றே கூற வேண்டும். திரைப்படவியலாளர் என்ற ரீதியில் நான் இயல்பான சமூக நீரோட்டத்தை தடுத்து நிறுத்த முயற்சிக்கும் கருத்தியல்களை கல்லெறிந்து குழப்பவே முயற்சிக்கிறேன். இங்கு கல்லாக நான் கருதுவது எனது அனுபவங்களையே. இவ்வனுபவங்களை மேலும் பலம் வாய்ந்ததாகவும், சிறந்ததாகவும் உருவாக்கிக்கொள்ள அவகாசம் தேவை. இவ்வனைத்து அனுபவங்களையும் சமூகம், அரசியல மூலமே பெற்றுக்கொண்டேன். பவதுக்கவை இதன் ஆரம்பமாக கருதுகிறேன்.

***தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவற்றுக்கிடையில் தொடர்பூடக வேறுபாடுகள் தென்படுகின்றதா? தொலைக்காட்சியை உங்களது படைப்புக்காக பிரயோகிக்க நீங்கள் விரும்பவில்லையா?***

தொலைக்காட்சியை ஓர் தனிக்கலையாக பயன்படுத்த, எமது தொடர்புசாதனத்துறையைச் சேர்ந்தவர்கள் முயற்சிப்பதை எண்ணி மகிழ்வுருகிறேன். எனினும் இது நீண்ட கால உத்தரவு கொண்டதா என்பதை என்னால் கூற முடியாது. இன்று பெரும்பாலான இயக்குநர்களை, படைப்பாளர்களை வர்த்தக நிறுவனங்கள் தொலைக்காட்சி நாடகங்களால் வரையறுத்து வைத்துள்ளன. தொலைக்காட்சி நாடகங்கள், அடிக்கடி ஒளிபரப்பாவதால், பார்வையாளர்களும் சோர்வு நிலையை அடைந்துள்ளனர்.

ஒய்வற்ற சமூகம் ஒன்று, பணத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகம் ஒன்று, என்ற அடிப்படையில் நாம் மேற்கொள்ளும் விமர்சனங்கள் எமது பலவீனங்களை மூடி மறைக்க குறிப்பிடும் விடயங்களாகவே எனக்கு தோன்றுகின்றது. தொலைக்காட்சி, செய்தி பரிவர்த்தனை தொடர்பாக மிக முக்கிய கரும மாற்றுகின்றது. இதை நாம் எந்தவித சந்தேகமும் இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கால கட்டத்தில் நாம் மேடையில் செய்ய நினைத்ததை இன்று தொலைக்காட்சியில் செய்யமுடியும் என்ற நம்பிக்கை மேலோங்கியுள்ளது. தொலைக்காட்சி என்ற தொடர்புசாதனம் மூலம் பெரும்பாலான மக்களின் அவதானத்தை பெற முடியும் என்ற கூற்றை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை, மக்கள் மத்தியில் கிடைக்கும் எதிர்வினைகள் அடிப்படையில் பார்த்தால் மாயையாகவே தோன்று கின்றது.

சர்வதேச தளத்தில் தொலைக்காட்சி எங்ஙனம் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் கற்க வேண்டும். சகலவற்றுக்கும் முதல் நாம், இலங்கை சனத்தொகை குறைவான நாடு என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிப்பது பற்றி நான் இன்னும் எண்ணவில்லை. அந்த கால அவகாசத்துள் மேடைப் படைப்பொன்றை அல்லது திரைப்படைப்பொன்றை மேற்கொள்ளவே விரும்புகின்றேன். தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பின் மூலம் பொருளாதார வசதிகள், பார்வையாளர் ஆதரவுகள் கிடைத்தாலும் மாறாக ஆத்ம திருப்தி கிடைக்காவிடின் அந்த விடயம் பற்றி எண்ணாதிருப்பது எனக்கு மன அமைதியைத் தரும். பிற நாடுகளைப் போல் மிக பரந்த முறையில் நாம் தொலைக்காட்சியை பயன்படுத்துவது இல்லை. வர்த்தக ஆதிக்கத்துள் இத்தொடர்பூடகம் சிக்குப்பட்டு விட்டது.

***இலங்கைத் திரைப்படத்துறையின் நெருக்கடி பற்றி வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பற்றி உங்கள் கருத்து?***

திரைப்படத்துறை மட்டுமன்றி பிற ஊடகங்களிலும் பிரச்சினை நிலவுகின்றது. புதிய பொருளாதாரக் கொள்கையின் பின்னரே அனைத்து நாடுகளும் மாற்று சினிமா பற்றி எண்ணின. மோசமான முதலீடுகள் மாற்று சினிமாவையும் நோக்கிச் செல்கின்றன. ஈரான் திரைப்படத்துறையை எடுத்துக்கொண்டால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை விடுத்து அது வேறெந்த திசையையும் நாடிச் செல்லாது. அது மாற்றை நாடிச் செல்வதும் ஏற்றுக்கொள்ளப் பட்டதன் ஊடாகவே. அடிப்படைவாதம் அதிகாரத்துவம், நிறைந்த அவ்வாறான நாட்டில்தான் எபொட் பஸ்ல் ஜலிலி போன்ற திரைப்படவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டதிலிருந்து சமூக நடவடிக்கைகளுடனான ஆய்வினை மேற்கொள்கின்றனர். அவர்களுக்கு பின் கெமரா ஒன்று செல்கின்றது. ஆனால் நாம் இன்னும் மாதிரிகளுக்குள்ளும், உள்ளடக்கங்களுக்குள்ளும் சிக்குப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். இலங்கைத் திரைப் படத்துறை புத்துயிர் பெறவேண்டுமாயின் இவ்வரையறையிலிருந்து நாம் மீள வேண்டும். ஜலிலியின் திரைப்படங்களில் மனித சமூகம் அடையும் வேதனைகளின் வெளிப்பாட்டை நான் காண்கிறேன். அவர் அதில் கைதேர்ந்தவராக இருக்கிறார்.

எமது திரைப்படத்துறைக்கும் இந் நிலையே தேவை. நான் இன்னும் ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன். சமீபத்தில் ரஷ்ய திரைப்படவியலாளர் ஒருவர் செச்னியப் பிரச்சினையை மையமாகக்கொண்டு திரைப்படம் ஒன்றைத் தயாரித்தார். அதில் செச்னிய கெரில்லாக்களின் யுத்த நடவடிக்கை தொடர்பான நிகழ்வுகள் சித்திரிக்கப்படுகின்றன. அதில் அரசியல் கதைக்கரு இருக்கவில்லை. மனிதாபிமானம் எவ்வளவு உத்தமமானது, அது ஏன் சமூகத்தில் இல்லை என்ற கேள்விகளே இங்கு எழுப்பப்படுகின்றன. திரைப்படத்துறையைப் பற்றி நாம் கதைப்பதைவிட, முன்னேறும் தேவை அதிகம் உள்ளது. நவீன பொருளதார மாற்றத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியம் எங்கிலுமே பரவிவிட்டது அதை உடைத்தெறிய எவராலுமே முடியாது. கூட்டாக அதில் ஈடுபடுபவர்களின் தியாக அடிப்படையிலேயே அதை மேற்கொள்ள முடியும்.

***சமூக பொருளாதார நெருக்கடியை சரியாக கண் காணித்து, அதனுடன் போட்டியிட்டு, அதற்கேற்ற வாறு தொடர்பூடகங்களைப் பாவிக்கும் கலைஞர்கள் எமது சமூகத்தில் குறைவாகத் தானே உள்ளனர்?***

நாம் அப்படிக் கூற முடியாது. எமது நாட்டில் கலைஞர்கள் வளர்ச்சியுறவில்லை, அவர்களுக்கு அரசியல் அறிவு இல்லை என சிலர் குறிப்பிடுகின்றனர். நான் ஜலிலி ப றிக் கதைத்தேன். அவர் அரசியலைப் பற்றிக் கதைக்கவில்லை என யாராலும் கூற முடியாது. அவர் கூறுவதையும், சித்திரிப்பதையும் அடிப்படையாக வைத்தே நாம் முடிவெடுக்க வேண்டும். இலங்கைப் போன்ற பிரச்சினை மிக்க நாடுகளில் இவ்வாறான முயற்சிகளை எடுக்கும் பலர் உள்ளனர். எனது குறைநிறைகளை பார்வையாளர்களும், விமர்சகர்களும் அறிந்து வைத்தே உள்ளனர். கலைஞர்கள் அரசியல் ரீதியாக வளர்ச்சியுறுவது அவசியம். அரசியல் ரீதியாக எந்தக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்பது தேவையற்ற விடயம். மனிதாபிமானமும் அதன் வீழ்ச்சியுமே நமக்குத் தேவை. இங்கு கலைஞர்களின் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தைப் பறிக்கும் முயற்சியே மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. கலைஞன் என்பவன் பரந்த கருத்துக்களைக் கொண்டவன்.

***பவதுக்க, பவகர்ம திரைப்படங்களைப் பற்றிப் பேசும் பொழுது அதன் திரைப்பட இயல்பு, நெருக்கடிகள் பற்றிக் கூற முடியுமா?***

உண்மையில் சில கேள்விகளுக்கு பதில் அளிக்க எனக்குத் தெரியாது என்றே கூற வேண்டும். இந்த அறியாமையை இவ்வாறு குறிப்பிடலாம். நான் உங்களை அறியாவிட்டாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை தெரிந்து கொண்டு உங்களிடம் இருந்து நிறைய விடயங்களை அறிந்து கொள்ள




முடிந்தது. நான் தற்போது பல பிரச்சினைகளை மறந்து விட்டு உங்களுடன் ஆழமாக கருத்தாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். நாம் ஓர் தொடர்பூடகத்தை பயன்படுத்தும்போது எம்மைப் பற்றிய தீர்மானங்கள் வெளிப்படுகின்றன. பவதுக்க, பவகர்ம பற்றி சமூகத்தின் தீர்மானங்கள் வெளிப்படுவதன் மூலமே எனது படைப்பு சமூகத்தை அடைந்துள்ளதா இல்லையா என்பது தெளிவாகும். என்னால் கைப்பற்றப்பட்ட, அழுத்தம் வழங்கப்பட்ட அனைத்துடனும் இவற்றை கூறும் தேவை எனக்கிருந்தது. எனக்கு அதற்கு ஆறு மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. எனக்கு திரைக்கதை எழுதத் தெரியாது. திரைக்கதை மிக நீண்டதாக உள்ளது என சிலர் குறிப்பிடுகின்றனர். நான் ''ஹங்சவிலக்''

→18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது?**
**வெளியீடு:**
*வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,*
*15, A ரோஹினி வீதி,*
*கொழும்பு - 06.*
*விலை 15/=*

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் உப தலைவரான மௌலவி பி.ஏ.எஸ். சுப்யான் (யாகூத்தி) அவர்கள் தினகரன் வாரமஞ்சரி, சரிநிகர், அல்ஹஸனாத், யுக்திய ஆகிய வெளியீடுகளுக்கு அளித்த பேட்டிகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

முறையே, வடபுலமே எங்கள் தாயகம் அங்கே வாழ்வது எமது பிறப்புரிமை, வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தாயக மண்ணிலேயே இடம்பெற வேண்டும். வடக்கு முஸ்லிம்கள் அரசியல் கட்சிகளின் பகைடைக்காய்களா, வடபகுதி முஸ்லிம் அகதிப்பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை ஆகிய தலைப்புகளின் கீழ் அவரது பேட்டிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

வடக்கு முஸ்லிம்கள் தொடர்பான சகல விடயங்களிலும் மிக அக்கறையாகச் செயற்பட்டுவரும் இவ்வமைப்பு 'அகதி' என்ற சஞ்சிகையையும் வேறும்பல நூல்களையும் (ஆங்கில் மொழியிலும் கூட) வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

*ரத்னா*




**"விடுதலை"**
*(சிறுகதைத் தொகுதி)*
*திக்குவல்லை கமால்*
*பேசும் பேனா வெளியீடு*
*5,1/20, முதலாம் மாடி,*
*சுப்பர் மார்க்கட்*
*கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு - 13*

ஈழத்து சிறுகதைப் படைப்பாளர்களில் அறியப்பட்டவர்களில் ஒருவர் திக்குவல்லை கமால் ''கோடையும் வரம்புகளை உடைக்கும்'', ''குருட்டு வெளிச்சம்'' என்பன ஏற்கெனவே வெளிவந்த இவரின் சிறுகதைத் தொகுப்புகளாகும்.


விடுதலை இவரின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பாகும். இதில் இவரின் பதினொரு சிறுகதைகள் அடங்கியுள்ளன.

தென்னிலங்கையில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் வாழ்வோட்டங்களையும் அவர்களின் சமூக குடும்ப உறவுகளின் பின்னல்களையும் பேச்சுவழக்கினுடாகவே மிக இயல்பாக சொல்கின்றன இவரின் சிறுகதைகள்.

இத்தொகுதியில் அடங்கியுள்ள பதினொரு சிறுகதைகளையும் படிக்கும் போது தென்னிலங்கையின் முஸ்லிம் கிராமமொன்றினது வாசனையும், அந்த மனிதர்களின் வாழ் நிலையோட்டங்களும் கண்முன்னே நிற்கின்றன.

இருப்பினும் பல ஆண்டுகளுக்கு முன்னர் மல்லிகையில் படித்த திக்குவல்லை கமாலின் படைப்புகளில் இருந்த செறிவும் வீச்சும் ஏனோ விடுதலையில் எமக்கு கிடைக்கவில்லை என்ற உணர்வு மனதில் மெல்லென எழத்தான் செய்கிறது.

*பி. ரவிவர்மன்*




**''ஆனந்தன் கவிதைகள்''**
*மட்டக்களப்பு வாசகர் வட்டம்*
*87/2, பனியர்வீதி,*
*மட்டக்களப்பு*
*விலை 40/= ரூபா.*

05.12.1995இல் புதுக்குடியிருப்பில் வைத்து துப்பாக்கி அரக்கர்களின் கோரத்தாண்டவத் திற்கிலக்காகிய ஆனந்தன்; அமரர் ஆனந்தனாகி ஒன்றரை வருடத்தைத் தாண்டிக்கொண்டிருக்கும் வேளையில் ஆனந்தனது கவிதைகள் தொகுப்பாக்கியிருக்கிறது மட்டக்களப்பு வாசகர் வட்டம்.

ஏலவே ஆனந்தனின் பத்தி எழுத்துக்களையும், வேறு சில ஆக்கங்களையும் வியூகம் 'துளிர்' என்ற தலைப்பில் தொகுத்து வெளியிட்டிருந்தது.

''ஆனந்தன் நூற்றுக்கணக்கில் கவிதை எழுதியவனல்ல. இத்தொகுதியில் சுமார் இருபது கவிதைகள் உள்ளன. இன்னும் தேடினால் சில கவிதைகள் கிடைக்கக்கூடும். அவனது ஆக்கங்கள் எண்ணிக்கையில் கொஞ்சந்தான் எனினும், அவனது எண்ணங்களையும் உணர்வுகளையும் தார்மீக நோக்கையும் அவை நமக்குக் காட்டுவன.''

''இந்தத் தொகுப்பில் அவனது ஆளுமையின் ஒரு சிறு துளியைத்தான் நாம் பார்க்கிறோம். அவன் எழுதிய சில கவிதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. அவன் எழுதாத கவிதைகள் நம் நெஞ்சம் நிறைய உள்ளன. அவனின் மறைவே ஒரு சோகக் கவிதையாக நம் உணர்வுகளில் வியாபித்துள்ளது. தனது மீதிக்கவிதைகளை நம் கனவுகளில் வந்து அவன் பாடுவான்'' என்கிறார் முன்னுரையில் நுஃமான்.

ஆனந்தனது சிறுகதைகளை, மொழி பெயர்ப்புக் கதைகளை வேறுசில நண்பர்கள் வெளியிட இருப்பதாய் அறிய முடிகிறது.

*ராசாத்தி*

## பாற்பனியம் + பார்த்தீனியம் = டார்த்தீனியம்

நேரு பரம்பரையின் செல்வாக்கு மங்குவதற்கு முன்பு, இந்தியாவின் பிரதமராக; குடியரசுத் தலைவராக ஒரு பார்ப்பனர் அல்லாதவர் வருவதென்பது இயலாத காரியம். தேவகௌடா பிரதமரானது ஒரு விபத்து என்று கூடச் சொல்லலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியின் தலைவரான சீத்தாரம் கேசரியும், இன்றைய குடியரசுத் தலைவரான நாராயணனும்; தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட பார்ப்பனர்களைவிட மிக அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது வியப்பூட்டும் காரியமாகப் படுகின்றது. பார்ப்பனியம் தனது முகத்தை தந்திரமாக மாற்றிக்கொள்கின்றதோ? கேசரியும், நாராயணனும் பார்ப்பனர்கள் அல்லர்தான். எனினும் பார்ப்பனியர்களா இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்:

இந்த பார்ப்பனியம் இருக்கிறதே அது எங்கள் நாட்டு சிங்கள பௌத்தத்தைப் போன்று மிகவும் பொல்லாத ஒரு சரக்கு.

ஆனால் பார்ப்பனியத்தை விடவும் பயங்கரமான ஒன்று உண்டு. அதன் பெயர் பார்த்தீனியம். ஒரு செடி. விஷச் செடி.

புதர்களாக மண்டி வளரும் இச் செடி, கொஞ்சம் கூட அழகற்றது. பார்த்தீனியத்தின் பூக்களில் தேன் இருக்காது. இதன் இலைகள் பிளவு பட்டனவாய் பரந்திருக்கும். இந்த இலைகளை விலங்குகள் உண்ண மாட்டா. பஞ்சம், யுத்தம் என்பவற்றில் அடிபட்டு தின்பதற்கு ஏதுமல்லாத விலங்குகள் இதையே கதியென்று தின்றால் அவற்றில் சுரக்கும் பால் கசக்குமாம். வாய், தொண்டை, குடல் என்பன வெந்து போய் விடுமாம். மயிர் உதிர்ந்து தோல் வெளிறி மிகவும் பரிதாபமாக செத்துப் போய் விடுமாம்.

இச்செடியினால் பாதிக்கப்பட்டவர்களில் 40% மானோர் ஒவ்வாமையினால் தற்கொலைக்கு தூண்டப்பட்டுள்ளார்களாம். பெங்களூரில் ஒரு இளவயது டொக்டரே இதனால் பாதிக்கப்பட்டு சொறிந்து கொள்ள இயலாமல் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியும் நாளிதழ்களில் வெளிவந்திருந்தது.

இந்தச் செடியின் மகரந்தத் தூள்களை சுவாசித்தால் ஆஸ்துமா நோய் உண்டாகுமாம். பார்த்தீனியப் புதர்கள் அருகாக நடந்தாலே சளி பிடித்து விடும். இந்தச் செடியை தீண்டினால் பயங்கரமான நமைச்சல் எடுக்குமாம். சொறிய இராவணன் வந்தாலும் இயலாது. அதன்பின் எண்ணெய் உறைப்புச் சாப்பாடு சாப்பிட்டால் தோல் வெடித்து விகாரமான உருவம் தோன்றும்! (மில்க் ஒவ் மக்னீசியா குளிசைகள் இரண்டை கடித்துச் சாப்பிட்டும் வேலையில்லை!) இந்தச் செடியை எரிப்பது ஆபத்தானது. எரிப்பவருக்கு முகம் குளவி கொட்டினது போல வீங்கிவிடும்.

இந்தச் செடியின் தாவரவியல் பெயர் - பார்த்தீனியம் ஹிஸ்டிரோ போரஸ். ஜமைக்கா. தீவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் உள்ளது. இந்தியாவுக்கு 1955 இல் இறக்குமதியான கோதுமையுடன் சேர்ந்து புலம்பெயர்ந்து விட்டது. 1980களில் தமிழ் நாட்டிலும் பரவிட்டது. அந்த நாட்களில் ''குமுதம் பிரார்த்தனை கிளப்''பில் இதனால் பாதிக்கப்பட்ட ஒருவருக்காக பிரார்த்தனை செய்யப்பட்டது. வேறு வார இதழ்களிலும் நமைச்சல் தாங்க மாட்டாதவர்களின் கூற்றுக்கள் பிரசுரமாயின.

அந்த நாட்களில் தான் எங்களுக்கு இந்தியா 'நல்லெண்ண உதவியாக' பாணும் வெங்காயமும் எறிந்தது. நல்ல காலம் தப்பினோம்! இனிமேலாவது இந்தியாவிடம் 'நல்லெண்ண உதவி' கோருபவர்கள் நன்கு புடைத்து கொழித்து கழுவிய அரிசி, கோதுமை ஆகிய வற்றை கோருவது நல்லது!!

ஒரு ஆண்டுக்கு நான்கு தலைமுறைகளாக இது முளைக்க வல்லது. ஒரு செடியிலிருந்து முதன் மூன்று மாதத்துக்குள் பத்தாயிரம் விதைகள் தோன்றுமாம்! அடுத்த மூன்று மாதத்தில் 10000 X 10000 - அதாவது பத்துக்கோடி. ஒரு ஆண்டுக்குள் கணக்கிடவே முடியாதளவுக்கு விதைகள் பெருகும். அசுர வித்து!

இதன் விதை காற்றின் மூலம் பரவும். எண்பது அடி உயரத்துக்கு பறக்குமாம். எந்த உவர் நிலத்திலும் சிறிதளவு தண்ணீர் இருந்தாற்போதும், இவ்விதை முளைத்துவிடும்! முளைத்திறன் 1000% அதாவது சகல விதைகளும் முளைத்துவிடும். சாக்கடையில், சீமெந்துச் சுவரில், கொங்கிரீட் இடுக்குகளில் கூட முளைத்து விடும்! (ஸ்பைடர் செடி என்று செல்லமாக கூப்பிடலாம். இதற்கு இந்தியாவில் காங்கிரஸ் செடி என்றும் ஒரு பெயர் உண்டு. என்னே பொருத்தம்!)

இந்தச் செடியினால் உண்டாகும் பாதிப்பின் உச்சக்கட்டம் ஒன்று உண்டு. இது மிகவேகமாகப் பரவி ஊர் முழுக்க ஒரே புதர்களாய் காடாக மண்டிவிடும். ஊர் அழகிழந்து விடும். பாழாகிவிடும். பாதிக்கப்பட்டோர் குடிபெயர நேரும்! (சமாதானம்' செய்யும் பாக்கியவான்களுக்கு மிகவும் தோதான ஆயுதம். கத்தியின்றி இரத்தமின்றி யுத்த மொன்று வருகுது என்று பாடிப்பாடியே 'சமாதானத்தை' கொண்டு வந்து விடலாம்!)

இதனால் பயன்கள் ஏதும் இல்லையா என்று கேட்கலாம். உண்டு, உண்டு.

இச்செடியிலிருந்து புற்றுநோய்க்கு மருந்து தயாரிக்கலாமாம். ஆனால் அம்மருந்து திருத்தமற்றது. புற்றுநோய்க் கலங்களை மட்டுமல்ல நல்ல கலங்களையும் கொன்று விடும்.

அதைவிட கதை எழுதலாம். பல வருடங்களுக்கு முன்பு ஒரு பெண் எழுத்தாளர் பஸ் ஆய்க்கினைகளிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஒரு பெண் தனது பைக்குள் காஞ்சோண்டி செடியை வைத்திருந்ததாக ஒரு கதை பண்ணியிருந்தார். இனி பத்தாம் பசலி காஞ்சோண்டி எதற்கு? பார்த்தீனியம் வைத்துக்கொள்ளுமாறு கதை எழுதலாம்!

ஆனால் ஒரு எழுத்தாளர் இந்தப் பார்த்தீனியத்தை வைத்து ஒரு மிக அருமையான கதை எழுதியுள்ளார். தென்னிந்தியாவின் தர்மபுரி மாவட்டம் இந்த பார்த்தீனியத்தால் மிகவும் பாதிக்கப்பட்டதாம். ஜெயமோகன் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் எழுதிய மிகச் சிறந்த கதைகளுள் ஒன்று டார்த்தீனியம்.

கணையாழியில் வெளிவந்தபோது அதைப்படித்து, திரும்பத்திரும்பப் படித்து பிரமித்திருக்கிறேன். மிரண்டிருக்கிறேன். அற்புதமான கதை. நண்பர்களையும் அதைப் படித்து பார்க்குமாறு தூண்டியிருக்கிறேன். அவரது 'மண்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இந்தக் கதையும் இடம்பெற்றிருக்கிறது.

படிமம், உருவகம், குறியீடு என்பவற்றின் அழுத்தம் திருத்தமான வடிவத்தை இக்கதையில் காணலாம்.

ஜெயமோகன் எழுதிய கதைகளுள் எனக்கு மிகவும் பிடித்தமானது 'ஜகன் மித்யை' என்னும் சிறுகதை.

'ஜகன்மித்யை'யில் பார்ப்பனர்களை ஜெயமோகன் ஆராதிக்கின்றார் என்று நான் நினைக்கின்றேன். ஜெயமோகன் என்ன சொல்வாரோ?




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலித்தியக் குறிப்புகள்



## பொறுப்பேற்பது யார்?

அண்மையில் எனது வீட்டுக்கு அந்த மாணவி வந்தார். பெயர் ஷோபா. களுத்துறை நகர சபையில் பணிபுரின்ற நகரசுத்தித் தொழிலாளி ஒருவரின் மகள்.

"அண்ணா நான் எட்வான்ஸ் லெவலுக்குப் பாஸாகிவிட்டேன். பாடசாலையும் கூட கிடைத்துவிட்டது. அம்மாவும் அப்பாவும் நான் போவதை விரும்புகிறார்கள். ஆனால் பாடசாலைக்கான ஆரம்ப செலவுகளைக் கூட சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர். "என்னத்த படிப்பு, சும்மா வீட்டுல கிட" என்று சொல்லி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது அண்ணா" என்று கூறிய போது எனது சிறு வயது ஞாபகம் வந்தது.

0 - 0 - 0

இப்படித்தான் எனது அப்பா கொழும்பு கோட்டை நகர சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரிந்தார். வீட்டில் வறுமை எனக்குப்பிறகு இரு தங்கைகள். எனக்கு பிறப்பிலேயே இடது கால் சிறிது ஊனமும் உடல் பலவீனமும். எனக்கு அரசாங்க வைத்தியாசாலையில் வாரத்துக்கு ஒரு முறை திரிபோசா கிடைக்கும் அது என்னை விட எமது குடும்பத்திலுள்ளவர்களின் பசியை சில வேளைகளில் ஆற்றியது. எனது பாடசாலை லீவு நாட்களில் என்னையும் தன்னோடு கூட்டிச் செல்வார் அப்பா. அவர் வேலை செய்யும் போது என்னையும் கூடவே வைத்துக்கொள்வார். அந்தப் பாதையில் சிறு ரொட்டிக் கடையில் பிளேன்டியும் ரொட்டியும் வாங்கித் தருவார். வேலை முடிய, அப்பா என்னை கோல்பேஸ் கடலில் குளிப்பாட்டி விடுவார். தனது நன்பரிடம் என்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு பக்கத்திலுள்ள இன்டர் கொன்டினென்டல் ஹோட்டலுக்கு போய் அங்கு சட்டிப்பானைகளை கழுவி கொடுத்துவிட்டு மீதமிஞ்சிய அடிச்சோற்றை பேக் ஒன்றில் கட்டி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போவோம். மத்தியான சாப்பாட்டுக்கு அப்பா கொண்டு வருவதை எதிர் பார்த்தபடி அம்மா காத்திருப்பார். அம்மா செய்து வைத்திருந்த "தொவையல்" அல்லது கீரையை வைத்து தங்கைகள் அம்மா அப்பா எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து மகிழ்ச்சியாக சாப்பிடுவோம்.

எனக்கு அப்பா பாடம் சொல்லித் தருவார். அப்பா கொடுக்கும் வீட்டுப் பாடங்களில் ஒரு பிழைக்கு ஐந்து அடி என கிடைக்கும். எனவே நான் பிழை விடுவது குறைவு. அவ்வளவு கண்டிப்பு.

"நான் படிக்க மிகவும் ஆசைப்பட்டேன் வீட்டில் உன் பாட்டி என்னை பாடசாலைக்கு அனுப்புவதை விட சம்பாதித்து தரவேண்டுமென்று நிர்ப்பந்தித்தார். நான் அவர்களையும் மீறி படித்தேன். பாடசாலை செலவுகளை சமாளிக்க அண்ணாவோடு போய் செருப்பு பட்டறையில் இருப்பேன். பேமன்டில் வியாபாரம் செய்தேன். பல்லைக்கடித்துக் கொண்டு 8ம் வகுப்பு வரைதான் படிக்க முடிந்தது. எனவே நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். நல்ல பிள்ளையென பேர் எடுக்க் வேண்டும். பெரிய்ய ஆளாக வரவேண்டும்." என்று அடிக்கடி அப்பா சொல்வார்.

ஆனாலும் அப்பாவின் வருமானம் எல்லோரது வயிற்றுபசியைத் தீர்க்கக் கூட போதுமானதாக இருக்கவில்லை. பின் எப்படி எனதும் தங்கைகளினதும் படிப்பு செலவுக்கு போதுமாகும்.

அந்த சம்பவம் எனக்கு இன்னமும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அப்பாவுக்கும் ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன்.

ஒரு நாள் பாடசாலையில் டீச்சர் எனக்கு புட்ரூலரால் கடுமையாக அடித்தார். செய்த குற்றம், அன்றும் நான் புதுக்கொப்பி கொண்டு போயிருக்கவில்லை. கைகள் இரண்டையும் நீட்டச்சொல்லி மறு பக்கம் கைகளை பிறட்டச் சொல்லி புட்ரூலின் முனைகளால் தான் அந்த டீச்சர் அடிப்பார். அன்று வீட்டுக்கு வந்ததும் அம்மாவுக்கு சொன்னேன். அப்பாவிடம் சொல்லிப் பார்ப்போம் என கூறினார்.

ஆனால் அன்றும் நான் அப்பாவை நம்பியிருக்கவில்லை. அன்று இரவு குப்பி லாம்புக்கு முன்னால் குந்திக் கொண்டு பழைய கொப்பியை எடுத்தேன். எழுதியிருந்ததெல்லாவற்றையும் இரேசரால் அழித்தேன். நாளை எனக்கு பாடமெழுத கொப்பி தயாராகிக்கொண்டிருந்தது. சில இடங்களில் பேனையால் டீச்சர் எழுதியவற்றை எச்சில் தொட்டு விரலால் அழுத்தித் தேய்த்தேன். அப்பா அதற்குள் வந்துவிட்டார். என்ன செய்கிறாய் எனக் கேட்டுக் கொண்டே கிட்ட வந்தார். மிரண்டு போயிருந்த எனது முகத்தைப் பார்த்துவிட்டு கீழே குந்திக்கொண்டு கொப்பியை பிரட்டிப் பார்த்துக் கொண்டே என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஏங்கி ஏங்கி அழுதார். அம்மாவிடம் சொல்லிப் புலம்பினார்.

தனது இயலாமையை நினைத்து அவர் புலம்பினார். "எவ்வளவு கஷ்ரப்பட்டாலும் உனது படிப்பை இடை நிறுதத விடமாட்டேன். உனது படிப்பை தடையில்லாமல் தொடர நான் எதனையும் செய்வேன்" என அன்று அழுதுப் புலம்பினார்.

அதன் பின்னர் அவர் அதற்காக மிகவும் கஷ்ரப்பட்டார் ஒரு கட்டத்தில் நகர சுத்தித்தொழிலையும் கைவிட்டார்.

0 - 0 -0

இன்று ஷோபா தனது வறுமை நிலை காரணமாக கல்வி நிறுத்தப் படும் நிலையானது என்னை பதரச் செய்தது. ஷோபாவின் கல்விச் செலவுக்கு என்னால் முடிந்த ஏற்பாடொன்றை செய்து கொடுத்தேன். தைரியமூட்டினேன். ஆறுதல் சொன்னேன்.

இவ்வாறு பாதியில் கல்வியை கைவிட்டோர் எத்தனையோ பேர். இலவசக் கல்வி, இலவச பாடப் புத்தகம், இலவசச் சீருடை என்பது கூட இந்நிலைமையை தீர்க்கும் என்பது பகல்கனவே. ஓரளவு சரிகட்டும் என்று மட்டும் சொல்லலாம். அதற்குக்கூட புதிய அரசாங்கம் வேட்டு வைக்க தீர்மானித்து விட்டது என்பது வேறுகதை.

ஷோபாவின் பெறுபேறு 3 சீ, 3 எஸ் மட்டுமே. ஆனால் களுத்துறையில் வாழும் அருந்ததியச் சமூகத்தை சேர்ந்த இந்த நகரசுத்தித் தொழிலாளர்களைப் பொருத்தவரை இது தான் இது வரை எடுத்த பெறுபேறுகளிலேயே சிறந்த பெறுபேறு என்பதை நீங்கள் அறிவீர்களா? அந்த குடியிருப்பிலிருந்து முதற்தடவையாக உயர் கல்விக்கு தேர்ச்சி பெற்றவள் ஷோபா. அதுவும் பெண்ணாக இருந்துவிட்டாள். கல்வித்தடைக்கு வேறு காரணங்களே தேவையில்லை என்பதை நாமறிவோம். இந்நிலையில் ஷோபாவின் கல்வி இடையறாது தொடர வாழ்த்துவோம்.

இவர்களின் இந்த நிலைக்கு எவர் பொறுப்பேற்பார்கள். இந்த வாழ்வு அவர்கள் வம்புக்கு அழைத்துக் கொண்ட ஒன்றல்ல. அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று. திட்டமிடு கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒன்று.சிலர் "இதுகள் தலித்துகள் என்று தேவையில்லாத பிரச்சினையை இழுக்கிறானுகள். அது அது அப்படி அப்படியே இல்லாமல் போயிடும் முன்ன மாதிரியா இப்ப சாதி பற்றிய பிரச்சினை இருக்குது " என்று கூறுகின்றார்கள்.

இப்படி சுலபமாக கூறித்தப்புவோர் பலர் இதற்கு என்ன தீர்வு என்பதை சொல்லவே மாட்டார்கள். ஆனால் அவர்கள் அவர்களாகவே இருத்தப் பட்டதற்கு யார் பொறுப்பாளிகள்? ஏனையோர் அனுபவித்த வசதிகள் வாய்ப்புகள் எல்லாமே அவர்களுக்கு கட்டுப்படுத்தட்டிருந்தன. தடைபட்டிருந்தன. அதன் காரணமாகவே அவர்களது வளர்ச்சிகள் அனைத்தும் குன்றின.

இதற்கு இன்று ஒருவரும் பொறுப்பேற்கப்போவதில்லை. "இனிமேல் இந்த பிரச்சினையில்லை" என்று கூறுவது கூட பொறுப்பற்ற சமூகப் பிரச்சினைகளில் அக்கறையற்ற பதில்களாகத்தான் இருக்கும். எனவே இருக்கின்ற சாதியமைப்பை உடைபபது மட்டுமல்லாது சம காலத்தில் அம்மக்களுக்கான விசேட திட்டங்க்ளையும் கவனிப்பையும் செலுத்துவதும் முக்கியமான பணியாகின்றது.

**-அருந்ததியன்**

நேர்காணல்

தொடர்.....

## ''கருத்தியல்களை கல்லெறிந்து....

இயக்கும் பொழுதே திரைக்கதை பற்றி தெரிந்து கொண்டேன்.

***ஐரோப்பிய ஏகாதிபத்தியத்துக்குள் சரணடைந்த இலங்கை சமூக வாழ்வு நிகழ்வுகளை பவதுக்கவில் புனர் நிர்மானம் செய்திருக்கிறீர்கள். நீங்கள் தேவையற்ற காட்சியமைப்புகளை புகுத்தியிருப்பதாக (பேதுரு நோன ஹாமியின் காட்சிகள்) சில விமர்சகர்கள் குறைகூறுவது பற்றி உங்கள் கருத்து யாது?***

அது விமர்சகர்களின் பார்வை. நான் படம் இயக்கி இருக்கிறேன் விமர்சனங்களை செவிமடுக்கிறேன். இவ்விடயங்கள் எனது எதிர் காலப்படைப்புகளுக்கு உதவியாக இருக்கும். அவ்வளவே.

***முதலாளித்துவ சமூக அமைப்பில் திரைப்படைப்பென்பதும் விலை நியமிக்கப்பட்டதொன்று. இது தொடர்பாக நீங்கள் யோசித்தது இல்லையா?***

பிற்பட்ட காலங்களில் நடந்த சம்பவம் இது. திரையரங்குகளில் தலையிட வேண்டியவர் தர்மசிறி பண்டாரநாயக்க மட்டுமல்ல. கலை பரிமாற்றத்தை விட அனுபவம் அவசியம். தற்போதைய தீர்வை விட வரலாற்றுத் தீர்வே முக்கியமானது.

***சர்வதேச திரைப்பட அனுபவங்களை எமது திரைப்படத்துறை பிரயோசனப்படுத்தும் விதத்தில் எங்ஙனம் விளக்கப்படுத்துவீர்கள்?***


வெவ்வேறு நாடுகள் திரைப்படத் துறையில் தசாப்தத்துக்கு தசாப்தம் சிறந்ததாக மாறிக்கொண்டு வருகின்றன. மறுபுறத்தில் தொழில்நுட்பம் உச்சமாக பயன்படுத்தப்படுகிறது. தொழில்நுட்பம் இன்மை தான் பிரச்சினைக்கு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழில் நுட்பத்தை விட காட்சி தொடர்பான குறைபாடுகள் நிலவுகின்றன என்றே கூற வேண்டும்.

***பவதுக்க திரைப்படம் முகம் கொடுக்க வேண்டிய வந்த தடைகள், அநீதிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் யாது?***

இது முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஒரு செயல்பாடு ஒவ்வொரு கோணங்களில் ஒவ்வொரு பக்கத்தைப் பார்க்கும் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் என்பது வர்த்தகர்களின் பொருளாதாரம். எந்த பலம் வாய்ந்தவர்களினாலும் அதன் பிடியில் இருந்து தப்ப முடியாது. உரிமைகள் அற்ற நிலையில் நாம் உள்ளோம் கிடைக்கும் கொஞ்ச அவகாசத்துள் எதையாவது செய்ய வேண்டும். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு புறம் திரைப்படத் துறை கூட்டுத்தாபன இயக்குனராக இருந்து யோசிக்க வேண்டியுள்ளது. எமக்கு தேவை நல்ல பண்பு வயப்பட்ட வளர்ச்சியுற்ற திரைப் படத்துறை.

***நன்றி: ''சித்திஜய'' ஜூலை இதழ்***

## பத்திரிகையாளர்கள் மறைவு



இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை உலகில் மிக நீண்ட காலமாக தனது பங்களிப்பை நல்கி வந்த முதுபெரும் பத்திரிகையாளர் பொன் ராஜகோபால் அவர்கள் கடந்த 25.07.1997 அன்று வெள்ளி அதிகாலை கொழும்பில் உள்ள மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

1960களிலிருந்து இறுதிமூச்சு, அவரது உடலை விட்டுப்பிரியும் வரை முழுக்க முழுக்கப் பத்திரிகைத்துறைக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு பத்திரிகையாளர் ஆவர்.

வீரகேசரி வார வெளியீட்டின் ஆசிரியராக 30 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வந்த பொன் ராஜகோபால் அவர்கள், தினக்குரல் நாளிதழ் தொடங்கப்பட்ட போது அதன் ஸ்தாபக ஆசிரியராகவும் ஆசிரியபீட பணிப்பாளராகவும் கடமையேற்று, இறக்கும் வரை அப்பணியைத் தொடர்ந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 65.

லண்டன் பி.பி.சி. தமிழோசை ''இலங்கை மடல்' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இவர் நடாத்திய அறிவையும் ஆற்றலையும் வளர்க்கத்தூண்டும் ''விவேகச் சக்கரம்'' போன்ற நிகழ்ச்சி என்பன இவரது சிறப்பைக் காட்டும் சில நிகழ்ச்சிகளாகும்.

தனது 30 வருட காலத்திற்கு மேற்பட்ட பத்திரிகைத்துறை வாழ்வில் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்களும் படைப்பாளர்களும் அடையாளம்காணப்படக் காரணமாக இருந்த இந்த மூத்த பத்திரிகையாளரின் மறைவு தமிழ் பத்திரிகைத்துறையைச் சார்ந்த பலருக்கும் ஆழ்ந்த கவலையைத் தருவது.

பழக இனிய சுபாவமும், தீராத ஆஸ்த்துமா நோயாளியாக இருந்த போதும், சுறுசுறுப்பாக இயங்கும் இயல்பும் கொண்ட அவரது மறைவு குறித்து சரிநிகர் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

இறந்த பின்னர் தனது உடலை மருத்துவக் கல்லூரி மாணவர்கட்கு கொடுத்துவிடச் சொன்ன ராஜகோபால் அவர்களின் உயர்ந்த குணாம்சமும், பத்திரிகைத்துறைக்காக தனது இறுதி நாட்கள் வரை காட்டிய ஆர்வமும், என்றென்றும் நினைவு கூரத்தக்கவை.



தமிழ்ப் பெண் பத்திரிகையாளரான மேரி அமரதுங்க அவர்கள் 20.07.1997 ஞாயிறு அன்று கொழும்பில் காலமானார்.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய இவர் இறக்கும் இறுதி நாட்கள் வரை வீரகேசரியில் பணியாற்றினார்.

பெண்களின் பிரச்சினைகள் பற்றி ஆர்வத்துடன் எழுதி வந்த இவர். பல உள்நாட்டு, வெளிநாட்டு மகளிர் அமைப்புக்களிலும் செயலாற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவரது மறைவு குறித்து சரிநிகர் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. அவரது குடும்பத்தினர்க்கு சரிநிகரின் அனுதாபங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சட்ட நடவடிக்கை எடுப்பீர்களா?

ஏறாவூர் பற்றில் மிச்நகர் மாதிரி கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களால் வெள்ள காலத்தில் பாதிக்காதவாறு தாமரைக்கேணி குளத்தில் இருந்து தண்ணீர் வடிந்தோட வடிகால் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது தனி நபர்களால் தடை செய்யப்பட்டு புதிதாக அரிசி ஆலைகள் கட்டப்படுகின்றது. இதனால் வெள்ள காலத்தில் நாங்கள் கடுமையாக பாதிப்படையக்கூடும். ஏற்கெனவே உருவாக்கப்பட்டு தற்போது இயங்கும் அரிசி ஆலை உரிமையாளர் இவ்வடிகால் வடிந்து செல்லும்பாலத்தினை இடைமறித்து கட்டியதால்நாங்கள்முன்பு வெள்ள காலத்தில் பாதிக்கப்பட்டோம். இவ்விடயமாக , ஏற்கெனவே பிரேதச சபைக்கு அறிவித்தும் கூட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஏற்கெனவே அமைக்கப்பட்டு இயங்கும் அரிசி ஆலைகளினால் துர்நாற்றமும், கழிவுத் தண்ணீரினால் உருவாகும் நுளம்புத் தொல்லைகள், காற்றினால் தூசிகள் பரவுதல், மெசின் சத்தம், இரவில் நிம்மதியாக தூங்க முடியவில்லை. இப்படியான தொல்லைகள் அனுபவித்து வரும்வேளையில், தற்போது மீண்டும் புதிதாக மக்கள் குடியிருக்கும் வீட்டுக்கு அருகாமையில் கட்டப்படும்அரிசி ஆலைகளினால் அன்றாடம் பாவிக்கும் தண்ணீர்க் கிணறுகள் பாதிக்கப்பட்டு அசுத்தமாகும். கழிவுத் தண்ணீரினால் நுளம்பு அதிகரித்து பல நோய்கள் ஏற்படும். தூசி பரவுவதால் ஆஸ்த்துமா நோய் ஏற்படும். மெசின் சத்தத்தினால் எங்கள் பிள்ளைகள் இரவில் படிக்க முடியாது. நிம்மதியாக எங்களால் தூங்க முடியாது. நெல் அவிக்க பாவிக்கப்படும் சிலிண்டர்கள் வெடிக்கும் பட்சத்தில் அருகிலுள்ள வீட்டில் வசிப்பவர்களுக்கு உயிர் ஆபத்து நேரிடலாம். துர்நாற்றத்தினால் அருகிலுள்ள பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடராமல் விட்டு விடலாம். இதனால், எங்கள் பிள்ளைகள் பாதிப்படையக் கூடும். எனவே எங்கள் கிராமம் சுகாதாரக் கேடுகளை எதிர்நோக்கக்கூடும். சூழல் மாசடையலாம்.

எனவே ஐயா தாங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு நேரடியாக பார்வையிட்டு எங்களுக்கு நல்லதொரு சூழலை ஏற்படுத்தி சுகாதாரமான முறையில் வாழ்வதற்கு வழியமைப்பதோடு, வெள்ள காலத்தில் இக்கிராமம் பாதிக்காதவாறு வடிகாலைத் திறந்து இவ்வரிசி ஆலைக்கு வழங்கப்படவிருக்கும் அனுமதிப் பத்திரங்களை வழங்காது தடை செய்யுமாறும், உரிய தனி நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*மிச் நகர் தாமரைக்கேணி மக்கள்*

**பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி**

## சிற்றூழியர் நியமனத்தில் முரண்பாடு ஏன்?

வடகிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் தரத்திலான வெற்றிடங்களை நிரப்பு முகமாக, கடந்த 1995 ஜூலையில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

1996 ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களாக தொடர்ச்சியாக நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இந்நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு, '96 மே மாதத்தில் நியமன முன்னோடிக் கடிதத்தை செயலாளர் அனுப்பி, அவர்களது ஆவணங்களின் போட்டோ பிரதிகளை, மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன் பெற்றுக்கொண்டார்.

அரசியல் தலையீடு காரணமாக ஜனாதிபதியால் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த நியமனம் எம்.பி. ஒருவரின் பகீரத பிரயத்தனத்தால் வழங்கப்படுவதற்கான ஜனாதிபதியின் அங்கீகாரம், மாகாண சபைக்கு கிடைத்தது. வாரங்கள் பல கடந்தும் நியமனம் வழங்குவதை மாகாண கல்வியமைச்சு பின்போட்டு வருகின்றது.

ஜனாதிபதி அனுமதி வழங்கிய பின்னரும், மீண்டும் நேர்முகப் பரீட்சையொன்றை நடத்துவதற்கு மாகாண சபை ஒரு தலைப்பட்சமாக முடிவெடுத்திருப்பதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இரண்டு வருடங்களை விழுங்கி விட்ட இந் நியமன விடயம், பெரியதொரு விவகாரமாக மாறிக்கொண்டிருப்பதை (வட கிழக்கு) எம்.பி. கள் கவனிக்காமலா இருக்கிறார்கள்? மீண்டும் நேர்முகப் பரீட்சை நடை பெறுமானால் அதன் முடிவுகள் வெளியாகி நியமனம் வழங்கப்படுவதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் செல்லுமோ யாரறிவார்?

கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி முட்டுக்கட்டை போடுவது போல் இவ்விவகாரம் தொடர்கிறது.

இப்பிரச்சினை நீண்டு கொண்டிருப்பதையும், தேவையற்ற காலதாமதத்தையும் தவிர்த்து, ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் நேர்முகத் தேர்வில் தெரிவான அனைவருக்கும் நியமனங்களை துரிதகெதியில் வழங்க செயலாளர் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

*எம். அனஸ்*
*ஏறாவூர்*

## விரக்தியுறும் இளைஞர்களும் இளைஞர் விவகார அமைச்சும்!

உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையானது 22.02.1996ம்திகிதி மட்டக்களப்பு தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலயத்தில் மட்டக்களப்பு உதவி தேர்தல் ஆணையாளர் எல். சண்முகம், உதவிப் பணிப்பாளர்களான பொன் செல்வநாயகம் ரி. பேரானந்தம் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு சுமார் 150க்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர், இந்த நேர்முகப் பரீட்சையின் முடிவில் தகுதியின் அடிப்படையில் 25 பேர் தெரிவு செய்யப்பட்டு இவர்களின் பெயர் பட்டியல் மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள், இளைஞர் கழக மட்டத்திலும், பிரதேச இளைஞர் சம்மேளன மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், இளைஞர் தலைவர்களாகவும், செயலாளர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் விளங்கிக் கொண்டிருப்பவர்கள்.

தலைமையக காரியாலயத்துக்கு பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்டபின் தகுதியான இளைஞர்களுக்கு பேரிடி விழுந்தது. இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் பல புது முகங்கள் காணப்பட்டனர். இவர்கள் முறையே கட்சி அமைப்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்றோரின் சிபாரிசு மூலம் வந்தவர்கள். மேற்படி உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவுக்காக நடைபெற்ற இரண்டாவது நேர்முகப் பரீட்சையானது உலகிலேயே மிகவும் புதுமையான முறையில் நடைபெற்றது. அதாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மூன்று பேருக்கு ஒரே தடவையில் ஒரேயொருவர் நேர்முகப்பரீட்சை நடாத்தியிருக்கின்றார். இந்த விடயம் தொடர்பாக உள்ளூர் பத்திரிகையிலும் செய்தி வெளியாகியிருந்தது.

மேற்படி இரண்டாவது நேர்முகப் பரீட்சை நடாத்திய அமைப்பாளர் சமுர்த்தி முகாமையாளர் நியமனம் வழங்குவதில் செய்த ஊழல் நாடே அறிந்த விடயமாகும். சமுர்த்தி முகாமையாளருக்கு 30 ஆயிரம் இளைஞர்சேவை நியமனத்துக்கு 50 ஆயிரம் என்பதே மட்டக்களப்பு இளைஞர்கள் வாயில் தற்போது அடிபடும் கதையாகும்.

பட்டதாரி பயிலுனர்களை சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்காமல் வெளியிலிருந்த 21 பேருக்கு நியமனம் வழங்கிய பெருமையும் இந்த அமைப்பாளரையே சாரும். இவரது தந்திரம் இதுதான், நியமனம்தேவையானவர்யாராவது பாராளுமன்ற உறுப்பினரால் சிபாரிசு செய்யப்பட்டால் போதும் மிகுதியை தான் கவனித்துக் கொள்வேன் என்பதாகும். எல்லா விடயங்களும் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அமைப்பாளரின் தந்திரம் மட்டும் தெரியாமல் போய்விட்டது. எனினும் தங்கள் சிபாரிசு மூலமே நியமனம் கிடைத்தது என்று நினைத்து ஒரு புறம் பெருமையும் மறுபுறம் இந்த அநியாயம் தொடர்பாக வாயே திறக்க முடியாமலும் உள்ளனர்.

இந்த அமைப்பாளரைப்போல் இன்னும் சில அமைப்பாளர்களும் வருமானம் தேடியுள்ளனர். முதலாவது நேர்முகப்பரீட்சையில் முதலாவது இடத்தில் இருந்தவர் இரண்டாவது நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளார். ஆனால் முதலாவது நேர்முகத் தேர்வுக்கு சமூகம் கொடுக்காத சிலர் நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முதலாவது நேர்முகப் பரீட்சையில் முன்னணியில் இருந்த தகுதியான சிலர் பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து கொடுக்க வேண்டியதைக் கொடுத்து தமது நியமனத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சியை 23.06.1997ம் திகதி தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆரம்பித்துள்ளது. இந்த நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு இளைஞர் நடவடிக்கையில் எதுவித ஈடுபாடும் கிடையாது. கல்விப்பெறுபேறு கூட ஒழுங்காக இல்லை. (2வது நேர்முகப் பரீட்சையில் பரீட்சைப் பெறுபேறு கூட கவனிக்கப்படவில்லை.) இவர்கள் இளைஞர் கழகங்களில் கூட அங்கத்தவர்களாக இருந்ததில்லை.

இந்த நியமனங்கள் காரணமாக இனிமேல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இளைஞர் சேவை நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையை அடையும், இளைஞர் கழகங்கள் இயங்காமல் இருக்கும். இளைஞர்கள் விரக்தியடைவார்கள். இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரின் அனுமதியுடனே தான் இந்த நியமனங்களை வழங்கப்படுகின்றது. இளைஞர் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட அமைச்சே ஊழல் செய்கிறது. எனின் என்ன செய்வது. வாழ்க இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு. வளர்க இளைஞர் விரக்தி!

*பாதிக்கப்பட்ட இளைஞர்கள்*

## காணாமல் போகும் கடிதங்கள்

வட்டவளையில் உள்ள தோட்டப்பகுதி பாடசாலையொன்றில் கடமைபுரியும் ஆசிரியர் ஒருவருக்கு மார்ச் மாதம் 13ம்திகதி போஸ்ட் செய்யப்பட்ட கடிதம் இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை. முகவரி மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தும் அதே இடத்தில் உள்ள பாடசாலைக்கு கடிதம் செல்ல இவ்வளவு சுணக்கம் ஏன்?

இவ்வாறே கண்டியில் இருந்து ஒரு பெண், தனது சகோதரனுக்கு வைத்தியசாலையில் இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டு, எல்லாம் தயாரான நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கூட்டி வரும்படி போடப்பட்ட கடிதமும் இதுவரை அந்த சகோதரி வீடு வந்து சேர்ந்த பின்பும் கிடைக்கப் பெறவில்லை.

நண்பி ஒருவரால் வேறொரு நண்பிக்கு வகுப்புகள் சம்பந்தமாக அனுப்பப்பட்ட கடிதமும் இவ்வாறு தவறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே தந்தை ஒருவரால் தனது குடும்பத்தவருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றும் இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இவ்வாறு பல கடிதங்கள் ஏன் கொடுபடாமல் மறைக்கப்படுகின்றன என்பது புரியவில்லை. அல்லது இந்தக் கடிதங்கள் யாவும் எங்கே சென்றடைகின்றன என்பதும் தெரியவில்லை. ஏதும் பழிவாங்கல் நடவடிக்கையா என்பதும் புரியவில்லை.

*அலிஷா*
*வட்டவளை*

## "செருப்பாலடிபட்டேன்"!

நான் ஓர் ஆசிரியன். இருந்தும் எனது உள்ளத்தை - மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்கிறேன்.

''ஆயிஷா'' சிறுகதையை படித்ததும் செருப்பாலடிபட்டது போலிருந்தது! (இதழ் 125)

கணையாழியில் எப்போது பிரசுரிக்கப்பட்டது என அறியேன்., ஆயினும் தற்போது பெரும்பாலான ஆசிரியர்களும் போதனைகளும் எப்படியிருக்கின்றன என்பதை இதை விட துல்லியமாக படம் பிடிப்பது அரிது.

''எல்லா ஆசிரியர்களுமே ஏதாவது ஒருவகையில் மாணவரின் அறிவை அவமானப் படுத்துகின்றார்கள்'' என்ற வரியை என்னால் இன்னும் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது. கதையல்ல அது - நிஜம்! படித்து முடிந்ததும் என் வீட்டிலும் ஒரு ஆயிஷா இருப்பதை முதன் முதலாக கண்டேன்! குற்றவுணர்வை மறைக்க முடியவில்லை அல்லது விரும்பவில்லை.

*மொகமட் ராபி*
*திருமலை*

## யாழ்ப்பாண "விசிட்டர்ஸ்"!

யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டு பிரதிநிதிகள் அதிகாரிகள், தூதரக மட்டத்தினர் என்று எத்தனையோ பேர் வருகிறார்கள். யாழ். அரசாங்க அதிபரையும் சில பிரமுகர்களையும் சந்தித்துவிட்டு போய்விடுகின்றனர்.

கடந்த ஒரு வருடமாக மக்கள் மீளக்குடியேறிய பின்னர் இவர்கள் என்னத்தைச் செய்கிறார்கள். வருவார்கள், அரச அதிபரின் பிரமுகர் விடுதியில் தங்குவார்கள், சாப்பிடுவார்கள் அவ்வளவுதான். நாடு சீரான பின்னரே எதனையும் செய்யலாம் என ஒரு பிரதிநிதி சொன்னாராம்.

இதேபோல் சில தொண்டர் நிறுவனங்களும் எந்த செயற்திட்டங்களையும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. என்னத்தை எப்படிச் செய்வது. சில இடங்கள் பாதுகாப்பு இல்லை. அவ்விடங்களுக்கு வாகனங்களில் போவது பிரச்சினை. மோதல்கள் நடைபெறும் இடங்கள். அரசுக்கும் தொண்டர் நிறுவனங்களும் எதனையும் செய்யக்கூடாது என்ற விருப்பம். புலிகளுக்கும் அதே விருப்பம்தான்.

*மரிவேந்தன்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வவுனியா: கோழிக்கூட்டுக்குள் எத்தனை காலம்?

வவுனியா ''கோழிக்கூட்டு முகாமின்'' (வவுனியா - குட்செட் வீதியில் உள்ள தற்காலிக முகாம்) பெயர் என்னவோ தற்காலிக முகாம் என்றுதான் இருக்கின்றது. ஆயினும் அங்கே தங்க வைக்கப் பட்டுள்ளவர்கள் தற்காலிகமாகத் தான் தங்கியிருக்கின்றார்களா என்பதுதான் இப்போது பிரச்சினை யாக எழுந்துள்ளது.

வவுனியா செயலகப் புள்ளி விபரங்களின் படி, யாழ் குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் தஞ்சமடைந்திருந்து விட்டு வவுனியாவிற்குள் வந்தவர்களில் 11 ஆயிரத்து 800 பேர், வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 11 முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த முகாம்களில் ஒன்றாகிய கோழிக்கூட்டு முகாமில் தற்போது ஐந்நூறிற்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

மன்னாரிலிருந்தும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியிலிருந்தும் (இப்போது மன்னார் வழியாக) கொழும்பிற்கோ அல்லது நாட்டின் தென்பகுதிகளுக்கோ செல்வதற்காக வருபவர்களும் ஏனைய பத்து முகாம்களில் உள்ளவர்கள் நாட்டின் தென் பகுதிகளுக்காயினும் சரி அல்லது யாழ்ப்பாணத்திற்கோ அல்லது வன்னிப்பகுதிக்கேனும் சரி செல்வதற்காக அனுமதி பெற்றவர்கள் யாவரும் இந்தக் கோழிக்கூட்டு முகாமுக்கு கொண்டு வரப்பட்டு இறுதிப்பதிவுகளைச் செய்ததன் பின்பே செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தின் பிடிக்குள் வந்துள்ள நெடுங்கேணி ஓமந்தை பிரதேசங்களில் கரையோர கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து சென்று பின்னர் தமது வீடுகளைப் பார்ப்பதற்காகவும் அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்வதற்காகவும் வந்தவர்கள் நூற்றுக் கணக்கானோர் இராணுவத்தின் பிடியில் சிக்க நேர்ந்துள்ளது.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர்களும் கோழிக்கூட்டு முகாமிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இது மட்டுமல்லாமல் எடிபல இராணுவ நடவடிக்கை காரணமாக வவுனியா - மன்னார் வீதிப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து சென்று தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முயன்ற போது இராணுவத்திடம் பிடிப்பட்டவர்களும் மடுப்பகுதியிலிருந்து புலிகளுக்குத் தெரியாமல் வெள்ளைக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு இராணுவ முன்னணி காவலரண் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தின் உள்ளே வருவதற்காக இராணுவ வீரர்களிடம் வந்து சேர்ந்தவர்களும் கூட இவ்வாறே கோழிக்கூட்டு முகாமிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

நெடுங்கேணிப் பகுதியை இராணுவம் கைப்பற்றிய போது அங்குள்ள கிராமப்பகுதிகளுக்குள்ளே இருந்தவர்களும், இராணுவம் இருந்தது தெரியாமல் வீடுகளைப் பார்க்கச் சென்றபோது பிடிபட்டவர்களுமாக சுமார் 425 பேர் கோழிக்கூட்டு முகாமில் இருந்து பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரி முகாம் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தமது சொந்த கிராமங்களுக்கு இப்போது திரும்பிச் செல்ல விரும்பாத காரணத்தினால் இவர்கள் பூந்தோட்ட முகாமில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப் படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

இதே போல ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் நெடுங்கேணி ஊஞ்சல்கட்டில் பகுதிகளிலும் அதன் பின்னர் நொச்சிக்குளம் பகுதியிலும் இராணுவத்தால் பிடித்து வரப்பட்ட சுமார் நாற்பது, ஐம்பது பேர் இன்னும் கோழிக்கூட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அரச அலுவலகப்பதிவுகளில் நலன் புரி நிலையமாகவே கோழிக்கூட்டு முகாம் குறிக்கப்பட்ட போதிலும் இது ஒரு தடைமுகாமாகவும் செயற்பட்டு வருகிறது.

இடம் பெயர்ந்து வந்து ஏனைய முகாம்களில் தங்கி உள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் முகாம்களை விட்டு வெளியேறிச் செல்வதற்கு விண்ணப்பித்தால் அவர்கள் மீதான வடிகட்டல் விசாரணையும் இப்போது இங்கே தான் நடைபெறுகிறது. இந்த விசாரணைகள் முன்னர் தாண்டிக்குளம் இராணுவ தடை முகாமில் நடைபெற்று வந்தது.

இந்த வடிகட்டல் விசாரணையானது ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை படைவீரர்களால் கைது செய்யப் பட்டவர்கள் மீது நடைபெறுகிறது.

இராணுவம் கைது செய்யும் போது ''உங்கள் மீது பிரச்சினை ஒன்றும் இல்லை இங்கேயே உங்களை நாங்கள் விடுதலை செய்தால் எல்.ரி.ரி.ஈ. உங்களைச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள். பின்னர் அந்தப் பழியை இராணுவத்தின் மீதுதான் சுமத்துவார்கள். அதனால் உங்களை நாங்கள் வவுனியாவுக்கு அனுப்பி அங்கே அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்து செஞ்சிலுவைச் சங்க மூலமாக உங்கள் இடங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்'' என்று இராணுவ அதிகாரிகளினால் உறுதியளிக்கப் பட்டதாம். ஆயினும் இராணுவத் தரப்பில் இந்த உறுதி மொழியைக் காப்பாற்றவோ, அல்லது நிறைவேற்றவோ அக்கறை காட்டப் படுவதில்லை என்று பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் தெரிவிக்கின்றார்கள்.

''நாங்கள் குழந்தை குட்டிகளைப் பிரிந்து வந்து நிற்கின்றோம். இடம் பெயர்ந்து போய் மரங்களுக்குக் கீழேயும் வீதியோரங்களிலேயும் தங்கியிருக்கின்ற அவர்கள் எங்களுக்கு என்ன நடந்தது, எங்கே இருக்கிறோம் எனத்தெரியாமல் மனம் பேதலித்திருப்பார்கள்.''

''வீட்டுத்தலைவர்களாகிய நாங்கள் ஆம்பிளைகள் இருந்தால் தான் சாப்பாட்டுக்கு வழி தேடவும், குடிப்பதற்கு தேவையான தண்ணீரைத் தூர இடங்களில் இருந்து கொண்டு வரவும் முடியும். அது மட்டுமல்லாமல் ஆமி வருகுது என்றாலும் சரி, ஷெல்லடிக்கிறார்கள், ஹெலியும் குண்டு போடுது என்றாலும் சரி குழந்தை குட்டிகளையும் வயதானவர்களையும் இழுத்துக் கொண்டு பாதுகாப்பான இடம் தேடி ஓட முடியும்.

நாங்கள் இல்லாததால் எங்கள் குடும்பங்களுக்கு என்ன நேர்ந்தது, எப்படி இருக்கிறார்கள் என்று ஒன்றும் தெரியாமல் கவலையாக இருக்கிறது'' என்று பலவாறாக அவர்கள் தமது மனக்குமுறல்களைத் தெரிவிக்கின்றார்கள்.

விசாரணை நடைமுறைகள் யாவும் முடிவுற்ற போதிலும் இன்னும் விடுதலை செய்வதற்குரிய அனுமதி இராணுவ அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லை என சிவில் அதிகாரிகள் தங்களிடம் தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

எங்களுக்கு என்ன நடக்கப் போகின்றது, எவ்வளவு காலத்திற்கு எங்களை இவ்வாறு இரண்டும் கெட்டான் நிலையில் வைத்திருக்கப் போகின்றார்கள் என்பது போன்ற வினாக்களுக்கு விடை தெரியாத நிலையில் இவர்கள் கோழிக்கூட்டு முகாமில் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளையில் இவர்களைப் போலவே வைத்திய தேவைகளுக்காகச் செல்ல முடியாமலும் குடும்பத்தினரைப் பிரிந்த நிலையிலும் மடுப்பகுதியில் இருந்து இங்கே தங்கியுள்ள தாய்மாரும் முதியவர்களும் குடும்பத் தலைவர்களும் கஷ்டமடைந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட தாய் ஒருவர் போலியோ நோயினால் பாதிக்கப் பட்ட தனது 14 வயது மதிக்கத்தக்க மகனுடன் இங்கே கொண்டு வந்து தங்க வைக்கப்பட்டுள்ளார். இவர் தனது மகனுக்கு சுயமாக வைத்தியம் பார்ப்பதற்காக வசதிகள் மிகுந்த கொழும்பு வைத்தியசாலைகளுக்கு செல்வதற்குரிய அனுமதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றார்.

நோயுற்ற நிலையிலும் தனது மகனை வைத்தியம் பார்க்கக் கூட்டிச் செல்ல அனுமதிக்கிறார்கள் இல்லையே என்பது இந்தத் தயாரின் துயராக உள்ளது.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ கட்டுப்பாட்டினுள் வந்ததன் காரணமாக தன்னையும் தனது பிள்ளை ஒருவரையும் இந்த முகாமில் இருந்து உடனடியாக வெளியில் செல்ல அனுமதிக்க முடியாது என்று தமக்கு பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்துள்ளதாக இன்னுமொரு குடும்பப் பெண் கூறினார்.

தனது விண்ணப்பத்தை பரிசீலனை செய்த வவுனியா கண்டி வீதி பொலிஸ் அலுவலகத்தில் உள்ள உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தன்னை இன்னும் ஒரு மாத காலத்திற்கு இங்கே தங்கியிருக்க வேண்டும் என பணித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவிடுவது போல இன்னும் ஒரு மாத காலம் முகாமில் தங்கியிருக்க வேண்டும் என்று அந்தப் பொலிஸ் அதிகாரி தடை உத்தரவு போட்டிருப்பதாகவே அந்தக் குடும்பப் பெண் கருதுகிறார். தனது கணவரும் ஒரு வயது வந்த மகளும் மடுவில் இருக்க தாங்கள் இருவரும் இங்கே சிறைப்பட்டுள்ளதாகவே அவர் கூறுகின்றார்.

இந்தக் கோழிக்கூட்டுச்சிறை வாழ்க்கை எத்தனை நாட்களுக்கு தொடரப்போகிறது.

அதிகாரிகளுக்கோ அல்லது தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கோ எவருக்குமே தெரியாது.

**தங்கம்**


## சுதந்திர இலக்கிய விழா 1997

விபவி ஆறாவது சுதந்திர இலக்கிய விழாவையொட்டி ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கான விருது வழங்கல்.
விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

**1 01. 01. 1996இல் இருந்து 31. 12. 1996 வரையான காலப்பகுதியில் கவிதை, சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்புஇலக்கியம் ஆகிய துறைகளில் வெளியாகிய சிறந்த நூல்களுக்கான விருது வழங்கல்**

* படைப்பாளிகள் இலங்கையராக இருத்தல் வேண்டும்.
* வெளிநாட்டில் வதியும் படைப்பாளிகளின் நூல்களும், வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட நூல்களும் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.
* அமைப்புக்குழுவே நூல்களை சேகரித்து மதிப்பீடு செய்யும். இருப்பினும் தவறுகளை தவிர்க்கும் முகமாக எழுத்தாளர்கள் தமது நூல்களைப்பற்றிய விபரங்களைத் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

**2 புதிய எழுத்தாளர்களுக்கான விருது வழங்கல்**

சிறுகதை, கவிதைத்துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி ஒன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்கல்

**போட்டி முடிவுத் திகதி 15. 09. 1997**

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை (ரூ. 2.50) ஒட்டப்பட்ட, கடித உறையொன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அமைப்புக்குழு.**
**புதிய எழுத்தாளர் போட்டி**
**சுதந்திர இலக்கிய விழா - 1997**
**51/7, இராஜாஹேவாவித்தாரண மாவத்தை,**
**இராஜகிரிய வீதி, இராஜகிரிய**
**தொலைபேசி - 874996**


## வினாத்தாளில் விஷமம்!

ஒட்டமாவடி கோரளைப்பற்று வடக்கு மேற்கு பிரதேசங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் இம்முறை இடம்பெற்ற அரையாண்டுப் பரீட்சைகளின் இரண்டாம் ஆண்டு தமிழ் வினாத்தாளில் சில விஷமத்தனங்கள் இடம்பெற்றுள்ளன.

"புத்தகம்" என்ற சொல்லை குழப்பி தந்துவிட்டு அதை சரியாக எழுதுமாறு கேட்கப்பட்டுள்ளனர் இரண்டாம் ஆண்டு மாணவர்கள். கூடவே ஒரு புத்தகத்தின் படமும் தரப்பட்டுள்ளது. அப்புத்தக அட்டையில் "தமிழா, நீ பேசுவது தமிழா?", "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தச் செயல், புலிகளின் கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதாலும், இரண்டாம் ஆண்டுப் பிள்ளைகளின் பரீட்சைத்தாளில் இடம் பெற்றிருப்பதாலும் பலரைக் கோபத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இவ்விடயம் பாதுகாப்புத் தரப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டதால், அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு பலரைக் கைது செய்திருக்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் கறுவாக்கேணி பாடசாலை அதிபர் தவராஜாவும், கோட்டக்கல்வி அதிகாரி நாகேந்திரமும் அடங்குவர்.

இவர்கள் தவிர வேறுபலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்குறித்த இருவரும் இதில் தொடர்பற்றவர்கள் என்ற போதும் பரீட்சைகளுக்குப் பொறுப்பானவர்கள் என்ற ரீதியில் கைதாகியிருக்கிறார்கள்.

**-ஜின்னா-**

## பறிபோன...

மொகமட் சாலிகு ரஜீஸ் (விருப்பு வாக்குகள் 4819) என்பவரும் இருக்கிறார்கள்.

ஜனாப் மஹ்ரூப்புக்குக் கிடைத்த வாக்குகளில் பெருவாரியானவை அவரது சொந்தச் செல்வாக்கில் கிடைத்தவையே. இவற்றுள் முஸ்லிம் மக்களின் வாக்குகள் பெருவாரியானவை. இந்த நிலையில் மஹ்ரூப் மறைவினால் இரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் (மற்றவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மொகமட் நஜீப்) ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும் (இவரும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்) பிரதிநிதித்துவப் படுத்திய திருகோணமலை மாவட்டம் இரண்டு சிங்கள பா.உ.க்களையும் ஒரு முஸ்லிம், ஒரு தமிழ் பா.உக்களையும் கொண்ட மாவட்டமாக மாற்றமடைய உள்ளது.

சட்டப்படி ஐ.தே.க நடந்து ஆரிய பாலாவை மஹ்ரூப்இன் இடத்துக்கு நியமிக்குமா அல்லது மனச்சாட்சிப்படி நடந்து முஸ்லிம் மக்களின் பங்களிப்புக்கு மதிப்புக் கொடுத்து காத்திருப்போர் பட்டியலில் மூன்றாவதாக உள்ள சாலிகு ரஜீஸை நியமிக்குமா என்பது கவனித்துப் பார்க்கத்தக்க பிரச்சினை

ஆரியபாலா பா.உவாக வரும் பட்சத்தில் சிங்கள மக்களின் மேலாதிக்கம் திருகோணமலை மாவட்டத்தில் மேலும் பலமடையும் அதேவேளையில் முஸ்லிம்கள் நலன் அதல பாதாளத்துக்குத் தள்ளப்பட இடமுண்டு. கட்சிப் பா.உக்களிடம் இனப்பார்வை கிடையாது என்பதெல்லாம் சுத்த அபத்தம்.

பாராளுமன்ற உறுப்பினர்களே இல்லாமல் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். பா.உக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சீருஞ்சிறப்புமாக வாழக்கூடியவர்கள் சிங்கள மக்கள். முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பா.உவின் குறைவு கூட பரிதாபகரமானதுதான். அரசுடன் எத்தனை எம்.பிக்கள் ஒட்டிக் கொண்டிருந்தாலும் சிறுபான்மையின் நிலை மோசமானது தான் என்பது இலங்கை அரசியல் நடைமுறை.

இந்தக் கொலைகளால் திருகோணமலை மாவட்டமே சோகத்தில் மூழ்கிப் போயுள்ளது. எப்படிப் பார்த்தாலும் இழக்கப்பட்டவை சிறுபான்மை இனங்களின் வளங்களே.

விசாரணைகளுக்கு முன்கூட்டியே விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டி விடுவது அரசுக்கு இலகுவான காரியமாக இருக்கலாம். ஆனால் இவ்வாறு கூறுவதன் மூலம் அரசு மெல்ல மெல்ல திருகோணமலையிலும் தனது பிடியை இழந்து வருவதை ஒப்புக் கொள்கிறது எனக் கணித்தறிவது சாதாரண மகனுக்குக் கூட கஷ்டமான காரியமல்ல என்பது வெளிப்படை.

**விவேகி**

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2, அலோ சாலை, கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 334, காலி வீதி, இரத்மலானை. 970729

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்